# சங்கல்பம்

# (எண்ணங்கள்)

பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | முழு கல்பமும் நமது எண்ணங்களாலேயே இயங்குகிறது. | 3 |
| 2 | மனிதகுல நன்மைக்கு உங்களுடைய உதவி | 3 |
| 3 | கர்மத்தின் விதி | 4 |
| 4 | எண்ணங்கள் செயலுக்கு ஆதாரம் | 4 |
| 5 | எண்ணங்களின் சக்தி | 5 |
| 6 | சிவன் நினைவில் மூழ்கு | 6 |
| 7 | எண்ணம் என்றால் என்ன? | 9 |
| 8 | எண்ணங்களை மாற்றுவதற்கான விதி | 23 |
| 9 | வீணானவை  நீக்க புத்தியை சுத்தமாக்குங்கள் | 49 |

**முழு கல்பமும் நமது எண்ணங்களாலேயே இயங்குகிறது.**

எண்ணங்களை ஏதோ சாதாரண விசயமாக நினைக்க வேண்டாம். என்னிடம் எண்ணம் எழுந்தது, அதை அடக்கி விட்டேன், எண்ணம் வந்தது அதை சொல்லி விட்டேன், எண்ணம் வந்தது அதை செயலில் கொண்டு வந்து எவருக்கோ நட்டத்தை ஏற்படுத்திவிட்டேன், எவருக்கோ துக்கத்தை கொடுத்து விட்டேன் என நினைக்கிறீர்கள். எண்ணங்களைக் கொண்டு எந்த காரியத்தை நாம் செய்தாலும் அதில் நம்முடைய சாதாரண, உலகீய, விகாரங்கள் கலந்த எண்ணங்கள் நிறைந்திருக்கிறது. முழு நாளிலும் உட்காரும்போதும் எழுந்திருக்கும் போதும் நடக்கும்போதும் சுற்றும்போதும் நாம் எவ்வளவு எண்ணங்களை தோற்றுவிக்கிறோம். நமது செயல்பாடுகள் எல்லாம் எண்ணங்களையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. முழு கல்பமும் நமது எண்ணங்களாலேயே நடைபெறுகிறது. கல்பமும் எண்ணமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. கல்பம் என்றால் என்ன? கல்பத்தை ஏன் கல்பம் என்று சொல்கிறோம்? 5000 ஆண்டுகள் வரை பலவிதமான எண்ணங்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. அதன்பிறகு மீண்டும் அப்படியே ஓடுகிறது. எதுவரை பலவித எண்ணங்கள் தொடர்ந்து ஓடுகிறதோ அதன் கால அளவு 5000 ஆண்டுகள். அதற்குப் பிறகும் ஓடுகிறது எனினும் அது மீண்டும் ஓடுகிறது. அடுத்த கல்பம் ஆரம்பமாகிறது அடுத்த சக்கரம் சுழலத் துவங்குகிறது. எண்ணங்களால் நமது செயலும் நமது பாக்கியமும் உருவாகிறது, எண்ணத்தாலேயே நாம் உயர்ந்த நிலையை அடைகிறோம். இந்த ஏணியில் ஏறுவதும் இறங்குவதும் எண்ணங்களாலேயே நடைபெறுகிறது. எனவே எண்ணங்களுக்கு இவ்வளவு மதிப்பளிக்கிறீர்களா? அல்லது அதை அப்படியே செலவழித்து விடுகிறீர்களா?

**மனிதகுல நன்மைக்கு உங்களுடைய உதவி எது?**

செயல்களால் நன்மை விளைகிறது. கர்மமும் சமஸ்காரமும் எண்ணங்களோடு சம்பந்த ப்பட்டிருக்கிறது. சமஸ்காரங்கள் என்பது மறைந்திருக்கும் எண்ணங்கள். சுக–துக்கத்தின் சம்பந்தம் செயலோடு தொடர்புடையது. சிந்தனைகள் அல்லது எண்ணங்களைக் குறித்து புரிந்து கொள்வது அவசியமானது. எண்ணங்களில் மூன்று விசயங்கள் அடங்கி இருக்கிறது

1. ஆசைகள்,
2. நினைவுகள்: நினைவுகள் பொருத்தமாகவோ, பொருத்தமற்றதாகவோ, தேவையானதாகவோ தேவையற்றதாகவோ, இகத்தை பற்றியோ பரத்தைபற்றியோ இருக்கிறது.
3. உணர்வுகள்: அன்பு வடிவாக அல்லது வெறுப்பாக இருக்கிறது.

இப்படி பலவிதமான எண்ணங்கள் இருக்கின்றன, எனினும் இங்கு நமது சம்பந்தம் மேற்சொன்ன மூன்றோடு இருக்கிறது. தான் சரியாவதன் மூலமாக அதாவது தான் மாறுவதன் மூலமாக உலக மாற்றம் வரும். எனவே தனது எண்ணங்களை முதலில் மாற்றுங்கள் அதாவது சரி செய்யுங்கள். எனவே 'சொல்வதைக் காட்டிலும் செய்து காண்பிப்பது சிறந்தது' என்று சொல்லப்படுகிறது. யாருடைய வாழ்வு திறந்த புத்தகத்தைப்போல இருக்கிறதோ, அவர்கள் அதிகம் பேசுவதில்லை, அவரது வாழ்வே பிறருக்கு உகந்த எடுத்துக்காட்டாக அமைந்து விடுகிறது.

நமக்கு எவ்வளவு நன்மை உண்டாகிறதோ அவ்வளவு உலகிற்கு நன்மை உண்டாகும் மேலும் உலகிற்கு எவ்வளவு நன்மை உண்டாகிறதோ அவ்வளவு நமக்கும் உண்டாகும். எனவே யாரோ ஒருவர் 'எண்ணங்கள் மலையை அசைக்க வல்லது' என சொல்லியிருக்கிறார். உலகில் எண்ணமே அனைத்தையும்விட வலிமையானது. உதாரணத்திற்கு ஒருவர் அணு குண்டை தயாரித்து இருக்கிறார், ஒருவர் தாஜ்மகாலை கட்டி இருக்கிறார் என்றால் முதலில் அதைக் குறித்து எண்ணி இருப்பார் அல்லவா! எனினும் நாம் உலக நன்மைக்கு உதவி செய்பவராக இருக்கும்போது நாம் உலகத்திற்கு முன்னுதாரணமாக இருப்போம். அதற்காக சிறந்த இலட்சிய எண்ணங்களை எண்ணுங்கள். எப்போது நாம் அந்த நன்மை செய்யும் நிராகாரி பரமாத்மாவோடு சம்பந்தம் வைக்கிறோமோ அப்போதே நம்முடைய எண்ணங்களில் மாற்றம் ஏற்படும். பிறகு உலகப் பொருட்கள் மற்றும் மனிதர்களுக்குப் பின்னால் அலைய மாட்டோம். பரமாத்மாவின் நினைவில் நிர்ணயம் செய்வதும் சரியாக இருக்கும்

ஏனெனில் அவர் புத்திவானுக்கெல்லாம் புத்திவானாக இருக்கிறார். நமது அன்பு புனிதமான அன்பாக மாறிவிடும் ஏனெனில் அவர் பரம பவித்திரமாக இருக்கிறார். எனவே பரமாத்மாவை கல்யாணகாரி என்று சொல்கிறார்கள் ஏனெனில் அவர் நமது எண்ணங்களை மாற்றி அமைக்கிறார். இப்படியாக, நாம் நமக்கும் நன்மை செய்து கொள்கிறோம், பிறருக்கும் நன்மை செய்கிறோம். இதுதான் சகயோகம் (உதவி). சகயோகம் என்ற வார்த்தையே யோகம் என்பதில் இருந்து வந்தது. எதுவரை நாம் யோகத்தில் இல்லையோ அதுவரை நாம் பிறருக்கு சகயோகம் செய்ய முடியாது. இன்று உலகத்தில் எல்லோரும் தமக்கு உதவி செய்து கொள்கிறார்கள். எனினும் யாரும் பரமாத்மாவோடு யோகம் வைக்கவில்லை. அதாவது உலகிற்கு நன்மை செய்யவில்லை. தந்தையான ஈஸ்வரரோடு வைக்கும் யோகமே உலக நன்மைக்காக நமது உண்மையான சகயோகம் அதாவது யோகதானமாக இருக்கிறது.

### கர்மத்தின் விதி

செயலால் மனிதனுக்கு பலன் கிடைக்கிறது என்பதை ஞானத்திற்கு வருமுன்பே நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். சுகமும் துக்கமும் செய்யும் செயலுக்குத் தக்கபடி கிடைக்கிறது. எப்படி செய்கிறார்களோ, அப்படியே நிறைக்கிறார்கள், அதற்குத் தக்கபடியே பெறுகிறார்கள். இதுவே கர்ம விதி. கர்ம சித்தாந்தம் பாரதத்தில் பிரசித்தி பெற்றது. நான் 1971 ஆம் ஆண்டு முதல் முறையாக ஆஸ்திரேலியா சென்றிருந்தேன், அங்கே சிட்னியில் ஒரு பல்கலைக்கழகத்தில் எனது சொற்பொழிவு இருந்தது. தத்துவவியலின் மாணவர்களும் பேராசிரியர்களும் இருந்தனர். அப்போது அந்த துறையின் தலைவராக இருந்தவர் சபைக்கு என்னை அறிமுகப் படுத்தியபோது “பாரதம் உலகிற்கு கர்ம சித்தாந்தத்தை தந்திருக்கிறது, பாரதத்தின் இந்த சித்தாந்தம் உலகப் புகழ் வாய்ந்தது என்பது உங்களுக்குத் தெரியும், அதை கேட்டும் இருக்கிறீர்கள் இவர் அந்த பாரதத்தில் இருந்து வந்திருக்கிறார்” என்றார். கர்ம சித்தாந்தம் மற்றும் மறுபிறவி பற்றிய ஞானம் உலக தத்துவங்களுக்கு பாரதம் அளித்த கொடையாகக் கருதப்படுகிறது என்பதை உலகிலுள்ளோர் அறிந்திருக்கிறார்கள். ஆனால் பாபா நமக்கு என்ன சொல்லி இருக்கிறார்? குழந்தைகளே என்ன நினைக்கிறீர்களோ அதுவே செயலுக்கு விதையாக இருக்கிறது. பலன் எண்ணங்களில் இருந்து கிடைக்கிறது. எப்படி நினைக்கிறீர்களோ அப்படியே செயல் இருக்கும், பின்னர் எப்படி செயல் இருக்கிறதோ அதற்குத் தக்கபடியே பலனும் கிடைக்கும். எப்படி செயல் இருக்கிறதோ அப்படியே பலன் கிடைக்கும் என்பது சரிதான் எனினும் செயலும் எப்படி செய்யப்படுகிறது? அது உங்கள் எண்ணங்களைப் பொருத்தது. எனவே செயலின் மீது கவனம் கொடுங்கள், எண்ணங்களின்மீது கவனம் கொடுங்கள் என்று பாபா சொல்கிறார்.

எதுவரை உங்கள் எண்ணங்கள் சரியாக இல்லையோ அதுவரை உங்கள் செயல்கள் சரியாக இருக்க முடியாது. செயலை நன்றாகச் செய்ய வேண்டும் என்று முதலில் நீங்கள் நினைக்கிறீர்கள். எனினும் மனதில் தடுமாற்றமும், தெளிவின்மையும், குழப்பமும், கேள்விகளும் இருந்து அவைகளுக்கெல்லாம் சமாதானம் கிடைக்காதபோது செயலை எப்படி சரியாகச் செய்ய முடியும். எண்ணங்கள் எப்போது சரியாக இருக்கிறதோ அப்போதே செயலும் சரியாக இருக்கும். அதற்காக நல்லதையே நினையுங்கள் என்று பாபா சொல்கிறார். எண்ணங்களின் ‘லீக்கேஜ்’ மற்றும் ‘வேஸ்டேஜை’ தடுத்து நிறுத்துங்கள் ஏனெனில் அதன்மூலம் நிறைய சக்திகள் விரயமாகிறது. அதை சேமியுங்கள்.

### எண்ணங்கள் செயலுக்கு ஆதாரம்

எந்த எண்ணங்கள் வர வேண்டும் எந்த எண்ணங்கள் வரக்கூடாது, நல்ல எண்ணங்கள் எது, கெட்ட எண்ணங்கள் எது, நலம் பயக்கும் எண்ணங்கள் எவை, தீமை விளைவிக்கும் எண்ணங்கள் எவை, இதன் ஞானம் இருக்க வேண்டும். எண்ணங்களே நடத்தைக்கு ஆதாரமாக இருக்கிறது என சொல்லப்படுகிறது. எப்படி நினைக்கிறீர்களோ அப்படியே ஆவீர்கள். எனவே பாபா நமது எண்ணங்களை மாற்றுகிறார். எப்படி மாற்றுகிறார்? எண்ணங்களை மாற்றுவதற்கு எண்ணங்களைத் தருகிறார். முள்ளை முள் நீக்குகிறது. முள்ளை எடுக்க வேண்டுமானால் அதற்கு முள்தான் தேவை என சொல்லப்படுகிறது.

ஊசிகூட ஒரு முள்தான். அந்த முள் இயற்கையாக உருவானது, இது மனிதனால் உருவாக்கப்பட்டது. தச்சன் ஒரு ஆணியை அகற்றுவதற்கு இன்னொறு ஆணியைப் பயன்படுத்துவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் ஏனெனில் ஆணியை அகற்றுவதற்கு ஆணியே தேவைப்படுகிறது. அதேபோல எண்ணங்களை அகற்றுவதற்கு எண்ணங்களே தேவையாக இருக்கிறது. பாபா நமக்கு எண்ணங்களைத் தருகிறார் அதை நாம் நல்ல எண்ணங்கள், சுப எண்ணங்கள் அல்லது சிறந்த எண்ணங்கள் எனச் சொல்கிறோம். பாபாவின் முரளிகள் எல்லாம் என்ன? அவைகள் எல்லாம் சிறந்த சிந்தனைகளாக, சுபமான எண்ணங்களாக, நேர்மறையான எண்ணங்களாக இருக்கின்றன. அவைகள் பொற் சிந்தனைகளாக இருக்கின்றன. பாபாவின் போதனைகள் எல்லாம் என்ன? சிறந்த எண்ணங்களை தொகுப்பாக, சுப சிந்தனைகளின் குவியலாக இருக்கிறது. பாபா என்ன எண்ணங்களைத் தருகிறார்? நான் ஆத்மா, ஜோதியாக இருக்கிறேன் என்ற எண்ணங்களைத் தருகிறார். முதலில் நமது எண்ணங்கள் எப்படி இருந்தது? நான் இந்த உடலாக இருக்கிறேன். நான் பெண்ணாக இருக்கிறேன், நான் ஆணாக இருக்கிறேன், நான் இந்த தேசத்தில் வசிப்பவன் என்றெல்லாம் இருந்தது. இப்போது பாபா என்ன எண்ணங்களைத் தந்திருக்கிறார்? நான் ஆத்மா, அருபமானவன், பரந்தாமத்தில் வசிப்பவன். நான் ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல, நான் ஒரு ஒளிபுள்ளி, ஆத்மா என்ற எண்ணங்களைத் தந்திருக்கிறார். கெட்ட எண்ணங்களை அகற்றுவதற்காக பாபா நமக்கு சிறந்த எண்ணங்களைத் தந்திருக்கிறார். எந்த எண்ணங்களால் செயல்கள் கெட்டுப்போனதோ, உலகம் சீரழிந்ததோ அந்த எண்ணங்களை அகற்றாதவரை இந்த உலகம் எப்படி நல்லதாக மாறும். எந்த சிறந்த எண்ணங்களை பாபா அவர்கள் தந்திருக்கிறாரோ அவைகளின் பெயர்தான் ஞானம். அவைகளை நாம் அறிவுரைகள் அல்லது போதனைகள் எனச் சொல்கிறோம். பாபா உங்களுடைய அறிவுரைகள் எப்போதும் எங்களுடன் இருக்க வேண்டும்.... பாபா அவர்கள் நமக்கு எந்த எண்ணங்களைத் தந்திருக்கிறார்? நான் யார், யாருடைய குழந்தை! என்பதைச் சொல்லியிருக்கிறார். இதுவரை நாம் லௌகீகத் தந்தையையே நமது தந்தையாக நினைத்து வந்தோம். இப்போது அவர் இந்த உடலின் தந்தையாக இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டோம். ஆத்மாவாகிய எனக்கு தந்தையாக இருப்பவர் பரமாத்மா. பாபா அவர்கள் வந்து இந்த புதிய எண்ணங்களைத் தந்திருக்கிறார், புதிய ஞானத்தை தந்திருக்கிறார், புதிய போதனைகளைத் தந்திருக்கிறார். முதலில் நமக்கு இது தெரியாமல் இருந்தது. தெரிந்தவுடன் நமது எண்ணங்கள் மாறிவிட்டது, எண்ணங்களின் மாற்றம் செயல் மாற்றத்திற்கு காரணமாகிவிட்டது. பாபா அவர்கள் எத்தனை விசித்திர விதிகளைச் சொல்லியிருக்கிறார் எத்தனை உத்திகள் நிறைந்த விதிகளைச் சொல்லியிருக்கிறார் என்பதைப் பாருங்கள்.

## எண்ணங்களின் சக்தி

யோகம் என்றால் என்ன? சிறந்த எண்ணங்களின் நினைவு. நமது எண்ணங்கள் எவ்வளவு வலிமையாக இருக்கிறதோ அவ்வளவு நமது யோகமும் உயர்வாக இருக்கும். இந்த சிறந்த எண்ணங்கள் நினைவின் எண்ணங்கள். இவைகள் நினைவு வடிவ எண்ணங்கள். இந்த எண்ணங்களில் வேறு எந்த எண்ணங்களும் கலந்துவிடக்கூடாது. நான் ஒரு ஆத்மா என்ற ஒரு எண்ணம் வருகிறது. அடுத்து நான் ஒரு டாக்டர், இப்போது நான் டிஸ்பென்சரிக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. என்றால் நமக்கு எப்படி யோகம் வரும்? யோகம் செய்வதற்காக அமர்ந்து விட்டீர்கள், யோகம் செய்ய ஆரம்பித்து விட்டீர்கள், அதற்குள் 'அடடா, இன்று நான் சமையலறைக்கு சென்று சமைக்க வேண்டுமே' என்ற நினைவு வந்துவிட்டால் அது யோகமாகாது. யோகம் என்றால் அதில் ஒரு எண்ணங்களின் தாரை இருக்கும். தாரையில் வித்தியாசம் இருக்காது, நிரந்தரம் இருக்கும். எண்ணெய் தாரையில் வித்தியாசம் இருக்காது. எண்ணெய் துளிகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து இருக்கும். நிரந்தரமாக ஊற்றிக்கொண்டே இருக்கும். நமது எண்ணங்கள் எதுவோ அது ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கிறது, அவைகள் ஆத்மாவினுடைய, பரமாத்மாவினுடைய, பரந்தாமத்தினுடைய, சுயதர்மத்தினுடைய, சுயநிலையினுடைய எண்ணங்களின் தாரையாக இருக்கிறது. இவைகளைப் பற்றியே நமது எண்ணங்கள் இருக்கவேண்டும், மற்ற எண்ணங்கள் எதுவும் வரக்கூடாது. இவைகளே சக்திசாலி எண்ணங்களாக, இடைவிடாத எண்ணங்களாக, நம்பிக்கையுடைய எண்ணங்களாக இருக்கின்றன. யோகத்தின் மறுபெயராக இருப்பது

நம்பிக்கை. நான் ஒரு ஆத்மா என்பது வெறும் எண்ணமல்ல, அது நம்பிக்கை. அதில் நான் ஒரு ஆத்மா என்ற நம்பிக்கையோடு அந்த நிலையில் உறுதியாக இருக்கிறேன். எப்போது நாம் நம்பிக்கையோடு நினைக்கிறோமோ அப்போதே அனுபவம் ஏற்படும். அப்படியே சாதாரண எண்ணத்தோடு, அல்லது நான் ஒரு ஆத்மா என சும்மா நினைப்பதன் மூலமாக அனுபவம் ஏற்படாது. ஒருகால் யாருக்காவது யோகத்தில் அனுபவம் ஏற்படவில்லை என்றால் அவர் யோகத்தில் எதை நினைத்தாரோ, அதை நம்பிக்கையோடு நினைக்கவில்லை அதாவது அவரது எண்ணங்களில் நம்பிக்கை இல்லாமல் இருந்திருக்கிறது. எனவே யோகத்தில் நமது எண்ணங்கள் உறுதிவாய்ந்த எண்ணங்களாக இருக்க வேண்டும் அப்போதே நாம் அனுபவம் பெற முடியும்.

## சிவன் நினைவில் மூழ்கு

**சிவ சங்கல்ப மஸ்து (சிவ நினைவில் மூழ்கியிருங்கள்)**
**சுப சங்கல்ப மஸ்து (சுப நினைவில் மூழ்கியிருங்கள்)**
**ஸசக்த் சங்கல்ப மஸ்து (சக்தி நினைவில் மூழ்கியிருங்கள்)**

முயற்சிக்கு அஸ்திவாரமாக அல்லது ஆதாரமாக இருப்பது நமது எண்ணங்கள். நிறைய பழைய புராணங்கள் இருக்கின்றன, அவைகளில் ‘சிவ நினைவில் மூழ்கு’ என்ற வாக்கியம் அடிக்கடி காணப்படுகிறது. எல்லா மந்திரங்களையும் படித்த பிறகு ‘சிவ நினைவில் மூழ்கு’, ‘சிவ நினைவில் மூழ்கு’ என்ற வாக்கியத்தோடு நிறைவடைகிறது. நம்முடைய எண்ணங்கள் நன்மை செய்யும் எண்ணங்களாக இருக்க வேண்டும். இந்த ஈஸ்வரிய விஸ்வ வித்தியாலயத்தின் மிகப்பெரிய கொடை எது? என என்னிடம் கேட்டால், அது எண்ணங்களின் மகத்துவம் என நான் சொல்வேன். உங்களுடைய எண்ணங்களின் மகத்துவம் எது? அதன் வலிமை என்ன? அதன் சிறப்புகள் யாவை? இவை எல்லாவற்றையும் பாபா சொல்லியிருக்கிறார்கள். பாபா சொன்ன இந்த விசயங்கள் வேறு எங்கும் சொல்லப்படவில்லை. பாபாவுடைய இந்த விசயங்கள் மிக அதிக பலனளிக்கக்கூடியது, அது உங்களுக்கு வேறு எங்கும் கிடைக்க முடியாது. எல்லா இதிகாசங்களையும் படித்துப்பாருங்கள், அனைத்து தர்ம சாஸ்திரங்கள், கிரந்தங்கள், புராணங்களைப் படித்துப் பாருங்கள், எண்ணங்களின் மகத்துவத்தைப் பற்றி பாபா என்ன சொல்லியிருக்கிறாரோ அதைப்போல் வேறு யாரும் சொல்லியிருக்கவில்லை.

முதலாவது விசயம், எண்ணங்களின் மூலமாக உலகம் படைக்கப்படுகிறது என்று பாபா சொல்லியிருக்கிறார். ஆஹா! எண்ணங்கள் எவ்வளவு வலிமையானது பாருங்கள், அதன்மூலம் உலகமே படைக்கப்படுகிறது. உலகம் எங்கே, எண்ணங்கள் எங்கே! எனினும் எண்ணங்களால் உலகம் படைக்கப்படுகிறது என்று பாபா சொல்கிறார், எண்ணங்களுக்கு அந்த சக்தி இருக்கிறது! எண்ணங்கள் உலகை மாற்றிவிடுகிறது என்று சொல்கிறார்கள். உலகம் எண்ணங்களின் ஆதாரத்தில் இயங்குகிறது. எண்ணங்களே உலகின் அஸ்திவாரமாக இருக்கிறது. உங்கள் எண்ணங்களால் உலகம் உருவாக்கப்படுகிறது என்று பாபா சொல்கிறார். நீங்கள் சுத்த எண்ணங்களை தோற்றுவித்தால் புதிய உலகம் படைக்கப்பட்டுவிடும்.

எனவே நீங்கள் உங்கள் கெட்ட எண்ணங்களை விடுவீர்களா, மாட்டீர்களா? தனது எண்ணங்களால் நல்ல அல்லது கெட்ட, சுகமய அல்லது துக்கமய உலகம் உருவாக்கப்படுகிறது என்பதை நீங்கள் உணர்வீர்களேயானால் தனது எண்ணம் எப்படி இருக்க வேண்டும்? என்பதை நீங்கள் இப்போது நிர்ணயம் செய்ய வேண்டும். முதலாவது விசயம்: குழந்தைகளே, எண்ணங்களால் உலகம் படைக்கப்படுகிறது, இதை நினைவில் கொள்ளுங்கள் என பாபா சொல்கிறார். இந்த விசயத்தின் மகத்துவத்தை ஒருபோதும் மறக்காதீர்கள். என் மனதில் கெட்ட எண்ணம் வந்தது, அதை வெளியில் வர விடவில்லை, அதை அங்கேயே அழித்து விட்டேன் என நினைக்காதீர்கள். சொல் அல்லது செயலால் உலகம் படைக்கப்படுகிறது என பாபா சொல்லவில்லை. எண்ணங்களால் உலகம் படைக்கப்படுகிறது என்றுதான் பாபா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். சொல்லும் செயலும் பின்னர் வருகிறது. இவை அனைத்திற்கும் அடித்தளமாக இருப்பது எண்ணங்களே. எண்ணங்களால் உலகம்

படைக்கப்படுகிறது என்பதை நீங்கள் நினைவில் கொண்டீர்கள் என்றால் மாற்றம் வரும். உங்கள் எண்ணங்கள் வலிமை வாய்ந்ததாக இருக்கட்டும் அப்போதே நீங்கள் வலிமை மிக்க படைப்பை உருவாக்க முடியும். உங்கள் எண்ணங்கள் மிகவும் வலிமையானதாக இருக்க வேண்டும். எண்ணங்களில் வலிமை எந்த விசயங்களில் இருக்க வேண்டும்? பவித்திரத்தின்மீது, ஞானத்தின்மீது, யோகத்தின்மீது, அஷ்ட சக்திகளின்மீது இருக்க வேண்டும். நாம் மாஸ்டர் சர்வ சக்திவான்களாக இருக்க வேண்டும் ஏனெனில் நாம் நமது எண்ணங்களைக் கொண்டு ஒரு புது உலகைப் படைக்க வேண்டும்.

நான் 'மாஸ்டர் படைப்பவர்' என்பதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் பாபாவின் வாழ்க்கை வரலாறை கேட்டிருப்பீர்கள். பாபா அவர்கள் பிரம்மா பாபாவிற்கு ஒரு காட்சி கொடுத்தார். அதில் இரண்டு நட்சத்திரங்கள் மேலிருந்து இறங்கி வந்தவுடன் அவைகள் தேவி—தேவனாக மாறிவிட்டது. அதற்குப் பிறகு நீங்கள் அந்தமாதிரி புது உலகைப் படைக்க வேண்டும் என்று அவருக்குச் சொல்லப்பட்டது. புதிய உலகை எப்படி உருவாக்க வேண்டும் என்று அப்போது சொல்லப்படவில்லை என பிரம்மா சொன்னார். எனினும் கொஞ்சம் கொஞ்சமாக சிவபாபா என்ன சொன்னார்? எண்ணங்களின் மூலமாக உலகம் படைக்கப்படுகிறது. நீங்கள் எந்த உலகை படைக்க விரும்புகிறீர்களோ அந்த உலகை எண்ணங்கள் மூலம் உருவாக்க வேண்டும் என்று சொன்னார்.

நான் மாஸ்டர் படைப்பவன் என்பதை முதன்முதலில் புரிந்துகொள்ளுங்கள். தனது பொறுப்பை புரிந்துகொள்ளுங்கள், தனது கடமையைப் புரிந்துகொள்ளுங்கள், தனது இலக்கைப் புரிந்துகொள்ளுங்கள். புது உலகைப் படைக்க வேண்டும் என்பதே நமது இலட்சியம் (இலக்கு). மாஸ்டர் படைப்பவர் ஆவதே நமது நடிப்பு (கடமை). அந்த பாகம் மற்றும் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான வழி எது? வலிமையான எண்ணங்கள். வலிமையான எண்ணங்கள் என்றால் யோகம் நிறைந்த, ஆன்மீகம் நிறைந்த, பவித்திரம் நிறைந்த எண்ணங்கள். அப்படிப்பட்ட எண்ணங்களால் உலகம் உருவாக்கப்படுகிறது.

இரண்டாவது, இந்த எண்ணங்கள் தீக்குச்சுகளாக இருக்கிறது என்று பாபா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். தீப்பெட்டியில் தீக்குச்சுகள் இருக்கின்றன, அவைகளை கொளுத்தி வீசினால், மிகப்பெரிய கட்டிடங்களைக்கூட அவைகள் எரித்துவிடுகின்றன. ஒரு தீப்பொறி முழு மாளிகையையும் எரிந்து சாம்பலாக்கிவிடுகிறது. எண்ணமென்ற தீப்பொறியை, தீக்குச்சு கொளுத்தி தனது பழைய சமஸ்காரங்களை எரித்து சாம்பலாக்கி விடுங்கள். இது எண்ணங்களின் இரண்டாவது வடிவம். நீங்கள் **எண்ணங்கள் மூலமாக புது உலகைப் படைக்க வேண்டும். எண்ணங்கள் மூலமாக விகர்மங்களை அழிக்க வேண்டும்.** எனது எண்ணங்கள் அப்படி இருக்கிறதா, அதன்மூலம் எனது எல்லா பழைய விகர்மங்களும் அழிந்துபோகுமா என யோசியுங்கள்.

எப்படி இலட்சியமோ, அதற்குத்தக்கபடி இலட்சணங்கள் இருக்கும் என்று பாபா சொல்கிறார். நமது இலட்சியமோ மிக உயர்வாக இருக்கிறது, எனினும் நமது இலட்சணங்கள் அதற்குத் தகுந்தபடி இல்லை. இலட்சியத்திற்கும் இலட்சணத்திற்கும் இடையே உள்ள இந்த இடைவெளியை எப்படி நிரப்புவது? எண்ணமே அவைகளை இணைக்கும் பாலமாக இருக்கிறது. நான் அந்த இடைவெளியை நிரப்ப வேண்டும் என்ற எண்ணமென்ற பாலத்தை எதுவரை உருவாக்கவில்லையோ அதுவரை அந்த இடைவெளி அப்படியேதான் இருக்கும். எண்ணமானது இலட்சியத்தையும் இலட்சணத்தையும் இணைக்கும் பாலமாக இருக்கிறது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். அது எந்த எண்ணம்? பாப்சமான் ஆக வேண்டும் என்ற எண்ணம். நான் பாபாவைப் போல ஆகவேண்டும் என்ற இந்த எண்ணம் ஒரு பாலமாக இருக்கிறது. இந்தப் பாலமே உங்களுடைய தற்போதய நிலை மற்றும் எதிர்காலத்தில் நீங்கள் அடையவிரும்பும் நிலை இரண்டையும் இணைக்கிறது.

அந்த இரண்டையும் இணைப்பது, இரண்டிற்கும் இடையே உள்ள இடைவெளியை போக்குவது இந்த எண்ணமே. பாபாவை எப்போதும் முன்னால் வையுங்கள். தனது எண்ணங்களையும், கருத்துக்களையும் பாபாவோடு ஒப்பிட்டுப் பாருங்கள், ஒன்றாக்குங்கள். எந்தக் காரியத்தைச் செய்யப்போகிறீர்களோ அந்தக் காரியத்தை பாபா செய்திருந்தாரா? எனப்பாருங்கள், ஆம், என்றால் அதைச் செய்யுங்கள். நான் பாப்சமான் ஆகவேண்டும் என்ற எண்ணம் எப்போது உங்களிடம் இருக்கிறதோ, அப்போது இந்த இடைவெளி நிரம்பும். ஒருவேளை இந்த எண்ணம் உங்கள் புத்தியிலிருந்து நழுவிவிடுமானால் அந்த இடைவெளி நிரம்பாது. எண்ணங்களுக்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது என்பதைப் பாருங்கள். நான் பிராமணனாக இருக்கிறேன் என்ற எண்ணம் இருக்க வேண்டும் என்று பாபா சொல்கிறார். அப்போது

சூத்திரனுடைய எண்ணம் என்னிடத்தில் வரவே முடியாது. பிராமணன் ஒருபோதும் கீழான காரியங்களைச் செய்யமுடியாது. லௌகீகத்தில்கூட யார் சுத்த பிராமணராக இருக்கிறாரோ அவரை மாமிசம் உண்ணச் சொன்னால் என்ன சொல்வார், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நான் பிராமணன், கீழான உணவை என்னால் சாப்பிட முடியாது என்பார். இப்போது அது எல்லாம் முடிந்துபோய்விட்டது, இப்போது இருப்பதோ ஒரே வர்ணம்தான். அந்தக்கால பிராமணர்களுக்கு, நான் பிராமணன், நான் எந்தவொரு கீழான செயலையும் செய்ய முடியாது, எந்தவொரு மட்டமான உணவையும் உண்ணமுடியாது என்ற எண்ணம் எப்போதும் அவர்களிடம் இருந்து வந்தது. நான் மிக உண்மையான பிராமணன், தூய்மை, பவித்திரம், சாத்வீகம், யோகம் ஆகியவைகளே என்னுடைய பிராமணத்துவம், என்னுடைய செயல்கள் என்ற எண்ணம் உங்களிடம் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட எண்ணங்கள் உங்களிடம் எப்போதும் மேலோங்கி இருக்குமானால் உங்களிடம் நிறைநிலை அதாவது தெய்வீக இலட்சணங்கள் தென்படும் அதை பாபா ராயல்டி எனச் சொல்கிறார்.

எண்ணங்கள் அப்படி வலிமையாக இருக்கிறது அவைகள் யோகத்தில் இலயித்துவிட வைக்கிறது, ஆழமான அன்பின் ரூபத்தை பெறுகிறது, யோகத் தீயின் ரூபத்தைப் பெறுகிறது, அதன்மூலம் விகர்மங்கள் எல்லாம் அழித்து விடுகின்றன என்று பாபா சொல்கிறார்.

உங்கள் எண்ணங்களை அன்பினால் தீவிரமாக்குங்கள், இரண்டற கலந்துவிடுங்கள் அப்போது அந்த எண்ணங்கள் உங்களுக்கு அக்கினி ஆகிவிடும். எண்ணங்கள் குச்சுகளாகவும் இருக்கின்றன, அக்கினியாகவும் இருக்கின்றன. ஒருவேளை உங்கள் யோகநிலை சிறப்பாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அதற்கான எண்ணங்களை அன்பால் நிறைத்துவிடுங்கள் அதாவது யோகத்தில் உங்கள் எண்ணங்களே அன்பு சொரூபமாக இருக்க வேண்டும். எண்ணங்களில் அன்பைத்தவிர வேறு எதுவும் இருக்கக்கூடாது. எண்ணங்கள் இந்த ரூபத்தை தரிக்கும் போது வேறு எதுவும் தெரிவதில்லை, அப்போது யோகம் அக்கினி ரூபமாக இருக்கிறது.

எண்ணங்கள் டிக்கெட்டாக இருக்கிறது என்று பாபா சொல்கிறார். பரிஸ்தாவாவதற்குரிய டிக்கெட்டை வாங்குங்கள். அபு வருவதற்காக நீங்கள் உங்கள் இடங்களில் இருந்து டிக்கெட் பெற வேண்டியதாக இருக்கிறது. யார் பயணம் செய்யவேண்டுமானாலும் அந்த இடத்திற்குச் செல்வதற்கு டிக்கெட் எடுக்க வேண்டும். அவ்யக்த வதனத்திற்கு நாம் போக வேண்டும். அங்கு செல்வதற்கும் டிக்கெட் எடுக்க வேண்டும் என்பது இயல்பான விசயமே. அவ்யக்த வதனம் செல்வதற்கு நமக்கு எந்த டிக்கெட் அல்லது பயணச்சீட்டு தேவையாக இருக்கிறது? நான் பரிஸ்தாவாக வேண்டும் என்ற எண்ண வடிவ பயணச்சீட்டு வேண்டும். பரிஸ்தாவாவதற்குரிய டிக்கெட் இதுதான். நான் பரிஸ்தாவாக இருக்கிறேன், நான் பரிஸ்தாவாக வேண்டும் என்ற எண்ணமே டிக்கெட்.

என்ன எண்ணத்தை உருவாக்குகிறீர்களோ அதை நிறைவேற்றுங்கள், செயலில் கொண்டுவாருங்கள் என்று பாபா சொல்கிறார். நினைத்ததை முடித்துவிடுங்கள். நினைத்தபிறகு விட்டுவிடாதீர்கள், நாளைக்காக ஒத்திப் போடாதீர்கள். எதையும் அரைமனதோடு யோசிக்காதீர்கள், எதை யோசித்தாலும் முழுமனதோடு யோசியுங்கள். செய்வதையும் முழுமையாகச் செய்யுங்கள். உள்ளத்தையும் உயிரையும் ஈடுபடுத்தி செய்யுங்கள். எண்ணங்களில் அன்பும் நம்பிக்கையும் சமமாக இருக்க வேண்டும் என்று பாபா சொல்கிறார். முழுமையான எண்ணம் என்றால் அதில் அன்பும் நியதியும், அன்பும் சக்தியும், ஞானமும் யோகமும் சமமாக இருக்க வேண்டும் என்று பாபா சொல்கிறார். இவைகள் முழுமையாக சமநிலையில் இருக்க வேண்டும். இந்த எல்லா விசயங்களையும் கடைபிடித்தோம் என்றால் தீவிர முயற்சி செய்யமுடியும், முழு முயற்சி செய்ய முடியும்.

பி.கு. ஜகதீஷ்சந்தர் ஹஷீஜா

**எண்ணம் என்றால் என்ன?**

**1.** அந்த மனிதர்கள் ரித்தி–சித்தி அடைகிறார்கள் ஆனால் இங்கு யோகத்தின் ரித்தி–சித்தி கிடைக்கிறது. நினைவின் ரித்தி–சித்தி என்னவாக இருக்கிறதோ, அதை கற்றுக்கொள்ள வேண்டும். யார் சித்தி பெற்றவர்களோ அவர்களுடைய எண்ணம், சொல் மற்றும் ஒவ்வொரு செயலும் வெற்றியடையும். ஒரு எண்ணம்கூட வீணாக எழாது. எது நிறைவேறுமோ அந்த எண்ணம் மட்டுமே எழும். யாருடைய ஒரு எண்ணம் கூட வெற்றி பெறாமல் இருப்பதில்லையோ அவரையே சேவை செய்பவர் என்று சொல்லப்படுகிறது. அதாவது எது வெற்றிபெறாத எண்ணமோ அப்படிப்பட்ட எந்த எண்ணமும் எழவேகூடாது. உங்களுடைய ஒவ்வொரு எண்ணத்திற்கும் மதிப்பு இருக்கிறது. எனினும் எப்போது தனக்குத்தானே மதிப்பளிக்கிறீர்களோ அப்போதே, மற்ற எல்லா ஆத்மாக்களும் ரத்தினங்கள், உங்களுடைய மதிப்பை அறிவார்கள். 06.12.69

**2.** யாருடைய மனதில் என்ன எண்ணம் எழுகிறதோ அது உங்களிடம் முன்னமேயே வந்து சேர்ந்துவிடும் அதனை சொல்லி–கேட்பதற்கு அவசியம் இருக்காது, அப்படிப்பட்ட நிலை உருவாகும். எனினும் **பிறருடைய எண்ணங்களை படிப்தற்கு தன்னுடைய எண்ணங்களின்மேல் முழு கட்டுப்பாடு இருக்க வேண்டும். பிரேக் பவர்புல்லாக இருக்க வேண்டும், அப்போதே இது சாத்தியம் ஆகும்.** ஒருவேளை தனது எண்ணங்களை அடக்க முடியவில்லை என்றால் பிறருடைய எண்ணங்களைப் புரிந்துகொள்ள முடியாது. எனவே (பாபா) சொன்னபடி **எண்ணங்களின் விஸ்தாரத்தை தடுத்துக்கொண்டே இருங்கள். எந்த அளவு எண்ணங்களை அடக்கும் சக்தி இருக்கிறதோ அந்த அளவு மற்றவர்களின் எண்ணங்களை புரிந்துகொள்ளும் சக்தி வரும்.** தன்னுடைய எண்ணங்களின் விஸ்தாரத்திற்குள் போகக்கூடிய காரணத்தால் தன்னையே புரிந்துகொள்ள முடியாதபோது பிறரைப்பற்றி என்ன புரிந்துகொள்வீர்கள். எனவே இந்த நிலையும் முயற்சிக்குத் தக்கபடி வரிசைக்கிரமமாக வருகிறது. இதுவும் சம்பூரண நிலையின் அடையாளமாக இருக்கிறது. **சம்பூரண நிலைக்கு அருகில் எதுவரை வந்திருக்கிறீர்கள். அதனை இந்த விசயங்களின்மூலம் தானே தன்னை தெரிந்துகொள்ள வேண்டும்.** 25.12.69

**3.** எண்ணங்களைப் பிடிக்கக்கூடிய (கேச்) பயிற்சி இருக்குமானால் எண்ணமற்ற நிலையிலும் எளிதாக இருக்க முடியும். எப்போது ஒருவருடைய எண்ணங்களை அறிய முடிவதில்லையோ அப்போது அதிக எண்ணங்களை செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. எனினும் ஒவ்வொருவருடைய எண்ணங்களையும் படிக்கக்கூடிய பயிற்சி இருக்குமானால் வீண் எண்ணங்கள் அதிகமாக ஓடாது. மேலும் எளிதாக ஒரே எண்ணத்தில் ஒரே ரசனை நிலையில் ஒரு நொடியில் நிலை பெற்று விட முடியும். எனவே **எண்ணங்களை படிக்க வேண்டும் – இதுவும் சம்பூரணத்தின் ஒரு அடையாளமாகும். 07/06/70**

**4.** **'பாஸ்வித் ஹானருக்கும் பாஸாவதற்கும்'** இடையே என்ன வித்தியாசம் இருக்கிறது? **'பாஸ்வித் ஹானர்' என்றால் மனதிலும் எண்ணங்களின் தண்டனை பெறாமல் இருப்பது. தர்மராஜரின் தண்டனை என்பது பின்னால் உள்ள விசயம். எனினும் தனது எண்ணங்களின் குழப்பம் அல்லது தண்டனையில் இருந்து தூர விலகி இருக்க வேண்டும். இதைத்தான் 'பாஸ்வித் ஹானர்' என்று சொல்லப்படுகிறது. தனது தவறுகளால் தனக்கே தண்டனை கொடுத்துக் கொள்கிறீர்கள். குழப்பமடைவது, புகார் செய்வது, கவலைப்படுவது ஆகியவற்றை கடந்து இருக்க வேண்டும். இதைத்தான் பாஸ்வித் ஹானர் என்று சொல்லப்படுகிறது. 17.10.70**

**5.** செயல்கள் செய்யும்போது எப்போதும் இரண்டு விசயங்களை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். பின்னர் அப்படிப்பட்ட பழக்கம் வந்துவிடும் அதன்மூலம் எப்படி வாயால் சொல்லும் விசயங்களை எளிதாக புரிந்துகொள்ள முடிகிறதோ அப்படி ஒருவருடைய மனதில் வந்திருக்கும் எண்ணங்களை அப்படியே அறிந்துகொள்வீர்கள். அதேபோல மனதை, எண்ணங்களை எளிதில் கண்டறிவீர்கள்.

எனினும் எப்போது நீங்கள் (பாபாவிற்கு) சமமான நிலைக்கு அருகில் வருகிறீர்களோ அப்போதே இது சாத்தியமாகும். ஒருவருடைய சுபாவம் மற்றவரோடு ஒத்துப்போனால், ஒருவர் பாவனையை மற்றவர் எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. எனவே இங்கும் பாபாவிற்கு சமமான நிலைக்கு அருகில் செல்வதால் மனதின் எண்ணங்களை வாயில் சொல்லும் வார்த்தைகளைப்போல அப்படியே அறிந்துகொள்ள முடியும். எனவே தனது எண்ணங்களில் கலப்படம் எதுவும் இல்லாதபடி மட்டும் பார்த்துக்கொள்ளுங்கள். எண்ணங்கள் மீது கட்டுப்படுத்தும் சக்தி கட்டாயம் இருக்கவேண்டும். எப்படி வெளி விசயங்களை கட்டுப்படுத்துவதில் கட்டுப்படுத்தும் சக்தி ஒவ்வொருவரிடமும் வெவ்வேறாக இருக்கிறதோ, அதேபோல இந்த மன எண்ணங்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் சக்தியும் வரிசைப்படி இருக்கிறது. 01.02.71

**6.** எப்படி வார்த்தை மூலமாக சொல்லி செயலை நிறைவேற்றும் வேளையில் முதலில் நீங்கள் அதிகம் பேசவேண்டியதாக இருந்தது, அப்போதே வெற்றி கிடைத்து வந்தது. இப்போது கொஞ்சம் பேசுவதிலேயே வேலை நடந்துவிடுகிறது. உங்கள் எண்ணம் செயலை நிறைவேற்றிவிடுகிறது. எண்ணத்தின் மூலமாக யாரை வேண்டுமானாலும் அழைக்கலாம், யாருக்கு வேண்டுமானாலும் எண்ணத்தின் மூலமாக காரியம் செய்ய பிரேரணை கொடுக்கலாம். இவைகளும் சக்திகளே, எனினும் அவைகளை கடமையாகக் கருதி உபயோகப்படுத்த வேண்டும். இந்தப் பலன் ஸ்ரீமத்தின் மூலம் கிடைக்கிறது. இது எப்படி பட்டனை அழுத்தியவுடன் காட்சிகள் டெலிவிசனில் வருகிறதோ, அப்படி நீங்கள் இங்கே நினைப்பீர்கள், அங்கே அவரது புத்தியில் தெளிவான காட்சி தோன்றும். அப்படி கனெக்ஷன் செயல்படும். இந்த எல்லா சக்திகளும் கிடைத்துவிடும். இதைப் பெறுவதற்காக, மற்ற எல்லா விசயங்களையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு ஸ்ரீமத்தின்படி எந்த கட்டளைகள் கிடைத்திருக்கிறதோ அவைகளை மட்டுமே புத்தி செயல்படுத்த வேண்டும், வேறு எதுவும் கலக்கக்கூடாது. வீணான எண்ணங்கள் ஸ்ரீமத் கிடையாது, அது உங்கள் மன்மத்தாக இருக்கிறது. எனவே புத்தி எப்போது இப்படி ஆகிறதோ அதில் ஸ்ரீமத்தைத் தவிர வேறு எதுவும் கலப்பதில்லையோ அப்போது சக்திகள் வந்து சேரும். 8.6.71

**7.** தற்சமயம் ஆத்மாக்களிடம் காணப்படும் பலவீனத்தின் வியாதி எது? வீண் எண்ணங்களில் வீணாக நேரத்தை இழப்பது, இதுவே தற்சமயத்தில் ஆத்மாக்களிடம் காணப்படும் பலவீனம். இந்த வியாதியின் காரணத்தால் எப்போதும் ஆரோக்கியமாக இருப்பதில்லை. சில நேரம் இருக்கிறீர்கள், சிலநேரம் பலவீனமாகிவிடுகிறீர்கள். எப்போதும் ஆரோக்கியமாக இருப்பதற்கான சாதனம் இதுதான். அதனால் நேரமும் மிச்சமாகிறது. யாரோ நேரடியாக மனித ரூபத்தில் சரிபார்ப்பது போல நீங்கள் நடைமுறையில் அப்படி அனுபவம் செய்வீர்கள். இது சாதாரண விசயம்தான், எனினும் இந்த சாதாரண விசயத்தை நடைமுறையில் குறைவாகவே கொண்டு வருகிறீர்கள். 14.06.72

**8.** எப்போது ஆத்மாக்கள் நீங்கள் உங்கள் சம்பூரண பவர்புல் நிலையில் இருப்பீர்களோ, அப்போது யாரேனும் வந்தவுடன் ஒரு நொடியில் சுவிட்சு ஆன் செய்தவுடன் அதாவது சுப எண்ணத்தை எழுப்பியவுடன் அதாவது இந்த ஆத்மாவிற்கு நன்மை உண்டாகட்டும் என்று சுப பாவனை வைக்கிறீர்கள் – இதுதான் எண்ண வடிவ சுவிட்சு. இதை ஆன் செய்தவுடன் அதாவது எண்ணத்தை படைத்த உடனேயே அவருடைய பாவனை பூர்த்தியாகிவிடும், அவர் அப்படியே நெகிழ்ந்து போய்விடுவார். ஏனெனில் பின்னால் வரக்கூடிய ஆத்மாக்கள் குறைந்த அளவிலேயே அதிகம் திருப்தி அடைந்துவிடுவார்கள். 'எல்லாப் பிராப்திகளும் கிடைத்து விட்டது' என உணர்வார்கள். ஏனெனில் அவர்கள் பாகமே மிச்சம் மீதியைப் பெறுவதுதான். அவர்களுடைய கணக்குப்படி அதுவே எல்லாமாக இருக்கிறது. எனவே எல்லா ஆத்மாக்களும் அவர்களுடைய பாவனைக்கான பலனை பெற வேண்டும், யாருமே வஞ்சிக்கப்பட்டுவிடக்கூடாது. அதற்காக அவ்வளவு பவர்புல் நிலை அதாவது சர்வ சக்திகளையும் இப்போதிருந்தே தனக்குள் சேமித்து வையுங்கள், அப்போதே இந்த சேர்த்து வைத்த சக்திகளின் மூலமாக சிலருக்கு சமாளிக்கும் சக்தியையும், சிலருக்கு சகித்துக்கொள்ளும் சக்தியையும்

கொடுக்க முடியும் அதாவது யாருக்கு எது அவசியமாக இருக்கிறதோ அதை அவருக்கு கொடுக்க முடியும். 13.04.73

**9.** யார் சம்பூரண நிலைக்கு மிக அருகில் இருக்கிறார்களோ அவர்களுடைய எண்ணங்களில், சொற்களில், செயல்களில் ஒரு வித போதை இருக்கும். அது எது? **ஈஸ்வரிய போதை** எல்லோரிடமும் இருக்கிறது. ஆனால் **விசேசமாக இருக்கும்** அந்த போதை எது? அவருடைய எண்ணங்களில், சொற்களில் போதையின் எந்த விசயம் இருக்கும்? நான் என்ன செய்தாலும் அதில் சம்பூரண வெற்றி ஏற்கனவே கிடைத்துவிட்டது. நடக்க வேண்டும் அல்லது நடக்கப்போகிறது என இருக்காது, ஆனால் நடந்துவிட்டதாக இருக்கும். எனது ஒவ்வொரு எண்ணத்திற்கும் வெற்றி ஏற்கனவே கிடைத்துவிட்டது என கர்மத்திலும் அந்த போதை இருக்கும். எனது ஒவ்வொரு கர்மத்தின் பின்னால் வெற்றி எனது நிழல்போல தொடர்கிறது என்ற போதை கர்மங்களில் இருக்கும். எனது சொல்லிற்கு வெற்றி ஏற்கனவே கிடைத்துவிட்டது. வெற்றி தானே என் பின்னால் வரக்கூடியது. வெற்றி என்னைவிட்டு பிரிந்து இருக்க முடியாது. அப்படிப்பட்ட போதை ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு செயலிலும் எப்போது இருக்கிறதோ, அப்போது மிக நெருக்கத்தில் இருக்கிறீர்கள் என்பதை புரிந்துகொள்ளுங்கள். 21.7.73

**10.** யார் அனைத்திலும் நிறைந்து இருக்கிறார்களோ, அவர்களுடைய கண்கள் அல்லது புத்தி வேறு எந்த பக்கமும் போவதில்லை. அவர்கள் எப்போதும் ஆன்மீகப் பார்வை உடையவராக இருப்பார்கள், அவர்கள் வீண் எண்ணங்கள் அல்லது பல பக்கங்களில் புத்தி அல்லது பார்வை போவதில் இருந்து விலகி, எல்லா கவலைகளையும் கடந்து தனது தந்தை மூலமாக கிடைத்திருக்கும் பொக்கிஷங்களைக் கொண்டு சதா சந்தோஷமாக இருப்பார்கள். அவர்களுக்கு மற்ற வேறு எந்த எண்ணங்களையும் நினைப்பதற்கு நேரம் இருப்பதில்லை, ஏனெனில் **பாபா மூலமாக கிடைத்திருக்கும் பொக்கிஷங்களை தனக்கும் மற்ற எல்லா ஆத்மாக்களுக்கும் கொடுப்பதில் அல்லது அவைகளை தாரணை செய்வதில் எப்போதும் பிஸியாக இருப்பார்கள். அனைத்திலும் மிகப்பெரிய தொழில், அனைத்திலும் மிகப்பெரிய தானம் அல்லது அனைத்திலும் மிகப்பெரிய புண்ணியம் என எப்படிச் சொன்னாலும், அது இதுதான்.** இந்த சிறந்த காரியத்தை அல்லது சிறந்த தான–புண்ணியத்தை விட்டுவிட்டு வேறு என்ன செய்வது? நேரம் எங்கே இருக்கிறது, மற்ற சின்னச் சின்ன வீண் வேலைகளைச் செய்ய எண்ணம் வந்தாலும், காரியம் முடிந்துவிட்டதா என்ன அதனால் நேரம் இருக்கிறதா? முடிக்கவில்லை என்றால் பின்னர் நேரம் எங்கிருந்து வரமுடியும்? இவ்வளவு பெரிய காரியங்களில் பிஸியாக இருப்பவர்கள், பொம்மைகளோடு விளையாடுவதில் ஏதாவது குறிக்கோள் இருக்கிறதா என்ன? ஏதாவது ரிசல்ட் கிடைக்கிறதா என்ன? இவ்வளவு பெரிய மனிதராக இருந்துகொண்டு ஒவ்வொரு அடியிலும் கோடி கோடியாக சம்பாதிப்பவர் இப்படி பொம்மைகளோடு விளையாடிக் கொண்டிருந்தால் அவரை பெரிய அறிவாளி என்று சொல்வார்களா என்ன? வீண் எண்ணங்கள், பொம்மைகளோடு விளையாடுவதாகும். 2.5.74

**11.** இன்றைய காலத்தில் ஒரு இடத்தின் நிகழ்ச்சியை எல்லா இடங்களிலும் டிவியில் தெளிவாகக் காட்டுகிறார்கள். மதுவனமும் டிவி ஸ்டேசன்தான். நாலாபுறமும் டிவி செட் வைக்கப்பட்டிருக்கிறது. டிவி ஸ்டேசனில் என்ன நடக்கிறதோ அது தானாகவே எல்லா பக்கமும் காட்டப்படுகிறது. மதுவனத்தில் இருப்பவர்களின் ஒவ்வொரு எண்ணமும் நாலாபுறமும் பார்ப்பதற்குத் தெரிகிறது அதாவது பரவுகிறது ஏனெனில் டிவி செட் நாலா பக்கமும் வைக்கப்பட்டிருக்கிறது. எப்படி இப்போதெல்லாம் அறிவியல் சாதனங்கள் மூலமாக எண்ணங்களின் வேகம் அல்லது மனதின் நிலையை கண்டறிய முடிகிறதோ, அதேபோல மதுபன் நிவாசிகளின் எண்ணங்களின் வேகம் அல்லது மனதின் நிலை நாலா பக்கமும் பரவுகிறது. அதனால் ஒவ்வொரு எண்ணத்தின்மீதும் கவனம் கொடுக்க வேண்டும். இதன்மீது அலட்சியமாக இருக்கக்கூடாது. மதுபன் நிவாசி மதுவனத்தில் அமர்ந்தபடியே ஏதேனும் விசேச எண்ணங்கள் மூலமாக அதிர்வலைகளை (எண்ண அலைகள்) பரப்ப விரும்பினால், இந்த ஒரு இடத்தில் அமர்ந்த படியே எல்லாப் பக்கமும் பரப்ப முடியும். எப்படி ஸ்தூலமான பொருட்களின்

நறுமணம் எல்லா பக்கமும் தானாகவே பரவுகிறதோ அதுபோல இந்த அதிர்வலைகள், எண்ணங்கள் மூலமாக நாலாபுறமும் தானாகவே பரவுகிறது. 10.02.78

**12.** ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு குழந்தையும் தன் சக்திக்குத் தக்கபடி பாபாவின் முன்பு உறுதிமொழி கொடுக்கிறார்கள் அதாவது பாபாவிடம் வாக்குறுதி தருகிறார்கள். ரிசல்டில் எதை பார்த்தார், வாக்குறுதி கொடுக்கும்போது மிகுந்த ஊக்க உற்சாகத்தோடு தைரியமுடன் எண்ணத்தை எழுப்புகிறார்கள். கொஞ்ச நேரம் எண்ணங்களை நடைமுறையில் கொண்டுவர, பிரச்சினைகளை சமாளிக்க, சுபபாவனையோடு நன்மை செய்யும் ஆசையோடு காரியம் செய்து அதில் வெற்றி மூர்த்தி ஆகிறார்கள். எனினும் போகப்போக கொஞ்ச நேரத்திற்குப் பிறகு முழு கவனம் கொடுப்பதற்குப் பதிலாக வெறும் கவனம் மட்டும் இருந்து விடுகிறது. பின்னர் அட்டென்சனுக்கு இடையிடையே **அட்டென்சன்** மாறி **டென்சனின்** ரூபம் பெறுகிறது. வெற்றி என்னுடைய பிறப்புரிமை என்ற சக்திமிக்க எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக தனது ரூபத்தை மாற்றிக்கொண்டே இருக்கிறது. பிறப்புரிமைக்குப் பதிலாக அவ்வப்போது அதிகாரம் கொடுங்கள், சக்தி கொடுங்கள் என்ற சொற்கள் பாப்தாதாவிற்கு முன்னால் வெளிப்படுகிறது. 2.1.79

**13.** மாயாவின் விசேச அம்பு வீண் எண்ணங்கள் வடிவில் இருக்கிறது. இந்த அம்பின் மூலமாக தெய்வீக புத்தியை பலவீனமாக்கி விடுகிறது. பிறகு பலவீனமான காரணத்தால் புற வசமாகிவிடுகிறது. பலவீனமான மனிதன் எதை விரும்புகிறானோ அதை செய்ய முடிவதில்லை, எனவே விருப்பம் இருந்தும் அடைய முடிவதில்லை. இதற்குக் காரணம், சர்வசக்திவான் பாபா மூலமாக கிடைத்திருக்கும் அந்த சக்திகளை காரியத்தில் பயன்படுத்தாமல் இருப்பதுதான். எண்ணங்களின் சக்தியே அந்த விசேச சக்தி. எண்ணங்களின் சக்திகளை பயன்படுத்த தெரியவில்லை. 1.2.79

**14.** தனக்குள் ஒருவேளை பலவீன எண்ணங்கள் உற்பத்தியானால் அது பலவீன சமஸ்காரமாகிவிடுகிறது. எப்படி ஒருவர் ஒருமுறை உடலால் பலவீனமானபோது, கொஞ்ச நேரத்தில் ஆரோக்கியமாகவில்லை என்றால் பலவீனப்படுத்தும் கிருமிகள் பலம் பெற்றுவிடுகின்றன. அதேபோல வீண் எண்ணங்கள் வடிவ பலவீனப்படுத்தும் கிருமிகளை தனக்குள் நுழையவிடாதீர்கள். இல்லையென்றால் அதை அழிப்பது கடினமாகிவிடும். 5.12.79

**15.** தனது சர்வ சக்தி அதிகாரத்தின் ஆதாரத்தில் அதாவது புண்ணிய செல்வத்தின் ஆதாரத்தில், சுத்த எண்ணங்களின் ஆதாரத்தில், எந்தவொரு ஆத்மாவிற்கும் எதைச் செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். உங்களுடைய ஒரு எண்ணத்திற்கு அவ்வளவு சக்தி இருக்கிறது, அதனை பாபாவுடைய சம்பந்தத்தோடு இணைத்து அளவற்றதாக்க முடியும். அவரது கட்டளை மற்றும் உங்களது எண்ணம். அவர் தனது ஆணையின் ஆதாரத்தில் எதை விரும்புகிறாரோ அதை செய்யமுடியும். அதேபோல உங்கள் ஒரு எண்ணத்தின் ஆதாரத்தில் ஆத்மாக்களை எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மேலே உயர்ந்த முடியும். ஏனெனில் பரமாத்ம அதிகாரம் உங்களுக்கு நேரடியாகக் கிடைத்திருக்கிறது
எந்தவொரு அதிகாரத்தையும் வரலாறு முழுவதும் பயன்படுத்த முடியாமல் போனதற்கு முக்கிய காரணம்–தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவது. அரசர்கள் தங்கள் அரசை இழந்தார்கள், தலைவர்கள் தங்கள் நாற்காலியை (பதவியை) இழந்தார்கள், சர்வாதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை இழந்தார்கள் – காரணம், தனது உண்மையான காரியத்தை விட்டுவிட்டு ஆடம்பரத்தில் மூழ்கி இருந்தார்கள், ஏதாவது ஒரு விசயத்திற்கு அடிமையாக இருந்தார்கள், அதனால் அதிகாரம் கை நழுவியது. ஏதோ ஒன்றிற்கு அடிமையாக இருந்தார்கள், எனவே அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தினார்கள். அதேபோல புண்ணிய ஆத்மாக்களாகிய உங்களுக்கு பாபா மூலமாக ஒவ்வொரு நொடிக்கும், ஒவ்வொரு எண்ணத்திற்கும் அதிகாரம் கிடைத்திருக்கிறது, அத்தாரிட்டி கிடைத்திருக்கிறது, அனைத்து அதிகாரங்களும் கிடைத்திருக்கிறது. அவைகளை சரியான வகையில், அதிகாரங்களின் மதிப்பை அறிந்துகொண்டு, அதற்குரிய வகையில் பயன்படுத்துவதில்லை. சின்னச்சின்ன விசயங்களில் தனது சோம்பேறித்தனத்தின் சுகத்தில் அல்லது வீணாக யோசிப்பது

அல்லது பேசுவதில் தவறாகப் பயன்படுத்துவதால் சேர்த்து வைத்த புண்ணிய செல்வங்களை அல்லது கிடைக்கப் பெற்ற ஈஸ்வரிய அதிகாரங்களை எப்படி பயன்படுத்த வேண்டுமோ அப்படி பயன்படுத்த முடிவதில்லை. இல்லையென்றால் உங்களுடைய ஒரு எண்ணமே அதிக சக்திவாய்ந்தது. சிறந்த பிராமணனின் எண்ணம் ஆத்மாக்களின் பாக்கிய ரேகையை வரையக்கூடிய சாதனமாக இருக்கிறது. உங்கள் ஒரு எண்ணம் ஒரு சுவிட்சாக இருக்கிறது அதை ஆன் செய்து நொடியில் இருளைப் போக்க முடியும்.

புண்ணிய ஆத்மாக்களின் எண்ணங்கள் ஒரு ஆன்மீக காந்தமாக இருக்கிறது, அது ஆத்மாக்களை ஆன்மீகத்தின் பக்கம் கவர்ந்து இழுக்கக்கூடியது. புண்ணிய ஆத்மாக்களின் எண்ணங்கள் லைட்ஹவுஸாக இருக்கிறது, அது தடுமாறிக்கொண்டிருப்பவர்களுக்கு சரியான இலக்கைக் காட்டக்கூடியது. புண்ணிய ஆத்மாக்களுடைய எண்ணங்கள் மிகவும் குளிர்ந்த சொரூபமாக இருக்கிறது, அது விகாரத்தீயால் எரிந்துகொண்டிருக்கும் ஆத்மாக்களை குளிர்விக்கக்கூடியது. புண்ணிய ஆத்மாக்களுடைய எண்ணங்கள் அப்படி சிறந்த ஆயுதங்களாக இருக்கிறது, அது அனேக புறவயப்பட்ட பந்தனமுள்ள ஆத்மாக்களுக்கு சுதந்திரம் தரக்கூடியது. புண்ணிய ஆத்மாக்களுடைய எண்ணங்களில் அந்தமாதிரி விசேச சக்திகள் இருக்கிறது, அது எப்படி மாயமந்திரங்களால் நடக்க முடியாததை நடத்திக் காட்டுகிறார்களோ அப்படி எண்ணங்களின் சக்திகள் மூலமாக நடக்க முடியாததையும் நடத்திக் காட்டுகிறது. வசப்படுத்தும் மகாமந்திரத்தின் மூலமாக புறவயத்தில் இருக்கும் ஆத்மாக்களை மின்மினிப் பூச்சைப்போல பறக்க வைக்க முடியும்.

எப்படி இந்தக் காலத்தில் இயந்திரங்களின் மூலமாக பாலைவனத்தையும் சோலைவனமாக மாற்றிவிடுகிறார்கள், மலைமீதும் பூச்செடிகளை வளர வைக்கிறார்கள். அப்படி இருக்க புண்ணிய ஆத்மாக்கள் உங்களுடைய உயாந்த எண்ணங்களின் மூலமாக நம்பிக்கை அற்றவரை நம்பிக்கை உடையவராக ஆக்க முடியாதா? இப்படி ஒவ்வொரு நொடியும் புண்ணிய செல்வத்தை சேர்த்து வையுங்கள். ஒவ்வொரு நொடியின் ஒவ்வொரு எண்ணத்தின் மதிப்பை அறிந்து எண்ணங்களையும் நொடிகளையும் பயன்படுத்துங்கள். உங்களுடைய ஒரு எண்ணத்தால் ஆத்மாவை கோடீஸ்வரராக்க முடியும் அதை இன்றைய அனேக செல்வந்தர்களாலும் செய்ய முடியாது, எனவே உங்கள் எண்ணத்தின் சக்தி எவ்வளவு சிறந்ததாக இருக்கிறது. விரும்பினால் அதை சேமியுங்கள் மற்றும் சேமிக்க வையுங்கள் அல்லது அதை வீணாக்குங்கள் அது உங்களைப் பொருத்தது. இழப்பவர்கள் பட்சாதாபப் படவேண்டியிருக்கும். சேர்த்து வைப்பவர்கள் அனைத்து பிராப்திகளின் ஊஞ்சலில் ஆடுவார்கள். சில நேரம் சுகத்தின் ஊஞ்சலில், சிலநேரம் அமைதியின் ஊஞ்சலில், சில நேரம் ஆனந்தத்தின் ஊஞ்சலில் ஆடுவார்கள். இழப்பவர்கள் ஊஞ்சலில் சுகமாக ஆடிக்கொண்டிருப்பவர்களைப் பார்த்து தனது பையை பார்த்துக்கொண்டே இருப்பார்கள். நீங்கள் எல்லோரும் ஊஞ்சலில் ஆடுபவர்கள்தானே. 10.12.79

**16.** அமிர்தவேளை சந்திப்பை கொண்டாடும் சக்தி, கிரகிக்க அதாவது தாரணை செய்யும் சக்தி, பாபா மூலமாக ஒவ்வொரு நாளும் விசேச எண்ணங்கள் வடிவ பிரேரணையை கேச் பண்ணும் சக்தி எல்லாவற்றையும்விட அதிக அவசியமாக இருக்கிறது. 17.12.79

**17.** தற்காலத்தில் எண்ணங்களின் குழப்பமும் பெரியதாக எண்ணப்படுகிறது. முந்தய காலத்தில் எண்ணங்களை பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை, விட்டுவிடுவார்கள், வார்த்தை மற்றும் செயலின்மீது கவனம் கொடுத்து வந்தார்கள் ஆனால் இப்போது மனதிலும் குழப்பம் இருக்கக்கூடாது. ஏனெனில் கடைசியில் மனதின் மூலமாக உலக மாற்றம் ஏற்பட வேண்டும். இப்போது மனதின் ஒரு எண்ணம் வீணாகப் போனாலும் நிறைய இழக்கிறீர்கள். ஒரு எண்ணத்தைக்கூட சாதாரண விசயமாகக் கருதாதீர்கள். அவ்வளவு கவனம் கொடுக்க வேண்டும். இப்போது நேரம் மாறிவிட்டது, முயற்சியின் வேகமும் மாறிவிட்டது. எனவே எண்ணங்களிலும் முற்றுப்புள்ளி தேவைப்படுகிறது. மனதின்மீதும் கவனம் கொடுங்கள், அதற்குத்தான் உயரும்கலை என்று சொல்லப்படுகிறது. உயரும் கலை எப்போதும் இருக்க வேண்டும், இப்போது சதா காலத்திற்காக ஒப்பந்தம் செய்யப்படுகிறது. 7.1.80

**18.** சூட்சும வதனத்தின் செயல்பாடுகள் அனைத்தும் சுத்த எண்ணங்களின் ஆதாரத்தில் நடைபெறுகிறது. அதைத்தான் பிரம்மா எண்ணம் கொண்டவுடன் உலகம் படைக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. எனவே எண்ணம் கொண்டவுடன் தோற்றம் பெறுகிறது. தோன்றும் மறையும் விளையாட்டாக இருக்கிறது. சைகையால் வடிவம் தோன்றுகிறது எனினும் விசேச ஆகார ரூபத்தின் செயல்பாடுகள் எல்லாம் மனோபலம் என்று சொன்னாலும் சரி, அல்லது எண்ணங்கள் என்று சொன்னாலும் சரி, அவைகளின் ஆதாரத்தில் நடைபெறுகிறது. பாப்தாதா எண்ணங்களின் சுவிட்சை ஆன் செய்யும்போது எல்லாம் தோன்றி விடுகிறது. அவர்களுடைய (விஞ்ஞானிகள்) செயல்பாடுகள் வெகுதொலைவு வரை வயர்லெஸ் மூலமாக நடைபெறுவது உங்களுக்குத் தெரியும். ஆனால் இங்கே மூன்று உலகங்கள் வரை 'வைஸ்லெஸ்சின்' சக்தி மூலமாக இணைப்பைக் கொடுக்க முடியும். அதற்கு புத்தியோகம் முற்றிலும் செம்மையாக இருக்க வேண்டும். **சூட்சுமவதனம் வரை எண்ணங்களை கொண்டு சேர்க்க நுண்ணிய, சர்வசம்மந்தங்களின் சாரமுடைய நினைவு வேண்டும். இதுவே அனைத்தையும்விட பவர்புல் 'வயராக' இருக்கிறது. இதன் இடையில் மாயா இடைஞ்சல் பண்ண முடியாது. 1.2.80**

**19.** வரதானி ரூபத்தின் மூலம் சேவை செய்ய, முதலில் தன்னிடத்தில் சுத்த எண்ணங்கள் இருக்க வேண்டும். மேலும் மற்ற எண்ணங்களையும் நொடியில் கட்டுப்படுத்துவதற்கான விசேச பயிற்சி தேவையாக இருக்கிறது. **நாள் முழுவதும் சுத்த எண்ணக் கடலில் அலைகளாகத் தவழவேண்டும்; மேலும் எப்போது வேண்டுமோ அப்போது சுத்த எண்ணக் கடலின் ஆழத்திற்குச் சென்று அமைதி சொரூபமாக வேண்டும், அதாவது பிரேக் பவர்புல்லாக இருக்க வேண்டும்.** எண்ணங்களின் சக்தி தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அதன் கூடவே ஆத்மாவிற்கு **இன்னும் இரண்டு சக்திகளாக புத்தியும் , சமஸ்காரமும் இருக்கிறது, இந்த மூன்றுமே தனது அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும். இந்த மூன்றில் ஒரு சக்தியின்மீதாவது ஒருவேளை அதிகாரம் குறைவாக இருக்குமானால் வரதானி சொரூபத்தின் சேவை எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்ய முடியாது. 20.01.81**

**20.** நொடியில் கர்மாதீத் நிலையில் இருக்கும் பயிற்சி தேவைப்படுகிறது. எப்போதெல்லாம் அப்படி ஏதாவது காரியம் செய்யவேண்டுமோ, அப்போது கர்மாதீத் நிலையின் ஆதாரத்தைக் கொண்டு நீங்கள் இங்கே நினைத்தவுடன் அங்கே அப்படி போய் சேரும் அதாவது நீங்கள் சொல்லிக்கொண்டே இருக்க அது அங்கே சென்றுகொண்டே இருப்பது போல சேரும். அப்படிப்பட்ட அனுபவங்கள் நிறைய ஏற்பட்டுக்கொண்டே இருக்கும் மேலும் இன்று எனக்கு இப்படி அனுபவம் ஏற்பட்டது என்று அது செய்தியாகவும் வெளிவரும். காட்சிகளும் ஏற்படும் மேலும் எண்ணங்கள் யாவும் நிறைவேறும். இப்போது இந்த விசேசங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. மகாரதிகளின் முயற்சி இப்போது விசேசமாக இந்தப் பயிற்சிகளுக்காகவே இருக்கிறது. அவ்வப்போது கர்மயோகி, அவ்வப்போது கர்மாதீத் நிலை. ஓரிடத்தில் நின்று கொண்டிருந்த போதும் நாலாபுறமும் எண்ணங்களின் சித்தி மூலமாக சேவைக்கு உதவிகரமாக இருக்க முடியும். 19.03.81

**21.** நீங்கள் எண்ணத்தின் சக்தி மூலமாக எந்தவொரு ஆத்மாவிற்கும் சேவை செய்ய முடியும். எண்ணத்தின் பட்டனை அமுத்தியவுடனே அங்கே செய்தி சென்று சேர்ந்துவிடும். எப்படி சூட்சும சரீரத்தின் மூலம் உதவி செய்யமுடியுமோ அப்படி எண்ணங்களின் சக்தி மூலமாக அனேக ஆத்மாக்களின் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க முடியும். தனது சிறந்த எண்ணங்களின் ஆதாரத்தில் அவர்களுடைய வீணான அல்லது பலவீனமான எண்ணங்களை மாற்றிவிட முடியும். இந்த விசேச சேவை நேரத்திற்குத் தக்கபடி அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. பிரச்சினைகள் அப்படி வரும் அதன்மூலம் ஸ்தூல சாதனங்கள் எல்லாம் அழிந்துபோய்விடும். பிறகு என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்? அந்த அளவு தன்னுடைய எண்ணங்களை சக்திமிக்கதாக்க வேண்டும் அதன்மூலம் அதன் பிரபாவம் வெகுதூரம் வரை போக வேண்டும். எந்த அளவு சக்தி அதிகமாக இருக்கிறதோ அந்த அளவு வெகுதூரம் வரை பரவும். எனவே எண்ணங்களுக்கும் அவ்வளவு சக்தி வந்துவிடும் அதன்மூலம் நீங்கள் இங்கே நினைக்க அங்கே அதன் பலன் கிடைக்கும். எப்படி பாபா பக்தியின் பலன் கொடுக்கிறாரோ அதேபோல, சிறந்த ஆத்மாக்களாகிய நீங்கள் பரிவாரத்திற்கு

சகயோகத்தின் பலன் தருவீர்கள் மேலும் அந்த பலனை விதவிதமாக அனுபவம் செய்வார்கள், இந்த சேவையும் ஆரம்பம் ஆகிவிடும். 15.04.81

**22.** கண்களின் பாஷை எண்ணங்களின் பாஷையாக இருக்கிறது. எண்ணங்களின் சக்தியானது உங்கள் வார்த்தை சப்தத்தின் வேகத்தைவிட அதிவேகமாக காரியங்களைச் செய்கிறது. எனவே **சிறந்த எண்ணங்களின் சக்தியை அப்படி சுத்தமாக்குங்கள். அதில் வீணானவைகளின் அசுத்தம் கொஞ்சம்கூட இருக்கக் கூடாது. இதைத்தான் லைன் க்லியர் என்று சொல்லப்படுகிறது.**
இந்த எண்ணங்களின் மூலமாக பல காரியங்கள் வெற்றிபெறும் சித்தியை அனுபவம் செய்வீர்கள். எந்த ஆத்மாக்களிடத்தில், எந்த ஸ்தூல காரியங்களில் அல்லது சமபந்தம் தொடர்பில் உள்ள ஆத்மாக்களின் சமஸ்காரங்களில் வாய் மூலமாகவோ அல்லது மற்ற சாதனங்கள் மூலமாகவோ மாற்றத்தை கொண்டுவந்த போதும் சம்பூரண வெற்றியை அனுபவம் செய்ய முடியவில்லையோ, அந்த எல்லா நம்பிக்கைகளும் எண்ணங்களின் சக்தி மூலமாக முழு வெற்றி பெறும், அப்போது அது ஏற்கனவே நிறைவேறிவிட்டதைப்போல இருக்கும். 4.10.81

**23.** அமைதியின் சக்தி ‘வயர்லெஸ்’சைவிட வேகமானது. உங்கள் எண்ணங்களை எந்த ஆத்மாவுக்கும் செலுத்த முடியும். எப்படி அறிவியலின் சக்தி மாற்றவும் செய்கிறது, பெருக்கவும் செய்கிறது, அழிக்கவும் செய்கிறது, படைக்கவும் செய்கிறது, கலவரத்தையும் உண்டாக்குகிறது மேலும் ஓய்வையும் தருகிறது. ஆனால் **அமைதி சக்தியின் விசேச இயந்திரமாக இருப்பது ‘சுப எண்ணங்கள்’. இந்த எண்ணங்களின் இயந்திரம் மூலமாக எதை விரும்புகிறீர்களோ அது நிறைவேறுவதை பார்க்க முடியும்.** முதலில் தன்மீது செலுத்திப் பாருங்கள். உடலின் வியாதி மீது செலுத்திப் பாருங்கள் அப்போது அமைதி சக்தியால் கர்மபந்தன ரூபம் இனியசம்மந்த ரூபமாக மாறிவிடும். பந்தனம் எப்போதும் கசப்பாக இருக்கிறது; சம்பந்தம் எப்போதும் இனிமையாக இருக்கிறது. இந்த கர்மசுமை (வியாதி) –கர்மத்தின் கடுமையான பந்தனம், அது அமைதி சக்தியினால் தண்ணீரில் போட்ட கோடுபோல அனுபவமாகும். 21.2.83

**24.** மாஸ்டர் படைப்பவர் நொடியில் தனது சுத்த எண்ணங்கள் வடிவ கட்டளை மூலமாக எந்த வாயுமண்டலத்தை உருவாக்க விரும்புகிறாரோ அதை உருவாக்க முடியும். எப்படிப்பட்ட அதிர்வலைகளைப் பரப்ப விரும்புகிறாரோ அவைகளைப் பரப்ப முடியும். எந்த சக்தியை அழைக்கிறாரோ அந்த சக்தி அவருக்கு உதவியாள் ஆகிவிடும். எந்த ஆத்மாவிற்கு எது கிடைக்கவில்லையோ அதை அறிந்து, சர்வ பிராப்திகளின் மாஸ்டர் வள்ளலாகி அந்த ஆத்மாக்களுக்கு அவைகளைக் கொடுக்க முடியும். 2.5.83

**25. சாந்த சக்தி உடைய ஆத்மா தன்னிலும், எண்ணத்தின் வேகத்திலும், பேச்சிலும், தொடர்பிலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் சாந்தமாக இருப்பார். எண்ணத்தின் வேகம் அதிகமாவதன் காரணமாக வீணானவைகளும் அதிகமாகின்றன, மேலும் அவைகளை கட்டுப்படுத்துவதற்கும் நேரம் செலவாகிறது.** எப்போது வேண்டுமோ அப்போது கட்டுப்படுத்த முடிய வேண்டும் அல்லது மாற்ற முடிய வேண்டும். இதற்கு நேரத்தையும் சக்தியையும் அதிகம் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. சரியான வேகத்தில் செல்லக்கூடியவர் சாந்தத்தின் சக்தி ரூபத்தில் இருப்பவர் வீணானவற்றில் இருந்து பாதுகாப்பாக இருக்கிறார். விபத்து நடக்காதபடி பாதுகாப்பாக இருக்கிறார். இது ஏன், என்ன, இப்படி அல்ல அப்படி என்ற இந்த வீணானவைகள் அவரை விட்டு வேகமாக விலகிவிடுகின்றன. 21.2.85

**26. எண்ணங்களின் பாஷை,** இதுவும் மிகச்சிறந்த பாஷையாக இருக்கிறது. ஏனெனில் எண்ண சக்தி அனைத்திலும் சிறந்த சக்தியாக, மூல சக்தியாக இருக்கிறது. மேலும் அனைத்தைக் காட்டிலும் வேகமான பாஷை இந்த எண்ணங்களின் பாஷைதான். ஒருவர் எவ்வளவு தொலைவில் இருந்தாலும், எந்த சாதனங்களும் இல்லாமல் போனாலும் எண்ணங்களின் பாஷை மூலமாக யாருக்கு வேண்டுமானாலும் செய்தியை கொடுக்க முடியும். கடைசியில் இந்த எண்ணங்களின் பாஷை செயலுக்கு

வரும். அறிவியல் சாதனங்கள் எல்லாம் செயலிழந்து விடும் அப்போது அமைதியின் சாதனங்கள் செயலுக்கு வரும். எனினும் எந்தவொரு இணைப்பையும் ஏற்படுத்துவதற்கு லைன் எப்போதும் கிளீயராக இருக்க வேண்டும். எந்த அளவு ஒரு பாபா மற்றும் அவர் மூலமாக சொல்லப்பட்ட ஞானத்தின்மீது அல்லது அந்த ஞானத்தின் மூலமாக சேவையில் எப்போதும் பிஸியாக இருக்கக்கூடிய பயிற்சி இருக்குமோ, அந்த அளவு சிறந்த எண்ணங்கள் இருக்கின்ற காரணத்தால் லைன் க்லியராக இருக்கும். வீண் எண்ணங்கள் இடைஞ்சலாக இருக்கின்றன. எந்த அளவு வீணானவைகள் அழிகிறதோ, சக்திமிக்க எண்ணங்கள் செயல்படுகிறதோ அந்த அளவு எண்ணங்கள் சிறந்ததாக, பாஷையை அந்த அளவு தெளிவாக அனுபவம் செய்வார்கள். எப்படி வார்த்தையால் பேசுவதை அனுபவம் செய்கிறார்கள். **எண்ணங்களின் பாஷையால் ஒரு நொடியில் வார்த்தையின் பாஷையைக் காட்டிலும் மிக அதிகமாக யாரை வேண்டுமானாலும் அனுபவம் செய்ய வைக்க முடியும். நொடியில் ஜீவன் முக்தி என்று சொல்லப்படுகிறது அதை அனுபவம் செய்யவைக்க முடியும். 4.12.85**

**27.** எண்ணங்களில் ஒற்றுமை, பேச்சில் ஒற்றுமை மற்றும் சமஸ்காரங்களில் ஒற்றுமை. எவைகள் பாபாவுடைய எண்ணங்களாக இருக்கின்றனவோ அவைகள் ரைட் ஹேண்டாக இருப்பவரின் எண்ணங்களாக இருக்கும். பாபாவிடம் வீண் எண்ணங்கள் இருப்பதில்லை. எப்போதும் சக்திசாலி எண்ணங்களே இருக்கும் அதுதான் அடையாளம். **பாபாவுடைய சொற்கள் எப்போதும் சுகம்தரும் சொற்களாக, எப்போதும் மதுரமான சொற்களாக, எப்போதும் மகாவாக்கியமாக இருக்கிறது, சாதாரண சொற்களாக இருப்பதில்லை.**
சக்திமிக்க எண்ணங்கள், பார்வை அல்லது உணர்வின் அடையாளமாக இருக்கிறது. அது சக்திசாலியாக இருக்கக்கூடிய காரணத்தால் யாரை வேண்டுமானாலும் மாற்றிக் காட்ட முடியும். எண்ணங்களின் மூலமாக சிறந்த உலகைப் படைப்பார்கள். உணர்வுகள் மூலமாக வாயுமண்டலத்தை மாற்றி அமைப்பார்கள். பார்வை மூலமாக அசரீரி ஆத்ம சொரூபத்தின் அனுபவத்தை ஏற்படுத்துவார்கள். 16.12.85

**28.** சக்திசாலி எண்ணங்களின் உதவி இப்போது விசேசமாக தேவைப்படுகிறது. சுயத்தின் முயற்சி என்பது தனிப்பட்டது ஆனால் சிறந்த எண்ணங்களின் உதவியானது இப்போது முக்கியமாகத் தேவைப்படுகிறது. இந்த சேவை விசேச ஆத்மாக்களாகிய உங்களுடையது. எண்ணங்களின் மூலமாக உதவி செய்வது என்ற இந்த சேவையை அதிகப்படுத்துங்கள். வார்த்தைகள் மூலமாக அறிவுரைகள் வழங்கும் காலம் முடிந்துவிட்டது. இப்போது சிறந்த எண்ணங்களைக்கொண்டு மாற்றத்தை உண்டாக்க வேண்டும். சிறந்த பாவனைகளைக் கொண்டு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் இந்த சேவை அவசியமாக இருக்கிறது. இந்த பலம் அனைவருக்கும் தேவையாக இருக்கிறது. எல்லோரும் எண்ணங்களை எழுப்புகிறீர்கள் எனினும் எண்ணங்களில் பலத்தை நிரப்ப வேண்டும் அது அவசியமாக இருக்கிறது. எனவே யார் எந்த அளவு சுயம் சக்திசாலியாக இருக்கிறாரோ அந்த அளவு பிறருடைய எண்ணங்களில் பலத்தை நிரப்ப முடியும். எப்படி இன்றைய காலத்தில் சூரியனின் சக்தியை சேர்த்து வைத்து பல காரியங்கள் செய்யப் பயன்படுத்துகிறார்கள். இங்கும் எண்ணங்களின் சக்தி சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது, அதைக்கொண்டு அடுத்தவரிடத்திலும் பலத்தை நிரப்ப முடியும். காரியங்களை நிறைவேற்ற முடியும். எங்களிடம் தைரியம் இல்லை என்று அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள் என்றால் அவர்களுக்கு தைரியம் கொடுக்க வேண்டும். வார்த்தையாலும் தைரியம் வருகிறது எனினும் சதாகாலத்திற்கு இருப்பதில்லை. வார்த்தையோடு கூடவே சிறந்த எண்ணங்களின் சூட்சும சக்தி அதிக வேலை செய்கிறது. ஒரு பொருள் எந்த அளவு சூட்சுமமாக இருக்கிறதோ அந்த அளவு அதிகமான பலனைத் தருகிறது. வார்த்தையைக் காட்டிலும் எண்ணங்கள் சூட்சுமமானது இல்லையா. எனவே இன்று இதற்கு தேவை இருக்கிறது. இந்த எண்ணங்களின் சக்தி மிகவும் சூட்சுமமாக இருக்கிறது. எப்படி ஊசி மூலமாக இரத்தத்தில் சக்தியை நிறைக்கிறார்களோ, அதுபோல எண்ணங்கள் ஒரு ஊசியின் வேலையைச் செய்கிறது. அது உள் உணர்வில் எண்ணத்தின் மூலமாக எண்ணத்தில் சக்தியை நிரப்புகிறது. இப்போது இந்த சேவை மிகவும் அவசியமாக இருக்கிறது. 1.1.86

**29.** பிரம்மாவின் படைப்பு இரண்டுவிதமாக உள்ளது என்று பாடப்பட்டிருக்கிறது. ஒன்று பிரம்மாவின் வாய் வழியாக வெளிவந்த பிராமணர்கள். இரண்டாவது பிரம்மா எண்ணங்களால் உலகைப் படைத்தார். அப்படி என்றால் பிரம்மா பாபா அவர்கள் எவ்வளவு காலமாக சிறந்த சக்திசாலி எண்ணங்களை உருவாக்கி இருக்கிறார். அதாவது பாப்தாதா இருவரும்தான். இருந்தும் படைப்பை குறித்து சொல்லும்போது சிவனின் படைப்பு என்று சொல்லப்படுவதில்லை. **சிவவம்சி என்று சொல்கிறார்கள்.** சிவகுமார், சிவகுமாரி என சொல்வதில்லை. பிரம்மாகுமார் பிரம்மாகுமாரி என்று சொல்கிறார்கள். எனவே பிரம்மா அவர்கள் விசேசமாக சிறந்த எண்ணங்களைக் கொண்டு அழைத்திருக்கிறார் அதாவது படைப்பை படைத்திருக்கிறார். எனவே இங்கு பிரம்மாவின் சக்திசாலி எண்ணங்களின் அழைப்பால் ‘சாகாரத்தில்’ வந்திருக்கிறீர்கள்.

எண்ணங்களின் படைப்பும் குறைந்ததல்ல. எண்ணங்கள் சக்திமிக்கதாக இருக்கும்போது தூரத்தில் இருந்து, வேறு திரைக்குள் இருந்து குழந்தைகளை தனது குடும்பத்திற்குள் கொண்டுவர வேண்டியதாக இருந்தது, அதனால் சிறந்த சக்திசாலி எண்ணங்களால் பிரேரணை தந்து அருகில் கொண்டுவந்தார். எனவே இந்த சக்திசாலி எண்ணங்களின் படைப்பும் சக்திசாலிகளாக இருக்கிறார்கள். அப்படி புத்திக்கு யாரோ விசேசமாக பிரேரணை தந்து அருகில் கொண்டு வருகிறார் என்ற அனுபவமும் சிலருக்கு இருந்தது. பிரம்மாவின் சக்திசாலி எண்ணத்தின் காரணத்தினால் பிரம்மாவின் சித்திரத்தைப் பார்த்தவுடனே சைத்தன்யத்தின் அனுபவம் கிடைத்தது. 29.3.86

**30.** சீக்கிரம் பயந்துவிடுகிறீர்கள். அதனால் என்னவாகிறது? எதை நல்லபடியாக யோசித்தீர்களோ அதுவும் பயத்தின் காரணத்தால் மாறிவிடுகிறது. எனவே பயப்படாதீர்கள். கர்மத்தைப் பார்த்து கர்மத்தின் பந்தனத்தில் சிக்காதீர்கள். என்ன இப்படி ஆகிவிட்டது, எப்படி இப்படி ஆகலாம், இப்படி எல்லாம் நடக்கக்கூடாதே, எனக்கு மட்டுமே ஏன் ஏற்படுகிறது, எனது பாக்கியமே அப்படித்தான் போல என்றெல்லாம் கயிறுகளை மேலும் மேலும் கட்டிக்கொண்டே போகிறீர்கள். இந்த எண்ணங்களே கயிறுகள். எனவே கர்ம பந்தனத்தில் வந்துவிடுகிறீர்கள். வீண் எண்ணங்களே கர்ம பந்தனத்திற்கான சூட்சும கயிறுகளாக இருக்கின்றன. கர்மாதீத் ஆத்மா என்ன சொல்வார் – **என்ன நடக்கிறதோ அது நல்லது, நானும் நன்றாக இருக்கிறேன், பாபாவும் நன்றாக இருக்கிறார், டிராமாவும் நன்றாக இருக்கிறது. இப்படி நினைப்பது பந்தனத்தை வெட்டும் கத்தரிக்கோலின் வேலையைச் செய்கிறது.** பந்தனங்கள் அறுந்துவிட்டால் கர்மாதீத் ஆகிவிட்டீர்கள் அல்லவா. கல்யாணகாரி தந்தையின் குழந்தையாக இருப்பதால் சங்கமயுகத்தின் ஒவ்வொரு நொடியும் நன்மை தரக்கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு நொடியும் உங்களுடைய வேலையே நன்மை செய்வதுதான், சேவை செய்வதே நன்மை செய்வதாகும். பிராமணனின் தொழிலே உலகை மாற்றுவது மற்றும் உலகிற்கு நன்மை செய்வது. அப்படி நிச்சயபுத்தி உடைய ஆத்மாவிற்கு ஒவ்வொரு நொடியும் நிச்சயமாக நன்மை செய்வதாகவே இருக்கிறது. 18.12.87

**31.** சுபபாவனை என்றால் சக்திசாலி எண்ணங்கள். அனைத்து சக்திகளையும் கொண்டு எண்ணங்களின் வேகத்தை துரிதப்படுத்துவது. அறிவியல் எத்தனையோ வேகமாகச் செல்லும் சாதனங்களை உருவாக்கி இருக்கிறது, அந்த அனைத்தையும்விட விரைவானது எண்ணத்தின் வேகம். இந்த ஆத்மாக்களுக்கு நன்மை உண்டாகட்டும் என எந்த ஆத்மாவிற்கோ அல்லது எல்லையற்ற உலக ஆத்மாக்களுக்கோ சுபபாவனை வைக்கிறீர்கள், அதாவது சக்திசாலி சுப மற்றும் சுத்த எண்ணங்களை நினைக்கிறீர்கள். உங்களிடம் எண்ணம் அல்லது பாவனை தோன்றும்போது அந்த ஆத்மாவிற்கு, யாரோ ஒருவரின் விசேச உதவிமூலம் எனக்கு அமைதி அல்லது சக்தி கிடைத்துக்கொண்டிருக்கிறது என்ற அனுபவம் ஏற்படும். பல காரியங்கள் செய்யும்போது என்னுடைய தைரியம் அல்லது திறமை அவ்வளவு இல்லாமல் இருந்தது ஆனால் பாப்தாதாவின் எக்ஸ்ட்ரா உதவியால் இந்தக் காரியம் எளிதில் வெற்றியாகி விட்டது அல்லது தடைகள் அகன்று விட்டன என இப்போதுகூட சில குழந்தைகள் அனுபவம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட மாஸ்டர் உலக நன்மை செய்யும் ஆத்மாக்களுடைய சூட்சும சேவையை வெளிப்படையான ரூபத்தில் அனுபவம் செய்வார்கள். நேரத்தையும் குறைவாக, சாதனங்களையும் குறைவாக, செல்வத்தையும் குறைவாக பயன்படுத்துவீர்கள். அதற்காக மனம் மற்றும்

புத்தி எப்போதும் சுதந்திரமாக இருக்க வேண்டும். சின்னச் சின்ன விசயங்களில் மனம் மற்றும் புத்தியை பிஸியாக வைக்கிறீர்கள் எனவே சேவைக்கான சூட்சும வேகத்தின் 'லைன்' தெளிவாக இருப்பதில்லை. சாதாரண விசயங்களில்கூட தனது மனம் மற்றும் புத்தியின் லைனை அதிகம் பிஸியாக வைத்திருக்கிறீர்கள், எனவே இந்த **சூட்சும சேவை தீவிர வேகத்தில் நடைபெறாமல் இருக்கிறது. அதற்கான விசேச கவனம் – 'ஏகாந்தம் மற்றம் ஒருமுகம்' . 27.11.89**

**32.** தேவையில்லாமல் துக்கத்தைப் பெறுவதுதான் வீண் எண்ணங்கள் ஓடுவதற்கு காரணமாக இருக்கிறது. கேட்டவுடன் துக்கம் வந்துவிடுகிறது. கேட்ட விசயம் விரும்பாதபோதும் மனதில் ஓட ஆரம்பிக்கிறது – இதை ஏன் சொன்னார்கள், இவர் சொன்னது சரியில்லையே, இப்படி நடக்கக்கூடாதே ... என வீணானதை கேட்கக்கூடிய, பார்க்கக்கூடிய பழக்கம் மனதில் 63 ஜென்மங்களாக இருந்து வருகிறது, எனவே இப்போதுகூட அந்தப் பக்கம் கவரப்பட்டு விடுகிறீர்கள். சின்னச் சின்ன தவறுகள் மனதை சுமையாக்கி விடுகிறது பிறகு பாரமாகிவிட்ட காரணத்தால் உயர்ந்த நிலையை நோக்கி பறக்க முடிவதில்லை. இது மிக ஆழமான விளைவு. எப்படி முந்தய பிறவிகளின் பாவகர்ம சுமையின் காரணங்கள் ஆத்மாவை பறக்க விடுவதில்லையோ, அதேபோல இந்த ஜன்மத்தின் சின்னச்சின்ன தவறுகளின் சுமை, எப்படிப்பட்ட நிலையை விரும்புகிறீர்களோ அதை அனுபவம் செய்ய விடுவதில்லை. 17.12.89

**33.** இல்லறத்தில் இருந்தபோதும் எல்லோரும் பற்றற்றும் (நியாரா) அன்பாகவும் (பியாரா) இருக்கிறீர்கள் அல்லவா. எந்தவொரு பந்தனத்திலும் சிக்கிக்கொள்வதில்லைதானே? அரை கல்பமாக தன்னை சிக்கவைத்துக் கொண்டிருந்தீர்கள், வெளிவர முயற்சி செய்தும் சிக்கிக்கொண்டே இருந்தீர்கள். இப்போது பாபா அவர்கள் அனைத்து பந்தனத்தில் இருந்தும் விடுவித்துவிட்டார், எனவே எண்ணங்களில்கூட ஏதாவது சம்மந்தத்தில், தனது தேகத்தில், பொருட்களில் மாட்டிக்கொள்ள கூடாது. 63 பிறவிகள் அனுபவம் செய்து பார்த்துவிட்டீர்கள் இல்லையா, சிக்குவதால் என்ன கிடைத்தது? என்ன இருந்ததோ அதையும் இழந்துவிட்டீர்கள் இல்லையா. எனவே **எண்ணங்களிலும் பந்தனமின்றி இருக்க வேண்டும். இதைத்தான் பற்றின்றியும் (நியாரா), அன்பாகவும் (பியாரா) இருப்பது என்று சொல்லப்படுகிறது.** எண்ணத்தில்கூட பந்தனம் கவரக்கூடாது. ஏனெனில் எண்ணத்தில் வந்ததென்றால் பிறகு செயலில் வந்துவிடுகிறது. எனவே எண்ணத்திலேயே அழித்துவிடுங்கள். இந்த பற்றற்ற மற்றும் அன்பான அதாவது அவ்யக்த நிலையை விசேசமாக பயிற்சி செய்யுங்கள். உலக உணர்விற்கு வந்தாலும், உலக உணர்வின் கவர்ச்சிக்கு ஆளாகாதீர்கள். 31.12.92

**34.** அனைத்திலும் சிறந்த பொக்கிஷம் எண்ணங்களின் பொக்கிஷம் மேலும் உங்கள் அனைவருடைய சிறந்த எண்ணங்களே பிராமண வாழ்விற்கு ஆதாரமாக இருக்கிறது. எண்ணங்களின் பொக்கிஷம் மிகுந்த சக்தி வாய்ந்தது. எண்ணங்கள் மூலமாக நொடியைக் காட்டிலும் குறைந்த நேரத்தில் பரந்தாமம் வரை சென்று சேர முடியும். எண்ணங்களின் சக்தி ஒரு 'ஆட்டோமேட்டிக் 'ராக்கெட்' 'டைவிட அதிவேகமாகச் செல்லும் ராக்கெட்டாக இருக்கிறது. எங்கே வேண்டுமோ அங்கே போகமுடியும். உட்கார்ந்திருந்தாலும் சரி, ஏதாவது காரியம் செய்துகொண்டிருந்தாலும் சரி எண்ணங்களின் பொக்கிஷத்தின் மூலமாக அல்லது சக்திகள் மூலமாக எந்த ஆத்மாவின் அருகில் செல்ல விரும்புகிறீர்களோ அங்கே போய் சேர முடியும். எந்த நிலையை தனதாக்க விரும்புகிறீர்களோ, அது உயர் நிலையோ, மகிழ்ச்சியோ, வீணோ, பலவீனமோ எதுவாக இருந்தாலும் நொடியின் எண்ணத்தில் அதை தனதாக்கலாம். நான் சிறந்த பிராமண ஆத்மாவாக இருக்கிறேன் என நினைத்தவுடன் அந்த சிறந்த நிலை மற்றும் சிறந்த அனுபூதி உண்டாகிறது, மற்றபடி நான் பலவீன ஆத்மா, என்னிடத்தில் எந்த சக்தியும் இல்லை என நினைத்தவுடன் கனநேர எண்ணத்தில் மகிழ் சி மறைந்துபோய்விடுகிறது. கவலையின் அறிகுறி மனநிலையில் அனுபவமாகிறது. எனினும் இரண்டு நிலைக்கும் ஆதாரம் எண்ணங்களே. நினைவில் அமரும்போதுகூட எண்ணத்தின் ஆதாரத்திலேயே நிலையை உருவாக்குகிறீர்கள். நான் புள்ளியாக இருக்கிறேன், நான் பரிஸ்தாவாக இருக்கிறேன் ...

இந்த நிலைகள் எண்ணங்களாலேயே உருவாகிறது. எனவே எண்ணங்கள் எவ்வளவு சக்திமிக்கதாக இருக்கிறது.
ஞானத்தின் ஆதாரமும் எண்ணங்களே. நான் ஆத்மா, இந்த சரீரம் அல்ல – இவ்வாறு நினைக்கிறீர்கள். முழு நாளும் மனம்–புத்திக்கு சுத்த எண்ணங்களைக் கொடுக்கிறீர்கள் அல்லது சிந்தனையின்போது சுத்த எண்ணங்களை நினைக்கிறீர்கள். எனவே சிந்தனை சக்திக்கு ஆதாரமாக இருப்பதும் எண்ணங்களின் சக்தியே. தாரணை செய்கிறீர்கள், இன்று நான் பொறுமை சக்தியை கடை பிடிப்பேன் என மனம்–புத்திக்கு எண்ணங்களைக் கொடுக்கிறீர்கள் என்றால் தாரணைக்கும் ஆதாரமாக இருப்பது எண்ணங்களே. சேவை செய்கிறீர்கள், திட்டம் தீட்டுகிறீர்கள் என்றாலும் சுத்த எண்ணங்களே ஓடுகின்றன அல்லவா! சுத்த எண்ணங்களைக் கொண்டே திட்டம் தீட்டப்படுகிறது. அனுபவம் இருக்கிறதல்லவா! எனவே பிராமண வாழ்க்கையின் சிறந்த பொக்கிஷமாக எண்ணங்களின் பொக்கிஷம் இருக்கிறது. ஒருவேளை நீங்கள் எண்ணங்களின் பொக்கிஷங்களை வெற்றிபெறச் செய்தீர்கள் என்றால் உங்கள் மனநிலை, செயல் எல்லாம் முழுநாளும் மிக நன்றாக இருக்கும். எண்ணங்களின் பொக்கிஷங்களை வீணாக்கினீர்கள் என்றால் ரிசல்ட் என்னவாகும்? எந்த நிலையை விரும்புகிறீர்களோ அது இருக்காது. வீண் எண்ணங்கள் புத்தியையும் பலவீனப் படுத்துகிறது மனநிலையையும் பலவீனப் படுத்துகிறது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே. யாருடைய மனதில் வீண் எண்ணங்கள் ஓடுகிறதோ அவருடைய புத்தி பலவீனமாகிறது, குழப்பம் ஏற்படுகிறது. நிர்ணயம் சரியாக இருப்பதில்லை. எப்போதும் குழம்பியபடி இருப்பார்கள். என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்பதை சரியாக நிர்ணயம் செய்ய முடிவதில்லை. வீண் எண்ணங்களின் வேகம் மிக அதிகமாக இருக்கிறது. வீண் எண்ணங்களைப் பற்றி எல்லோருக்கும் அனுபவம் இருக்கிறது. கெட்ட எண்ணங்களல்ல, வீணானவைகளின் அனுபவம் எல்லோருக்கும் இருக்கிறது. மிக வேகமாக இருப்பதால் அதை கட்டுப்படுத்த முடிவதில்லை. கட்டுப்பாடு இல்லாமல் போய்விடுகிறது. கவலைப் படுவது அல்லது மகிழ்ச்சி இல்லாமல் இருப்பது அல்லது உதாசீனமாக இருப்பது, வாழ்க்கையில் குதூகலமில்லாமல் இருப்பது, இவைகளெல்லாம் வீண் எண்ணங்களின் அடையாளம். என்னுடைய மனோநிலை ஏன் இப்படி இருக்கிறது? என்பதே பலருக்கு தெரிவதில்லை. அவர்கள் பெரிய விசயங்களைப் பார்க்கிறார்கள் அதாவது எந்தப் பாவத்தையும் செய்யவில்லை, எந்த தவறையும் செய்ய வில்லை இருந்தும் குஷி குறைவாக இருப்பது ஏன், உதாசீனம் ஏன், இன்று வாழ்க்கையில் குதூகலம் குறைவாக இருப்பது ஏன், எதையும் செய்ய மனம் விரும்பவில்லையே என்றெல்லாம் நினைக்கிறார்கள். காரணம் என்ன? விகர்மங்களைப் பார்க்கிறீர்கள், கெட்ட எண்ணங்களைப் பார்க்கிறீர்கள், பெரிய தவறுகளை செக் பண்ணுகிறீர்கள் ஆனால் இந்த சூட்சும தவறுகள் தேவையில்லாமல் பொக்கிஷங்களை இழக்க வைக்கிறது. நிச்சயமாக வீணாக, தேவையின்றி இழக்கும் கணக்கு அதிகமாகிவிட்டது. எப்படி உடல் வியாதி முதலில் பெரியதாக இருக்காது, சிறியதாக இருக்கும் ஆனால் சிறியதிலிருந்து பெரிதாகி பெரிதாகி பெரிய ரூபமாகி விடுகிறது பிறகு பெரியதாகத் தெரியவருகிறது, சிறியதாகத் தெரிவதில்லை, அதேபோல இந்த வீணானவைகளின் கணக்கு, இழக்கும் கணக்கு மீண்டும் மீண்டும் அதிகமாகிறது. பாவ கணக்கு வேறு, இது பொக்கிஷங்களை இழக்கும் கணக்கு. பாவச் செயலோ தெளிவாகத் தெரியவருகிறது, இன்று நான் இதைச் செய்தேன் அதனால் மகிழ்ச்சி இல்லாமல் இருக்கிறேன் என அதை உணர்ந்து கொள்கிறீர்கள். ஆனால் தேவையில்லாமல் இழக்கும் கணக்கு, அதன் செக்கிங் குறைவாக இருக்கிறது. சரி இன்றைய நாள் முடிந்துவிட்டது, **எல்லாம் நலம், அப்படி எந்தத்தவறையும் செய்யவில்லை என நீங்கள் நினைக்கிறீர்கள் ஆனால் தனது எண்ணங்களின் சிறந்த பொக்கிஷங்களை சேர்த்து வைத்தீர்களா அல்லது இழந்தீர்களா என்பதை செக் செய்தீர்களா? ஒருவேளை சேர்த்து வைக்கவில்லை என்றால் இழந்த கணக்கில் சேர்ந்திருக்கும் அல்லவா!** நீங்கள் அரியபல செயல்களைச் செய்கிறீர்கள் என்பதை மனதில் உணர்ந்திருக்கிறீர்கள் எனினும் இன்று என்னென்ன பொக்கிஷங்களை சேர்த்து வைத்தேன்? என்ற கணக்கை செக் செய்யுங்கள். 'செக்' பண்ண வருகிறதா? தனக்கு 'செக்கர்' ஆகியிருக்கிறீர்களா அல்லது மற்றவருக்கு 'செக்கர்' ஆகியிருக்கிறீர்களா? ஏனெனில் தன்னை உள்ளிருந்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது, பிறரை வெளியே இருந்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது, அது சகஜமாக இருக்கிறது. எனவே எது விசேசமான சிறந்த எண்ணங்களின் பொக்கிஷமாக இருக்கிறதோ அது அதிகம்

வீணாகிக்கொண்டிருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். வீணாகிவிட்டதா அல்லது சாமார்த்தியமாக இருக்கிறதா? என்பதை உங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. 25.03.95

**35.** சேவை செய்ததன் வெளிப்படையான பலன் சேமிப்பாகி உள்ளதா? அல்லது வெறும் முயற்சி மட்டும் செய்தீர்களா? சேவையில் 8 மணி நேரத்தை செலவழித்தீர்கள் எனில் முழு 8 மணி நேர சேவையும் சேமிப்பாகி உள்ளதா? நேரம் சேமிப்பாகி உள்ளதா? அல்லது பாதி சேமிப்பானது, பாதி இங்குமங்கும் அலைவதில், யோசிப்பதில் போய்விட்டதா? சிறந்த எண்ணங்கள், **சுபபாவனை, சுப ஆசைகளின் எண்ணங்கள் சேமிப்பாகிறது. எனவே நாள் முழுவதும் சேமிப்பு கணக்கை நோட் பண்ணுங்கள்.** எப்போது சேமிப்பு கணக்கில் அதிகமாகிக் கொண்டிருக்கிறதோ அப்போது தானகவே வைரமாகி விடுவீர்கள். இப்போது உங்கள் எண்ணங்களும் நேரமும் நல்லதாகவும் இல்லை கெட்டதாகவும் இல்லை. கெட்டதாக இல்லை அதாவது தப்பி விட்டீர்கள் ஆனால் நல்லதில் சேர்ந்ததா? புரிந்ததா? **நேரத்தையும், எண்ணத்தையும் மிச்சப்படுத்துங்கள், இப்போது எவ்வளவு மிச்சப்படுத்துகிறீர்களோ, எவ்வளவு சேர்த்து வைக்கிறீர்களோ அவ்வளவு கல்ப முழுவதும் அதற்குத் தக்கபடி ராஜ்ஜியமும் செய்வீர்கள் மற்றும் பூஜைக் குரியவராகவும் ஆவீர்கள். 16.2.96**

**36.** ஆகுமா ஆகாதா எனத் தெரியவில்லையே என மெஜாரிட்டி குழந்தைகள் தனது பலவீன எண்ணங்களை முதலிலேயே தோற்றுவிக்கிறார்கள். இந்த தன்னுடைய பலவீனமான எண்ணமே மகிழ்ச்சி உடையவராக அல்லாமல் கவலை உடையவராக ஆக்குகிறது. நடக்குமா, நடக்காதா? என்னவாகும்? தெரியவில்லையே ... இந்த எண்ணங்கள் சுவராகி விடுகிறது பிறகு வெற்றி அந்த சுவருக்குள் ஒளிந்துகொள்கிறது. நம்பிக்கை உடையவருக்கு வெற்றி என்பது உங்களுடைய சுலோகன் இல்லையா! இந்த சுலோகன் தற்காலத்திற்கு உரியது, எதிர்காலத்திற்கு அல்ல, தற்காலத்திற்கு என்றால் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமா அல்லது கவலையோடு இருக்க வேண்டுமா? மாயா தன்னுடைய பலவீன எண்ணங்களின் வலையை விரிக்க வைக்கிறது பின்னர் தன்னுடைய வலையிலேயே சிக்கிக் கொள்கிறீர்கள். நான் வெற்றியாளனாக இருக்கிறேன் என உணர்வதன் மூலம் இந்த பலவீன வலையை அழித்துவிடுங்கள். சிக்கிக்கொள்ளாதீர்கள் ஆனால் அழித்து விடுங்கள். அழிப்பதற்கு சக்தி இருக்கிறதா? மெல்ல மெல்ல செய்யாதீர்கள், உடனே நொடியில் இந்த வலையை வளர விடாதீர்கள். ஒருவேளை ஒருமுறைகூட இந்த வலையில் சிக்கிவிட்டீர்கள் என்றால் அதிலிருந்து வெளிவருவது மிகவும் கடினமாக இருக்கும். 22.3.96

**37.** விரதமேற்பது என்றால் எண்ணத்தில் உறுதியாக இருப்பது. விரதத்தை உண்மையான பக்தர்கள் ஒருபோதும் விடுவதே இல்லை. இப்போதுகூட முதலாவது அடித்தளமான எண்ணங்களின் சக்தி அவ்வப்போது அதிகம் வீணாகிறது, நெகட்டிவ், வேஸ்டைவிட கொஞ்சம் குறைவாக இருக்கிறது. இந்த எண்ணங்களின் சக்தியை தனக்கோ அல்லது உலகத்திற்கோ எந்த அளவு பயன் படுத்துகிறீர்களோ அந்த அளவு மேலும் அதிகரிக்கும். ஏனெனில் எண்ணங்களின் ஆதாரத்தில்தான் சொல்லும் செயலும் இருக்கிறது. எனவே எண்ணங்களின் சக்தியை மாற்றி அமையுங்கள். எது வீணாகவும் கெட்டதாகவும் போகிறதோ, அதை மாற்றி உலக நன்மையின் பொருட்டு காரியத்தில் ஈடுபடுத்துங்கள். பாப்தாதா எண்ணங்களின் கஜானாவை அனைத்திலும் சிறந்ததாகக் கருதுகிறார் எனவே இந்த **எண்ணங்களின் பொக்கிஷத்தின்மீது சிக்கனத்தின் அவதாரமாகுங்கள். 13.2.99**

**38.** பிராமண வாழ்வின் முக்கிய **பொக்கிஷங்களாக இருப்பது <u>எண்ணம், நேரம் மற்றும் சுவாசம்</u>** என பாப்தாதா முன்பும் விளங்க வைத்திருக்கிறார். உங்களுடைய சுவாசமும் மிகுந்த மதிப்புடையது. ஒரு சுவாசம்கூட சாதாரணமாக இருக்கக்கூடாது, வீணாகக்கூடாது. மூச்சுக்கு மூச்சு தன்னுடைய இஷ்ட தெய்வத்தை நினைவு செய்யுங்கள் என்று பக்தியில் சொல்கிறார்கள். சுவாசமும் வீணாகப் போகக்கூடாது. ஞானத்தின் கஜானா, சக்திகளின் கஜானா ... இவைகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் எண்ணம், நேரம் மற்றும் சுவாசம் என்ற இந்த மூன்று கஜானாக்கள் முக்கியமானது – கட்டளைப்படி வெற்றியாகிறதா? வீணாகப் போவதில்லையே? ஏனெனில் வீணாகப் போனதென்றால்

சேமிப்பாகவில்லை. மேலும் சேமிப்புக் கணக்கில் இந்த சங்கமயுகத்தில் தான் சேர்த்து வைக்க வேண்டும். சத்யுக, திரேதாயுகத்தில் சிறந்த பதவி அடைய வேண்டும், துவாபர, கலியுகத்தில் பூஜா பதவி அடைய வேண்டும் எனினும் இந்த இரண்டிற்கான சேமிப்பு சங்கமத்தில்'தான் செய்ய வேண்டும். இந்த கணக்குப்படி யோசியுங்கள் சங்கம நேர வாழ்க்கையின், சின்ன ஜென்மத்தின் எண்ணம், நேரம் மற்றும் சுவாசம் எத்தனை மதிப்பு வாய்ந்தது? இதில் சோம்பேறியாக இருக்க வேண்டாம். எப்படி வந்ததோ அப்படியே நாள் போய்விட்டது என இருக்காதீர்கள், நாள் போகவில்லை ஆனால் ஒரு நாளில் மிக அதிகமாக இழந்துவிட்டீர்கள். எப்போதெல்லாம் ஏதாவது எண்ணங்கள் வீணாகிறதோ, நேரம் வீணாகிறதோ அப்போது 'சரி, விடு' 5 நிமிடம்தானே போய்விட்டது என நினைக்காதீர்கள். சேமியுங்கள் 15.11.99

**39. நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் உருவாக்கக்கூடிய அனைத்திலும் பெரிய கஜானா, சிறந்த கஜானா, சிறந்த எண்ணங்கள்** என்ற கஜானா என பாப்தாதா அவர்கள் ஏற்கனவே அடையாளங் காட்டியிருக்கிறார். எண்ணங்களின் சக்தி மிகப் பெரிய சக்தி, குழந்தைகள் உங்களிடம் சிறந்த எண்ணங்களின் சக்தி இருக்கிறது. எண்ணங்கள் எல்லோரிடமும் இருக்கிறது ஆனால் சிறந்த சக்தியாக இருப்பது – **சுபபாவனை சுப ஆசைகளின் எண்ண சக்தி, மனம்–புத்தியை ஒருமுகப் படுத்தும் சக்தி– இவைகள் உங்களிடம் மட்டுமே இருக்கிறது.** மேலும் எவ்வளவு முன்னேறிக் கொண்டே இருக்கிறீர்களோ, அவ்வளவு இந்த எண்ண சக்தியை சேமித்துக் கொண்டே இருப்பீர்கள், வீணாக இழக்க மாட்டீர்கள், வீணாக இழப்பதற்கு முக்கிய காரணம் – வீண் எண்ணங்கள். மெஜாரிட்டி குழந்தைகளிடம் இப்போதுகூட முழு நாளும் வீண் எண்ணங்கள் இருப்பதை பாப்தாதா அவர்கள் பார்க்கிறார்கள். ஸ்தூல செல்வங்களை சிக்கனமாக செலவழிப்பவர்கள் எப்போதும் நிறைவாக இருப்பார்கள், மற்றபடி வீணாக செலவழிப்பவர்கள் எங்கேயாவது ஏமாற்றம் அடைவார்கள். அதேபோல சிறந்த சுத்த எண்ணங்களுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது அது உங்களுடைய கேட்சிங் பவர், அதாவது அதிர்வலைகளை கேச் பண்ணுவதற்கான பவரை மிக அதிகமாக்குகிறது. இந்த வயர்லெஸ், டெலிபோன் என இந்த அறிவியல் சாதனங்கள் எப்படி வேலை செய்கிறதோ அதேபோல இந்த சுத்த எண்ணங்களின் கஜானா, அந்தமாதிரி வேலை செய்யும் அதன் மூலம் லண்டனில் அமர்ந்துகொண்டே எந்தவொரு ஆத்மாவின் அதிர்வலைகளையும் நீங்கள் அந்தமாதிரி தெளிவாக கேச் பண்ணமுடியும். வயர்லெஸ், டெலிபோன், டிவி என எந்த சாதனமாக இருந்தாலும், எத்தனையோ சாதனங்கள் வெளிவந்துள்ளன, அவைகள் எல்லாவற்றையும்விடத் தெளிவாக உங்கள் 'கேட்சிங் பவர்', ஒருமுகப் படுத்தும் சக்தியால் அதிகமாகும். இந்த ஆதாரங்கள் எல்லாம் அழிந்தேயாக வேண்டும். இந்த சாதனங்கள் எல்லாம் எதன் ஆதாரத்தில் செயல்படுகின்றன. ஒளியின் (மின்சாரம்) ஆதாரத்தில் இருக்கின்றன. சுகத்தின் சாதனங்களாக எவைகளெல்லாம் இருக்கின்றனவோ அவைகளில் மெஜாரிட்டி ஒளியின் ஆதாரத்தில் வேலைசெய்கிறது. அப்படி இருக்க உங்கள் ஆன்மீகஒளி ஆத்மஒளி இந்த காரியங்களைச் செய்ய முடியாதா! எதை விரும்புகிறீர்களோ அந்த அதிர்வலைகள் அருகில் இருந்தாலும் தொலைவில் இருந்தாலும் கேச் பண்ண முடியும். இப்போது எப்படி இருக்கிறது, ஒருமுக சக்தி மனம்–புத்தி இரண்டும் ஒருமுகப்பட வேண்டும் அப்போது கேட்சிங் பவர் இருக்கும். நிறைய அனுபவம் செய்வீர்கள். தன்னலமற்ற, தூய்மையான, தெளிவான எண்ணத்தை எழுப்பிய உடனே அது மிக விரைவாக அனுபவத்தை ஏற்படுத்தும். அமைதி சக்தியின் முன்பாக இந்த அறிவியல் சக்தி தலைவணங்கும். அறிவியலிலும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது அது நிறைவாகிக் கொண்டிருப்பதை இப்போது உணர்ந்து வருகிறார்கள். எனவே பாப்தாதா மீண்டும் அன்டர்லைன் செய்வது என்னவென்றால் கடைசி நிலை, கடைசி சேவையாக இருப்பது இந்த எண்ணங்களின் சக்தி, அது மிக வேகமாக சேவை செய்ய வைக்கும். எனவே எண்ணங்களின் சக்தி மீது மேலும் கவனம் கொடுக்க வேண்டும். மிச்சப் படுத்துங்கள், சேர்த்து வையுங்கள். பல காரியங்களுக்கு உபயோகமாகும். இந்த எண்ணங்களின் சக்தி மூலமாகவே பிரயோகி ஆவீர்கள். அறிவியலுக்கு மகத்துவம் ஏன்? பிரயோகிக்க முடிகிறது. அப்போது, அறிவியல் நல்லகாரியம் செய்கிறது என எல்லோரும் புரிந்துகொள்கிறார்கள். எனவே அமைதி சக்தியை பிரயோகம் செய்வதற்கு ஒருமுகப்படுத்தும் சக்தி தேவைப்படுகிறது, மேலும் ஒருமுகத்திற்கு மூலாதாரமாக இருப்பது மனதை கட்டுப்படுத்தும் சக்தி, அதன்மூலம் மனோபலம்

அதிகரிக்கிறது. மனோபலத்திற்கு அதிக புகழ் இருக்கிறது, இந்த மாயவித்தைக்காரர்கள் மனோபலத்தின் மூலமாக அற்பகால அதிசயங்களைச் செய்து காட்டுகிறார்கள். நீங்களோ விதி பூர்வமாக, மாயவித்தையல்லாமல், விதி பூர்வமாக நன்மை செய்யும் அதிசயத்தைச் செய்து காட்டுவீர்கள். அது வரதானமாகிவிடும், ஆத்மாக்களின்மீது இந்த எண்ண சக்தி பிரயோகம் வரதானத்தை நிரூபிக்கும். எனவே மனதை கட்டுப்படுத்துவதற்கான கண்ட்ரோலிங் பவர் இருக்கிறதா? என முதலில் செக் பண்ணுங்கள். சுவிட்சின் ஆதாரத்தில் அறிவியல் சக்தி நொடியில் வேலை செய்கிறது, சுவிட்சை ஆன் செய்யுங்கள், சுவிட்சை ஆப் செய்யுங்கள். அதேபோல நொடியில் மனதை எங்கு வேண்டுமோ, எப்படி வேண்டுமோ, எவ்வளவு நேரம் வேண்டுமோ, அவ்வளவு கண்ட்ரோல் பண்ண முடியுமா? நல்லவர்கள் தன்மீதும் சேவைமீதும் வெற்றிகரமாக இருப்பதை காட்டுவார்கள். ஆனால் எண்ண சக்தியின் சேமிப்புக் கணக்குமீது இப்போது சாதாரண கவனமே இருப்பதை பாப்தாதா பார்க்கிறார்கள். எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு இல்லை. எண்ணங்களின் ஆதாரத்தில் பேச்சும் செயலும் தாமாகவே நடக்கின்றன. இன்று பேச்சைக் கட்டுப்படுத்துங்கள், இன்று பார்வையின்மீது கவனம் கொடுங்கள், இந்த முயற்சி செய்யுங்கள், இன்று உணர்வின்மீது கவனம் கொடுத்து மாற்றுங்கள் என தனித்தனியாக முயற்சி செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஒருவேளை எண்ணங்களின் சக்தி பவர்புல்லாக இருந்தால் இவைகள் எல்லாம் தானாகவே கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். சிரமப்படுவதில் இருந்து விடுபட்டுவிடுவீர்கள். எனவே எண்ண சக்தியின் மகத்துவத்தை அறிந்துகொள்ளுங்கள். 15.12.99

**40.** பெருவாரியான குழந்தைகளிடம் முழு நாளில் இடையிடையே வீண் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருப்பதை பாப்தாதா அவர்கள் பார்த்தார்கள். அதனால் என்னவாகிறது, இந்த **வீண் எண்ணங்களின் எடை அதிகமாகி விடுகிறது மற்றும் நல்ல எண்ணங்களின் எடை குறைந்துவிடுகிறது.** இந்த இடையிடையே ஓடும் வீண் எண்ணங்கள் மூளையை சுமையாக்கிவிடுகிறது. முயற்சியை சுமையாக்கி விடுகிறது, சுமை அல்லவா எனவே அவை தம்மை நோக்கி இழுத்துவிடுகிறது. எனவே சுப எண்ணங்கள், எது சுய உன்னதத்திற்கு 'லிப்ட்டாக' இருக்கிறதோ, ஏணியாக இல்லை 'லிப்ட்டாக' இருக்கிறதோ, அது குறைந்த காரணத்தால், முயற்சி என்ற படிக்கட்டில் ஏறவேண்டியதாக இருக்கிறது. இரண்டு வார்த்தைகளை மட்டும் நினைவு செய்யுங்கள்—வீணானவைகளை அழிப்பதற்கு அமிர்தவேளையில் இருந்து இரவு வரை இரண்டு வார்த்தைகளை எண்ணத்தில், சொல்லில், செயலில் காரியத்தில் கொண்டுவாருங்கள். நடைமுறையில் கொண்டுவாருங்கள். 15.10.04

**41. பாபாவின் உள்ளம் கவர்ந்த நிலையாக இருப்பது சம்பூரண பவித்திரம்.** இந்த பிராமண பிறவியின் அடித்தளமாக இருப்பது சம்பூரண பவித்திரம். சம்பூரண பவித்திரத்தின் ஆழத்தை அறிந்திருக்கிறீர்களா? எண்ணம் மற்றும் கனவிலும் இம்மி அளவுகூட அபவித்திரத்தின் பெயரடையாளம் இருக்கக்கூடாது. தற்காலத்தில், நேரம் நெருங்கிவருவதற்குத் தக்கபடி, சம்பூரண பவித்திரத்தின் கணக்குப்படி வீண் எண்ணங்கள் இருப்பதும் சம்பூரண நிலை அல்ல என பாப்தாதா அடிக்கடி நினைவூட்டுகிறார். எனவே வீண் எண்ணங்கள் ஓடுகிறதா? எந்த வீண் எண்ணமும் சம்பூரணத்திலிருந்து தூர விலக்கவில்லையா? என செக் பண்ணுங்கள். எந்த அளவு முயற்சியில் முன்னேறிக்கொண்டு இருக்கிறீர்களோ, அந்த அளவு ராயல் ரூப வீண் எண்ணங்கள், வீண் நேரங்கள் சம்பூரணநிலையை அழிப்பதில்லையே? ராயல் ரூபத்தில் அபிமானம் மற்றும் அவமானம் வீண் எண்ண வடிவில் யுத்தம் செய்யவில்லையா? ஒருவேளை அபிமான ரூபத்தில் ஏதாவது பரமாத்மா தந்ததை தனது விசேசமாக உணர்ந்து கொண்டால் அந்த விசேசத்தின் அபிமானம்கூட கீழே இறக்கிவிடும், தடை ரூபமாகிவிடும். மேலும் அபிமானம்கூட சூட்சும ரூபத்தில் இப்படித்தான் வருகிறது, அது உங்களுக்கும் தெரியும் – அது என்னுடையது (மேராபன்). எனக்கு பெயர் கிடைக்க வேண்டும், மானம் மரியாதை கிடைக்க வேண்டும். இந்த என்னுடையது என்பது அபிமான ரூபத்தை பெற்றுவிடுகிறது. இந்த வீண் எண்ணம்கூட சம்பூரணத்தை தூரப்போகச் செய்துவிடுகிறது. ஏனென்றால் பாப்தாதா விரும்புவது சுயமரியாதை, அபிமானமோ, அவமானமோ வரக்கூடாது. வீண் எண்ணங்கள் வருவதற்கு இவைகளே காரணங்களாகின்றன. 03.02.06

**எண்ணங்களை மாற்றுவதற்கான விதி**

**42.** எண்ணத்திலும் மாயாவிடம் தோற்கக்கூடாது. இதைத்தான் தீவிரமுயற்சி என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் சுத்த எண்ணங்களால் முதலில் இருந்தே மனதை பிஸியாக வைத்திருப்பார்கள் அப்போது மற்ற எண்ணங்கள் வரமுடியாது. முழுமையாக நிறைந்திருக்கும்போது ஒருதுளிகூட அதிகரிக்க முடிவதில்லை, இல்லையென்றால் நுழைந்துவிடும். எனவே இந்த எண்ணம் மனதில் இருக்கட்டும் அப்போது வீண் எண்ணங்கள் வருவதற்கு இடமே இல்லாமல்போகும். அந்தஅளவு தன்னை பிஸியாக வைத்திருங்கள். மனதை பிஸியாக வைத்திருப்பதற்கு எந்த வழிமுறைகள் கிடைத்திருக்கிறதோ, அதை நீங்கள் முழுமையாக பிரயோகத்தில் கொண்டுவருவதில்லை. எனவே வீண் எண்ணங்கள் வந்துவிடுகிறது. ஒரு பக்கம் சுத்த எண்ணங்களில் பிஸியாக வைத்திருப்பதால் மறுபக்கம் வீண் எண்ணங்கள், தானே விலகி விடுகிறது. 26.01.70

**43.** பெரியவர்களாக இருந்தும் அவ்வப்போது குழந்தைகளைப் போல விளையாடுவதைப் பார்த்து பாப்தாதா சிரிக்கிறார். பொம்மை விளையாட்டு என்றால் என்ன, தெரியுமா? அதற்கு முழு வாழ்க்கையை உருவாக்குகிறார்கள், சிறியதிலிருந்து பெரியதாக்குகிறார்கள், பிறகு திருமணம் செய்து வைக்கிறார்கள்... அதேபோல குழந்தைகளும் பல விசயங்களை, எண்ணங்களை படைக்கிறீர்கள், பிறகு அதை பராமரிக்கிறீர்கள், பிறகு அதை பெரியதாக்குகிறீர்கள், பிறகு அதன்மூலம் தானே கஷ்டப்படுகிறீர்கள். எனவே இது பொம்மைகளின் விளையாட்டு இல்லையா? தானே தன்னைப் பார்த்து ஆச்சரியமும் அடைகிறீர்கள். இப்போது அப்படிப்பட்ட படைப்பை படைக்காதீர்கள். பாப்தாதா வீண் படைப்பை படைப்பதில்லை. மற்றபடி குழந்தைகள் வீண் படைப்பை படைத்துவிட்டு பிறகு அதை நீக்குவதற்கும் அதிலிருந்து விலகுவதற்கும் முயற்சி செய்கிறீர்கள். எனவே அப்படிப்பட்ட படைப்பை படைக்கக்கூடாது. ஒரு நொடியில் நல்ல படைப்பையும் சீக்கிரம் படைக்கிறீர்கள், அதேபோல தலைகீழ் படைப்பும் அவ்வளவு வேகமாக நடக்கிறது. ஒரு நொடியில் எத்தனை எண்ணங்கள் ஓடுகிறது. **படைப்பை படைத்து, அதற்கு நேரம் கொடுத்து, பிறகு அதை அழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டிய அவசியம் என்ன? இப்போது இந்தப் படைப்பிற்கு பிரேக் போடுங்கள்.** 26.3.70

**44.** சொற்படி நடப்பவர் என்பதன் அர்த்தமே கட்டளைப்படி நடப்பதாகும். நிரந்தரமாக நினைவில் இருங்கள் என்பதே முக்கிய கட்டளை. ஒருவேளை இந்த கட்டளைப்படி நடக்கவில்லை என்றால் என்ன சொல்வீர்கள்? எந்த அளவு இந்த கட்டளையை நடைமுறையில் கொண்டுவருகிறீர்களோ அந்த அளவே வெளிப்படையான பலன் கிடைக்கும். முயற்சியின் பாதையில் நடக்கிறீர்கள். எனவே உழைப்பை தவிர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒன்று ஒருபோதும் உள்ளேயோ அல்லது வெளியேயோ ஓய்வெடுக்கக்கூடாது. ஒருவேளை ஓய்வெடுக்கவில்லை என்றால் வீணாகப்போகாது. இரண்டாவது விசயம் தன்னை எப்போதும் விருந்தாளியாகக் கருதவேண்டும். விருந்தாளியாகவும் நினைக்கிறீர்கள் ஓய்வும் எடுக்கவில்லை என்றால் எதுவும் வீணாகப்போகாது. அது எண்ணமாக இருந்தாலும் சரி, நேரமாக இருந்தாலும் சரி இதுவே சகஜ வழி. 2.2.70

**45.** வீண் எண்ணங்கள் அல்லது கெட்ட எண்ணங்கள் எது நடக்கிறதோ அப்போது இது ஏன் நடந்தது என்ற ஒரே ஒரு வார்த்தை புத்தியில் வருகிறது, ஏன் என்பதில் இருந்து வீண் எண்ணங்களின் கியூ ஆரம்பமாகிவிடுகிறது. 5.3.70

**46.** இப்போது எந்த எண்ணமாக இருந்தாலும் கர்மமாக இருந்தாலும், எண்ணத்திற்கும் கர்மத்திற்கும் இடையே வித்தியாசம் இருக்கக்கூடாது. எண்ணம் செய்வது, திட்டமிடுவது பிறகு அதன்படி நடப்பது என்பது குழந்தைப்பருவ விசயமாக இருக்கிறது. இப்போது அதற்குரிய நாட்கள் இல்லை. இப்போது படிப்பு எதுவரை வந்திருக்கிறது? இப்போது கடைசி நிலையில் இருக்கிறது. 26.3.70

**47.** புள்ளி ரூபத்தில் அதிகநேரம் இருக்க முடியவில்லை என்றால் அதற்குப் பின்னால் நேரத்தை இழக்காதீர்கள். எப்போது முதலில் சுத்த எண்ணங்களின் பயிற்சி இருக்கிறதோ அப்போதே புள்ளி ரூபத்தில் நிற்க முடியும். அசுத்த எண்ணங்களை சுத்த எண்ணங்களால் அகற்றுங்கள். ஏதாவது ஆக்ஸிடெண்ட் ஆகும் தருவாயில் 'பிரேக்' பிடிக்க வில்லை என்றால் வேறு பக்கம் திருப்பிவிடுகிறார்கள். புள்ளி ரூபம் பிரேக். ஒருவேளை அதில் மனம் ஈடுபடவில்லை என்றால் வீண் எண்ணங்களில் இருந்து புத்தியை திருப்பி சுத்த எண்ணங்களில் ஈடுபடுத்துங்கள். அவ்வப்போது அப்படிப்பட்ட சூழ்நிலை உண்டாகிறது அப்போது தப்பிப்பதற்காக பிரேக் போடப்படுவதில்லை, திருப்ப வேண்டியதாக இருக்கிறது. நாள் முழுவதும் சுத்த எண்ணங்களைத் தவிர வேறு வீண் எண்ணங்கள் ஓடாதபடி இருக்க முயற்சி செய்யுங்கள். எப்போது இந்த பாடத்தில் 'பாஸ்' ஆகிறீர்களோ அப்போது புள்ளி ரூப நிலை எளிதாக இருக்கும். 7.6.70

**48.** எண்ணங்களுக்கு பிரேக் போடுவதற்கான முக்கிய சாதனம் எது? தெரியுமா? எந்தவொரு காரியத்தைச் செய்ய வேண்டுமானாலும், செய்வதற்கு முன்பு யோசனை செய்து பின்னர் காரியத்தை தொடங்கவும். எந்தக் காரியத்தை நான் செய்யப்போகிறேனோ அது பாப்தாதாவினுடைய காரியமாக இருக்கிறது, நான் நிமித்தமாக இருக்கிறேன் என்பது நினைவில் இருக்க வேண்டும். எப்போது காரியத்தை முடித்து விடுகிறீர்களோ அப்போது எப்படி யாகத்தை படைத்தார்கள் என்றால் அதை முடிக்கும்போது ஆகுதி கொடுப்பார்கள், அப்படி காரியத்தைச் செய்தீர்கள், விளைவு வந்தது, அதை பாபாவிடம் சமர்ப்பணம், சுவாகா செய்துவிட்டீர்கள், பிறகு எந்த எண்ணமும் வரக்கூடாது. நிமித்தமாக இருந்து காரியம் செய்தீர்கள் பிறகு காரியம் முடிந்தபிறகு 'சுவாகா' செய்துவிட்டீர்கள். பிறகு என்ன எண்ணங்கள் ஓடும்? எப்படி நெருப்பில் பொருட்களைப் போட்டுவிட்டால் பிறகு பெயர் அடையாளம் எதுவும் இருப்பதில்லை, அதேபோல ஒவ்வொரு விசயம் முடியும்போதும் சம்பூரண சுவாகா செய்ய வேண்டும். பிறகு உங்களுக்கு எந்த பொறுப்பும் கிடையாது. யாரிடம் அர்ப்பணித்துவிட்டீர்களோ அவரே அதற்குப் பொறுப்பாகிறார். பிறகு எண்ணங்கள் எதற்கு. எப்படி வீட்டில் யாராவது பெரியவர்கள் இருந்தால் எந்த காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் அதை அவர்களிடம் சொல்லிவிட்டு மனதில் இருந்து அந்த விசயத்தை காலி செய்துவிடுகிறார்கள். அதேபோல ஏதோ காரியத்தைச் செய்தீர்கள், சமாச்சாரத்தை கொடுத்தீர்கள், முடிந்தது. அவ்யக்த ரூபத்தை முன்னால் வைத்து இதை செய்து பாருங்கள்.
இந்த சங்கம யுகத்தின் ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு செயலும் 21 ஜென்மத்திற்கு பேங்கில் சேர்த்துவைக்கப்படுகிறது. இவ்வளவு கவனம் கொடுத்த பிறகே எண்ணங்களையும் உருவாக்க வேண்டும். என்ன செய்தேனோ அது சேமிப்பாகும். அப்போது எவ்வளவு சேர்த்து வைக்கப்படும். ஒரு எண்ணம்கூட வீணாகப் போகக்கூடாது. ஒரு எண்ணம் வீணாகப் போனாலும் சேமிப்பில் குறைவு வந்துவிடும். எனவே எப்போது சேமிக்க வேண்டுமோ அப்போது ஒன்றுகூட வீணாகக்கூடாது. எவ்வளவு முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. எண்ணம்கூட வீணாகப் போகக்கூடாது. நேரத்தை விடுங்கள். இப்போது முயற்சி இந்த எல்லையை நெருங்கிக் கொண்டிருக்கிறது. 19.6.70

**49.** நாளுக்குநாள் சேவையும் அதிகமாக வேண்டும், பிரச்சினைகளும் அதிகமாகும். மேலும் இந்த எண்ணங்களின் வேகம் இருக்கிறதே அதுவும் நாளுக்குநாள் அதிகமாகும். இப்போது ஒரு நொடிக்கு பத்து எண்ணங்களை நினைக்கிறீர்கள் அது இரண்டு மூன்று மடங்கு அதிகமாகும். தற்காலத்தில் மக்கள் தொகை கணக்கெடுக்கிறார்கள், ஒரு நாளில் எவ்வளவு கூடுகிறது. இங்கு எண்ணங்களின் வேகம் அதிகமாகும். ஒரு பக்கம் எண்ணங்களும், இன்னொரு பக்கம் கெட்ட ஆவிகளும் அதிகமாகும். ஆனால் அதற்கு ஒரு விசேச கவனம் கொடுக்க வேண்டும், அதன்மூலம் எல்லா விசயங்களையும் சமாளிக்க முடியும். எந்த விசயம் நடந்தாலும் அதை தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு இரண்டு வார்த்தைகளை நினைவில் கொள்ள வேண்டும் அது இதுதான்—ஒன்று 'அந்தர்' (வித்தியாசத்தை அறிவது) இன்னொன்று 'மந்தர்' (மந்திரம் —மன்மனாபவ). எந்த விசயம் நடந்தாலும் அது சரியா அல்லது தவறா எனப் பகுத்துப் பாருங்கள். பாப்தாதாவிற்குச் சமமாக இருக்கிறதா இல்லையா?

பாபாவிற்குச் சமமாக இருக்கிறதா இல்லையா? என்று ஒவ்வொரு முறையும் கண்டறிந்து அதற்கு ஒரு நொடியில் 'நாட்' (தவிர்கவோ) அல்லது 'டாட்' (முற்றுப்புள்ளி) வைக்க வேண்டும். செய்யவேண்டியதில்லை என்றால் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், அல்லது செய்ய வேண்டும் என்றால் செயலில் இறங்க வேண்டும். எனவே 'நாட்' மற்றும் 'டாட்' இதையும் புத்தியில் வைக்க வேண்டும். வித்தியாசம் மற்றும் மந்திரம் (மன்மனாபவ) இந்த இரண்டுமே நடைமுறையில் இருக்க வேண்டும். இரண்டையும் மறக்கக்கூடாது இல்லையென்றால் எந்தவித பிரச்சினைகளையோ அல்லது கெட்ட ஆவிகளையோ சமாளிக்க முடியாமல் போய்விடும். ஒரு நொடியில் பிரச்சினைகள் சாம்பலாகிவிட வேண்டும். கெட்ட ஆவிகள் உங்கள் முன்னால் நிற்க முடியாது. எனவே இந்த முயற்சி செய்ய வேண்டும். புரிந்ததா. 24.7.70

**50.** இன்னும் கொஞ்ச காலத்திற்குள் தர்மராஜரின் ரூபத்தை அனுபவம் செய்வீர்கள். ஏனெனில் இது கடைசி நேரம். இவ்வளவு காலம் பாபாவின் ரூபத்தில் காரணத்தையும் கேட்டறிந்தார், சினேகமும் தந்தார், கருணையும் காட்டினார், நிறைய சலுகைகளையும் காட்டினார் ஆனால் இப்போது மிகக் குறைந்த நாட்களே மிச்சம் இருக்கிறது என்பதை அனுபவம் செய்வீர்கள். பிறகு ஒரு எண்ணத்தின் தவறுக்கு ஒன்றுக்கு நூறு மடங்கு தண்டனை எப்படி கிடைக்கிறது என்பதை அனுபவம் செய்வீர்கள். என்ன செயல் செய்தாலும் உடனுக்குடன் அதற்குரிய பலனையோ அல்லது தண்டனையையோ வெளிப்படையாக அனுபவம் செய்வீர்கள், இப்போது அந்த நேரம் வெகு அருகில் வரப்போகிறது. எனவே பாப்தாதா தகவல் தருகிறார் ஏனென்றால் பாப்தாதா குழந்தைகளின் சினேகியாகவும் இருக்கிறார். 22.10.70

**51.** முதல் மாற்றம் – கண்களைத் திறந்தவுடனேயே நான் சரீரமல்ல ஆத்மாவாக இருக்கிறேன், இது ஆரம்ப நேரத்தின் ஆரம்ப மாற்ற எண்ணம், இந்த ஆரம்ப எண்ணம் முழு நாளின் தினசரி நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக இருக்கிறது. ஒருவேளை ஆரம்ப எண்ணத்தில் மாற்றம் வரவில்லை என்றால் முழுநாளில் சுயராஜ்யம் அல்லது உலக நன்மையின் காரியத்தில் வெற்றி கிடைக்காமல் போய்விடும். 31.12.70

**52.** யோகிகளுக்கு ரித்தி சித்தி கிடைக்கிறது என்று பாடப்பட்டுள்ளது, அந்த சித்தி எது? எண்ணத்தின் 'சித்தி' மற்றும் செயலின் 'விதி' இந்த இரண்டும் இருப்பதன் மூலமாக பிறப்புரிமையை எளிதில் அடைந்துவிடுகிறீர்கள். எண்ணத்தின் சித்தி எப்படி வருகிறது, தெரியுமா? எண்ணங்கள் வெற்றிபெறாமல் போவதற்கு காரணம் எது? இப்போது வீண் எண்ணங்கள் அதிகம் ஓடுவதே காரணம். வீண் எண்ணங்கள் கலப்பதால் சக்திசாலி ஆக முடிவதில்லை. எந்த எண்ணத்தை படைக்கிறீர்களோ அது சித்தியடைவதில்லை. வீண் எண்ணங்கள் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது இல்லையா. எனவே வீண் எண்ணங்களை உருவாக்காமல், சக்திமிக்க எண்ணங்களை உருவாக்குவதே எண்ணங்களை வெற்றிபெறச் செய்வதற்கு முக்கிய முயற்சியாக இருக்கிறது. புரிந்ததா. எண்ணங்களை அதிகமாக படைக்கிறீர்கள் எனவே அவைகளை முழுமையாக பராமரித்து காரியத்தில் ஈடுபடுத்துவது என்பது முடியாமல் போகிறது. எப்படி லௌகீகத்தில்கூட அதிகம் குழந்தைகளை பெற்றுவிட்டால் அவர்களை தகுதி உடையவராக ஆக்க முடிவதில்லை. இந்த வகையில் எந்த எண்ணங்களை படைக்கிறீர்களோ அவைகளை மிக அதிகமாக தோற்றுவிக்கிறீர்கள். எண்ணங்களின் படைப்பு எவ்வளவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவு சக்திமிக்கதாக இருக்கும். எந்த அளவு படைப்பு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவு சக்தியற்ற படைப்பாக இருக்கும். எனவே எண்ணங்கள் சித்தி பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டுமா? வீணான படைப்பை நிறுத்துங்கள். இல்லையென்றால் இந்த காலத்தில் வீணானவைகளை உருவாக்கிவிட்டு அவைகளை பராமரிப்பதில் நிறைய நேரத்தை வீணாக்குகிறீர்கள் அதனால் எண்ணங்களின் சித்தியும் கர்மங்களின் வெற்றியும் குறைவாக இருக்கிறது. 1.3.71

**53. உண்மை என்று எதற்குச் சொல்லப்படுகிறது – அது தெரியுமா? எந்த விசயம் எண்ணத்தில் வருகிறதோ, அந்த எண்ணத்தைக்கூட மறைக்கக்கூடாது – அதைத்தான் உண்மை என்று சொல்லப்படுகிறது.** ஒருவேளை முயற்சி செய்து வெற்றி பெற்றாலும்கூட தனது வெற்றி அல்லது தோல்வி இரண்டின் சமாச்சாரத்தையும் தெளிவாகச் சொல்லவேண்டும். அதுதான் உண்மை. 9.4.71

**54.** எந்த எண்ணம் எழுகிறதோ, அந்த எண்ணத்தையே சோதித்துப் பாருங்கள். மாஸ்டர் திரிகாலதரிசி நிலையில் இருக்கிறேனா? ஒருவேளை அந்த நிலையில் உறுதியாக இருந்து செயல்களைச் செய்தீர்கள் என்றால் எந்த ஒரு கர்மமும் வீணாகப்போகாது. கெட்ட செயல்களைப் பற்றிய விசயமே இல்லை. இப்போது கெட்ட செயல்களின் கணக்கிற்கு மேலே வந்துவிட்டீர்கள். கெட்ட எண்ணங்களும் முடிந்தது எனவே கெட்ட செயல்களும் முடிந்தது. இப்போது இருப்பது வீண் செயல் மற்றும் வீண் எண்ணங்களைப் பற்றிய விசயம். இந்த வீணானவைகளை மாற்றி உயர்ந்த எண்ணங்கள் மற்றும் உயர்ந்த செயல்களைச் செய்ய வேண்டும். அதைத்தான் சம்பூரண நிலை என்று சொல்லப்படுகிறது. 15.4 71

**55.** நான் இத்தனை செய்திருக்கிறேன், எனக்கு இதன்மூலம் ஏதாவது மானம், மரியாதை அல்லது புகழ் கிடைக்க வேண்டும் என சிலருக்கு எண்ணங்கள் வருகிறது – இதுவும் கேட்டுப் பெறுவதாகும், பெறக்கூடிய பாவனை வந்துவிட்டது. வள்ளலின் குழந்தை இப்படி கேட்டுப் பெறவேண்டும் என்று நினைக்கும்போது வள்ளலாக இருக்கவில்லை. இப்படிப் கேட்டுப் பெறுவது, கொடுப்பவருக்கு முன்னால் அழகாக இல்லை. இப்படி இருப்பவரைத்தான் எல்லையற்ற வைராக்கியம் உடையவர் என்று சொல்லப்படுகிறது. சேவாதாரிக்கு இந்த எண்ணம்கூட எழக்கூடாது. அப்போதே மாநிலத்தில் இருந்து எல்லையற்ற விஸ்வ மகாராஜன் பதவியைப் பெற முடியும். நல்லது. யார் தன்னலமின்றி இருக்கிறாரோ, அவரே உலகத்திற்கு நன்மை செய்யக்கூடியவர் ஆவார். கருணை உடையவராக இருப்பார். செயலுக்குரிய பலன் தானக கிடைப்பது வேறு விசயம் ஆனால் ஆசைப்பட்டு பெறுவது – இது அற்பகால பலனாகிறது, ஆனால் அது அனேக ஜென்மத்திற்கு, அனேக பிராப்திகளைப் பெறுவதில் இருந்து வஞ்சித்து விடுகிறது. பிராப்தி, அபிராப்திக்கான சாதனமாகி விடுகிறது. 15.9.71

**56.** சர்வ சக்திகளும் என்னுடைய பிறப்புரிமையாக இருக்கிறது என்ற போதை எப்போதும் இருக்க வேண்டும். எனவே அதிகாரியாக நடந்து கொள்ளுங்கள். இப்படியாக எப்போதும் புத்தியில் சிறந்த எண்ணங்கள் இருக்க வேண்டும். எண்ணங்கள் சிறப்பாக இருக்கும்போது வார்த்தை மற்றும் செயலிலும் அடிமைத்தனம் வரமுடியாது. எனவே எண்ணங்களை சிறந்ததாக்குங்கள் மேலும் எப்போதும் சர்வசக்திவான் பாபாவோடுகூட புத்தியின் சகவாசம் இருக்கட்டும். இப்படி எப்போதும் சகவாசத்தின் நிறங்களால் வண்ணமயமாக இருக்கிறீர்களா? அதை அனுபவம் செய்கிறீர்களா? அல்லது போனபிறகு அனுபவம் செய்வீர்களா? நினைக்க வேண்டும் அல்லது சொல்ல வேண்டும் அல்லது செய்ய வேண்டும் என்றால் அது அதிசயமாக இருக்க வேண்டும், சாதாரணமாக இருக்கக்கூடாது என்பதை எப்போதும் உணர்வில் கொள்ளுங்கள். ஒருவேளை காமன் அதாவது சாதாரண எண்ணங்களை நினைத்தீர்கள் என்றால் பிராப்தியும் சாதாரணமாகவே இருக்கும். எப்படி எண்ணமோ அப்படியே படைப்பும் இருக்கும் இல்லையா. ஒருவேளை எண்ணமே சிறந்ததாக இல்லை என்றால் தனது புதிய படைப்பாக எதை படைக்க இருக்கிறீர்களோ அதில் பதவியும் சாதாரணமாகவே கிடைக்கும். எனவே நான் எண்ண எண்ணத்தை எழுப்புகிறேனோ அது சாதாரணமானதா அல்லது சிறந்ததா என எப்போதும் செக் பண்ணுங்கள். சாதாரண எண்ணங்களை அல்லது நடத்தையை எல்லா ஆத்மாக்களும் செய்து வருகிறார்கள். சர்வசக்திவானின் குழந்தைகள் ஆனபிறகும் சாதாரண எண்ணங்கள் அல்லது செயல்களே இருக்குமானல் அதில் சிறப்பு அல்லது விசேசம் என்ன இருக்கிறது? நான் விசேச ஆத்மாவாக இருக்கிறேன், இதன் காரணத்தால் என்னுடைய அனைத்தும் கொஞ்சம் விசேசமாக இருக்க வேண்டும். தனது மாற்றத்தின் மூலமாக ஆத்மாக்களை தன் பக்கம் அல்லது தன்னுடைய பாபாவின் பக்கம் கவர்ந்து இழுக்க முடியவேண்டும், தனது தேகத்தின் பக்கமல்ல, தனது என்றால் ஆத்மாவின் ஆன்மீகத்தின் பக்கம். உங்களுடைய மாற்றம் உலக மாற்றத்தை கொண்டுவரும். உலக மாற்றம்கூட சிறந்த ஆத்மாக்களின் மாற்றத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறது. 4.3.72

**57.** எண்ணத்தில், உணர்வில், நினைவில்கூட எந்தவிதமான பாவ எண்ணங்களும் எழாமல் இருப்பதே நமது செயலாக இருக்கிறது, இப்படி இருப்பவரைத்தான் பிராமணன் அல்லது பவித்திரமானவர் என்று சொல்லப்படுகிறது. ஒருவேளை உணர்வு, நினைவு அல்லது எண்ணத்தில் ஏதாவது அபவித்திரம் இருந்தால் பிராமண நிலையில் உறுதியாக இருக்க முடியாது, பெயரளவில் மட்டுமே இருப்பீர்கள். எனவே ஒவ்வொரு அடியிலும் கவனமாக இருங்கள். 10.5.72

**58.** கர்மத்தின் ஆழமான விளைவுகளை அறிந்துகொண்டு அதாவது திரிகாலதரிசியாகி ஒவ்வொரு செயலையும் செய்யுங்கள், அப்போதே கர்மாதீத் ஆகமுடியும். சிறிய தவறுகள் நினைவு ரூபத்தில் ஏற்பட்டாலும் அதன் கணக்கு வழக்கு மிகக் கடுமையாக உருவாகும். சிறிய தவறை இப்போது பெரியதாக கருதவேண்டும். எப்படி மிகத்தூய்மையாக இருக்கும் பொருளில் உள்ள சிறிய கறைகூட பெரியதாகத் தெரிகிறதோ அதேபோல தற்சமயத்தில் மிகத்தூய்மையான சம்பூரண நிலைக்கு அருகில் வந்துகொண்டிருக்கிறீர்கள், எனவே மிகச்சிறிய தவறுகூட இப்போது பெரியதாக எண்ணப்படும். எனவே இவைகள் சின்னஞ்சிறிய தவறுகள் இவைகள் இருக்கத்தான் செய்யும் என இந்த விசயத்தில் அறியாதவராக இருக்க வேண்டாம். இப்போது நேரம் மாறிவிட்டது. நேரத்தோடு கூடவே முயற்சியின் வேகமும் மாறிவிட்டது. தற்போதய நேரப்படி சிறிய தவறுகளும் பெரிய பலவீனத்தின் ரூபமாக எண்ணப்படும். எனவே ஒவ்வொரு அடியிலும் கவனமாக இருங்கள். ஒரு சிறிய தவறு பலகாலத்திற்கு தான் பெறவேண்டிய பிராப்தியிலிருந்து வஞ்சித்துவிடுகிறது. 20.5.72

**59.** இத்தனை பெரிய காரியமான தன்னை மாற்றுவது அல்லது உலகை மாற்றுவது என்பதை ஒரேயொரு உறுதியான எண்ணத்தின்மூலம் செய்யக்கூடியவர்களாக இருக்கிறீர்கள். ஒரே ஒரு உறுதியான எண்ணத்தின் மூலம் தன்னை மாற்றிவிடுகிறீர்கள். அந்த உறுதியான எண்ணம் எது?, அந்த ஒரு எண்ணத்தால் அனேக ஜென்மங்கள் மறந்திருந்த சமஸ்காரங்கள், நினைவாக மாறுகிறது. அந்த ஒரு எண்ணம் எது? அது ஒரு நொடிக்கான விசயமாக இருக்கிறது அதன்மூலம் தன்னை மாற்றிவிட்டீர்கள். ஒரே ஒரு நொடி நேர மற்றும் ஒரே ஒரு எண்ணத்தை தாரணை செய்தீர்கள் அது 'நான் ஆத்மா'. இந்த உறுதியான எண்ணத்தின் மூலமாகவே தனது எல்லா விசயங்களையும் மாற்றிவிட்டீர்கள். அதேபோல உறுதியான எண்ணத்தின் மூலமாக உலகத்திலும் மாற்றத்தை கொண்டுவருகிறீர்கள். அந்த ஒரு உறுதியான எண்ணம் எது? நானே **உலகிற்கு ஆதாரமூர்த்தி, முன்னேற்ற மூர்த்தி** அதாவது உலக நன்மை செய்யக்கூடியவர். இந்த எண்ணத்தை தாரணை செய்யவதன் மூலமாக உலகை மாற்றும் காரியத்தில் எப்போதும் இணைந்திருக்கிறீர்கள். எனவே ஒரேயொரு எண்ணத்தின் மூலமாக தன்னையோ அல்லது உலகையோ மாற்றி விடுகிறீர்கள். அப்படிப்பட்ட ஆன்மீக மந்திரவாதியாக இருக்கிறீர்கள். 24.5.72

**60.** நமது ஒவ்வொரு எண்ணத்திற்குப் பின்னே உலக நன்மைக்கு சம்மந்தம் இருக்கிறது என்பது எப்போதும் நினைவில் இருக்கட்டும். யார் ஆதரமூர்த்திகளோ, அவர்களுடைய எண்ணத்தில் சக்தி இல்லாதபோது நேரமாற்றத்திலும் பலவீனம் ஏற்பட்டுவிடுகிறது. இந்த காரணத்தால் எவ்வளவு நீண்ட நேரம் சக்திசாலியாக இருக்கிறீர்களோ அவ்வளவு சீக்கிரம் உலகை மாற்றும் நேரத்தை அருகில் கொண்டுவர முடியும். நாடகப்படி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருக்கிறது எனினும் அதுவும் எந்த ஆதாரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது? ஆதாரம் இருக்குமல்லவா. அந்த ஆதாரமூர்த்திகள் நீங்கள்தான். 2.8.72

**61.** இப்போது உடனுக்குடன் சுத்த எண்ணங்களில் மனதை இருத்தவேண்டும், உடனுக்குடன் ஒரு எண்ணத்தில் உறுதியாக இருக்க வேண்டும் – இந்தப் பயிற்சியை எளிதில் செய்ய முடியுமா? எப்படி ஸ்தூலத்தில் சென்றுகொண்டிருக்கும் போது எங்கு வேண்டுமோ அங்கு நிற்க முடியும். புகழ் பெற்ற ஆடாத அசையாத நிலை யாரிடம் இருக்கிறது? மகாவீர, மகாவீரனிகளாகிய நீங்கள் ஸ்ரீமத்படி நடக்கக்கூடிய சிறந்த ஆத்மாக்கள்தானே. ஸ்ரீமத்தைத் தவிர மற்ற வழிகள் எல்லாம் முடிந்துவிட்டதல்லவா. வேறு எந்த வழிகளும் யுத்தம் செய்வதில்லைதானே? தன் மனவழியும் யுத்தம்

செய்யக்கூடாது. சாஸ்திரவாதிகளின் வழி, குருமார்களின் வழி, கலியுக சம்மந்திகளின் வழி – எல்லாம் முற்றிலும் முடிந்துவிட்டன. எனினும் 'மன்மத்' அதாவது தனது அற்ப ஆத்மாவின் சமஸ்காரத்தின்படி எண்ணங்கள் எழுப்புகிறீர்கள் பிறகு அந்த எண்ணத்தை சொல் அல்லது செயல்வரை கொண்டுவருகிறீர்கள், அப்போது அதை என்னவென்று சொல்வது? இதை ஸ்ரீமத் என்று சொல்வீர்களா? அல்லது வீண் எண்ணங்களின் உற்பத்தியை ஸ்ரீமத் என்று சொல்வீர்களா? எனவே ஸ்ரீமத்படி நடப்பவர்கள் ஒரு எண்ணத்தைக்கூட மன்மத் அல்லது மற்ற ஆத்மாக்களின் வழி அதாவது பரமத் படி தோற்றுவிக்க முடியாது. 4.12.72

**62. ஒரு நொடியில் ஒரு எண்ணம்கூட தனக்காக வரக்கூடாது மாறாக உலக நன்மைக்காகவே வரவேண்டும். அப்படிப்பட்ட நிலையைத்தான் சம்பூரண அதாவது நிறைந்த நிலை என சொல்லப்படுகிறது.** 13.4.73

**63.** தனது சிறந்த எண்ணங்களின் மூலமாக, வீண் எண்ணங்கள் அல்லது கெட்ட எண்ணங்களால் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தில் இருந்து மற்ற ஆத்மாக்களை தனது சக்தியால் கொஞ்ச நேரத்திற்கு கரைசேர்த்துக் காட்டுங்கள். வீண் எண்ணங்களை சுத்த எண்ணங்களால் மாற்றம் செய்துவிடுங்கள். தனது ஒரு சொல் மூலமாக பலகாலமாக தவித்துக்கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு அவர்களுடைய இலக்கை, அவர்களுடைய குறிக்கோளை எட்டும் இடத்தை அனுபவம் செய்ய வையுங்கள். அந்த ஒரு சொல் எது? 'சிவபாபா'. சிவபாபா எனச் சொன்னவுடனேயே இலக்கு அல்லது சேரவேண்டிய இடம் கிடைத்துவிட வேண்டும். தனது ஒவ்வொரு செயலாலும் அதாவது சரித்திரத்தாலும், சரித்திரம் வெறும் பாபாவுடையது மட்டுமல்ல, ஒவ்வொரு சிறந்த ஆத்மாக்களாகிய உங்களுடைய சிறந்த செயல்களும் சரித்திரமாகவே இருக்கிறது. சாதாரண செயலை சரித்திரம் என்று சொல்லமாட்டார்கள். எனவே ஒவ்வொரு சிறந்த செயல்வடிவ சரித்திரத்தின் மூலமாக பாபாவுடைய சித்திரத்தைக் காட்டுங்கள். எப்போது அப்படிப்பட்ட ஆன்மீக பிராக்டிகல் சொற்பொழிவாற்றுகிறீர்களோ அப்போது கொஞ்ச நேரத்தில் உலகை மாற்றம் செய்து விடுவீர்கள். அதற்காக சிறந்த மனநிலையும் இருக்க வேண்டும். 25.5.73

**64.** வீணானவைகளை முடிவிற்கு கொண்டுவருவதற்காக தினசரி டயரி உருவாக்குங்கள். இன்றைய நாளில் புத்தியில் விசேசமாக எந்த எண்ணத்தை வைத்திருப்பேன் அல்லது இன்று வார்த்தை மூலமாக என்ன செயலைச் செய்வேன்? என தன்னுடைய நேரத்தை முடிவு செய்யுங்கள். அதை முடிவு செய்வதன் மூலமாக சாதாரண அல்லது வீண் வார்த்தைகள் எது சக்தியை விரயமாக்குகிறதோ அது எல்லாம் மிச்சமாகிவிடும். யார் வீணாக்குவதில்லையோ அவர்கள் பெஸ்டாகி விடுகிறார்கள். வீணாக்குகிறவர்கள் ஒருபோதும் பெஸ்ட் ஆக முடியாது. எல்லா விசயங்களையும் பாருங்கள் பிறகு தன்னுடைய சேமிப்புத் திட்டத்தை அதிகப் படுத்துங்கள். அப்போதே மாஸ்டர் படைப்பவர் ஆகமுடியும். 8.7.73

**65.** குறைந்த செலவில் மிகுந்த லாபம் அதாவது எதன் மூலம் வெற்றி கிடைக்கப்போகிறதோ அந்த எண்ணம் மட்டுமே உற்பத்தி ஆகும். நேரமும் எப்போது வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு இருக்கிறதோ அந்த நேரமாக இருக்கும். இதைத்தான் வெற்றி சொரூபம் என்று சொல்லப்படுகிறது. 2.8.73

**66.** தனது அனேக விதமான சுமைகளை செக் பண்ணுங்கள். அமிர்தவேளையில் இருந்து எவைகள் எல்லாம் ஈஸ்வரிய மரியாதைகளாக தரப்பட்டுள்ளதோ, அவைகளில் எத்தனை மரியாதைகளுக்கு முழுநாளில் களங்கம் ஏற்பட்டது என்பதை அறிந்தும் இருக்கிறீர்கள். ஒவ்வொரு மரியாதை மீதும் பிராப்திக்கான மதிப்பெண்களும் இருக்கிறது அதோடு கூடவே தலைமீது சுமையேறுவதற்கான கணக்கும் இருக்கிறது. மேலும் எந்த மரியாதைகளை சாதரணமாக நினைக்கிறீர்களோ அவைகளுக்கும் அவற்றின் பிராப்தி மற்றும் சுமையின் கணக்கு இருக்கிறது. எண்ணம், சொல், நேரம்

மற்றும் சக்திகளின் கஜானா இந்த அனைத்தையும் வீணாக்குவதால் வீணானவைகளின் சுமை அதிகமாகிறது. எப்படி யக்ஞத்தின் ஸ்தூல பொருட்கள், உணவு அல்லது சாப்பாட்டை வீணாக்கினால் சுமை ஏறுகிறதல்லவா? அதேபோல இந்த மறுபிறவி வாழ்க்கையின் நேரத்தை பாபா அவர்கள் உலக சேவை செய்வதற்காக கொடுத்திருக்கிறார், சர்வ சக்திகளையும் தனக்காக அல்லது உலக நன்மைக்காக தந்திருக்கிறார். மனதை சுத்த எண்ணங்கள் எழுப்புவதற்காக தந்திருக்கிறார் மேலும் இந்த உடலை உலக நன்மை செய்யும் சேவைக்காகத் தந்திருக்கிறார். 4.7.74

**67.** இந்த நேரம் உங்கள் எல்லோருக்கும் 'ஜகத்பிதா' மற்றும் 'ஜகத்மாதா' அல்லது மாஸ்டர் படைப்பவர் என்ற நிலை இருக்கிறது. எனவே படைப்பவரின் ஒவ்வொரு எண்ணம் அல்லது உணர்வின் அதிர்வலைகள் படைப்பின் மீது தானாகவே வந்துவிடுகிறது. எனவே தற்காலத்தில் எந்த செயலை நாம் செய்கிறோமோ நம்மை பார்த்து அனைவரும் செய்வார்கள் – இந்த கவனம் மட்டும் வைத்தால் போதாது, ஆனால் கூடவே நான் என்ன நினைக்கிறேனோ, என்னுடைய உணர்வு எப்படி இருக்கிறதோ, வாயுமண்டலத்தில் அல்லது மற்ற ஆத்மாக்களிடத்தில் அந்த அதிர்வலைகள் பரவும் – இந்த சுலோகத்தையும் நினைவில் வைப்பது அவசியமாகும் இல்லையெனில் படைப்பாளர்களாகிய உங்களின் படைப்பும் பலவீனமாக அல்லது குறைந்த பதவி பெறுபவர்களாக இருப்பார்கள். படைப்பவரின் குறை படைப்பின்மீது தெளிவாகத் தெரியவரும். எனவே தனது பலவீன எண்ணங்களையும் இப்போது சக்திமிக்கதாக்குங்கள். எண்ணங்கள் மூலமாக உலகம் படைக்கப்பட்டது என்ற சொல் வழக்கு தற்சமயத்தின் விசயமாக இருக்கிறது. எப்படி எண்ணங்களோ அப்படி தனது படைப்பை படைக்க நிமித்தமாவீர்கள். 9.1.75

**68.** தேகஅபிமானமும், கவனக்குறைவும் திரும்பி வருவதேன், காரணம் என்ன? சுவாகா செய்ய வேண்டும் என்று எண்ணம் செய்துவிட்டுத்தான் போகிறீர்கள், ஆனால் எண்ணத்தோடு கூடவே (எப்படி விதை போட்ட பிறகு அதை பராமரிக்கிறீர்கள்) இதில் எதை பராமரிக்க வேண்டுமோ அதை பராமரிப்பதில்லை. நேரப்படி அதன்மீது அக்கறை காட்ட வேண்டும், நீங்கள் விதைத்த பிறகு கவனக் குறைவாகிவிடுகிறீர்கள். பாபாவிடம் கொடுத்தாயிற்று, இப்போது பாபாவிற்குத் தெரியும், அது பாபாவுடைய வேலை என நினைக்கிறீர்கள். நீங்கள் அதை பராமரிப்பதில்லை. எனவே வார்த்தையிலும் மனதிலும் கவனம் இருக்க வேண்டும். விதை நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக விதைத்தவுடன் தண்ணீர் ஊற்றுகிறீர்கள். விதைக்கு தினந்தோறும் தண்ணீர் ஊற்ற வேண்டியதாக இருக்கிறது, அதேபோல எண்ண வடிவ விதையை மீண்டும் மீண்டும் நினைவு செய்ய வேண்டும். அதில் குறை இருந்துவிடுகிறது, மேலும் நீங்கள் கவலையற்றவர் ஆகிவிடுகிறீர்கள், ஓய்வை விரும்புவர் ஆகிவிடுகிறீர்கள். ஓய்வை விரும்பும் சமஸ்காரம் இருக்கக்கூடாது, ஆனால் அக்கறையின் எண்ணங்கள் இருக்க வேண்டும். 18.1.75

**69.** நிகழ் காலத்தில் எதுவும் தெரிய வராது அல்லது அனுபவம் ஏற்படாது அல்லது பிராப்தி எதுவும் கிடைக்காது, இந்தப் படிப்பு எதிர்காலத்திற்குத்தான் என ஒருபோதும் நினைக்காதீர்கள். எனது எதிர்காலம் மிகப் பிரகாசமாக இருக்கிறது. இப்போது நான் மறைமுகமாக இருக்கிறேன், கடைசியில் பிரசித்தமாகி விடுவேன் என நினைக்கிறீர்கள், ஆனால் எதிர்காலத்தின் ஜொலிப்பு, எதிர்காலத்தின் பலன் அல்லது கடைசி நேரத்தில் பிரசித்தமாகக்கூடிய ஆத்மாவின் பிரகாசம் இப்போதிருந்தே அனைவருக்கும் அனுபவமாக வேண்டும். எனவே முதலில் உடனடிப் பலன் பிறகு கூடவே எதிர்காலப் பலன். உடனடிப் பலன் இல்லையென்றால் எதிர்காலப் பலனும் இருப்பதில்லை. தானே தன்னை வெளிப்படுத்தாமல் இருக்கலாம் எனினும், கூட இருப்பவர்கள், சிநேகிதர்கள், உதவியாளர்கள் அப்படிப்பட்ட ஆத்மாவை தாமே பிரசித்தம் செய்து விடுவார்கள்.

தன்னை எந்த விதத்திலாவது நிரூபிப்பவர்கள் ஒருபோதும் பிரசித்தமாக முடியாது என்பது ஈஸ்வரிய சட்டம். எனவே என்னை எனக்குத் தெரியும், நான் சரியாக இருக்கிறேன் மற்றவர்கள் என்னை அறியவில்லை அல்லது தெரிந்துகொள்ளவில்லை, கடைசியில் கட்டாயம் தெரிந்து கொள்வார்கள் அல்லது இன்னும் போகப்போக என்ன நடக்கிறது எனப் பார்க்கலாம் என நினைப்பது, ஞான சொரூப,

நினைவு சொரூப ஆத்மாவிற்கு தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் சோம்பேறித் தனத்தின் இனிமையான தூக்கமாக இருக்கிறது. 10.9.75

**70.** தனது தேக அபிமான எண்ணங்களுக்கு, தேக உலகப் பிரச்சினைகளைப் பற்றிய எண்ணங்களுக்கு என்ன நிலை ஏற்படும்? இந்த குழப்பமான எண்ணங்களையும் அடக்கி வைக்க வேண்டும். சரீரம் மற்றும் சரீர சம்மந்தப்பட்ட அனைத்து பொருட்களை பற்றிய எண்ணத்தையும் அல்லது தனக்கு அவசியமான சாதனங்களைப் பெறுவதற்கான எண்ணத்தையும் அடக்கி வைக்க வேண்டும். வீட்டிற்குப் போக வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர மற்ற எந்த எண்ணத்தையும் வளரவிடக்கூடாது – இப்போது நான் வீட்டிற்குப் போயே போய்விட்டேன் என்ற எண்ணம் மட்டும் இருந்தால் போதும். சரீரத்தின் எந்த சம்மந்தமோ அல்லது நட்போ கீழே கொண்டுவரக்கூடாது. 14.9.75

**71.** பிரச்சினை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அது மனதிலாகட்டும், உடலில் ஆகட்டும் அல்லது தொடர்பில் ஆகட்டும், எந்தவொரு ஆத்மாவும் எண்ணத்தில் வரக்கூடாது. எண்ணத்தில்கூட ஏதாவது ஆத்மாவின் நினைவு வந்தால் அந்த நொடிக்கும் கணக்கு ஏற்படுகிறது. எனவே தான் 8 பேர் பாஸாகிறார்கள். விசேசமாக 8 பேருக்குத்தான் புகழ் இருக்கிறது. இவ்வளவு ஆழமான விளைவுகள் இருக்குமா! மிகக் கடினமான பேப்பராக இருக்கிறது. **யாருடைய எண்ணத்தில் எவரும் இருப்பதில்லையோ, எந்தப் பிரச்சினையிலும் எந்தக் கட்டாயத்திலும் இருப்பதில்லையோ, நொடிநேர எண்ணத்தில்கூட இருப்பதில்லையோ, கட்டாய சூழ்நிலையிலும் உறுதியாக இருக்கிறாரோ அவரையே *பாஸ்தா* என சொல்லப்படுகிறது.** 21.9.75

**72.** சிந்தித்து செயல்படுங்கள் என்று அஞ்ஞான காலத்திலும் சொல்வது வழக்கம். முதலில் யோசியுங்கள் பிறகு செயலைச் செய்யுங்கள் அல்லது பேசுங்கள். சிந்தித்து ஒவ்வொரு செயலையும் செய்தீர்கள் என்றால் வீண் செயல்களுக்குப் பதிலாக ஒவ்வொரு செயலும் நல்ல செயலாக இருக்கும். செயலுக்கு முன்னால் யோசனை அதாவது எண்ணங்கள் உற்பத்தி ஆகிறது. இந்த எண்ணமே விதையாக இருக்கிறது. ஒருவேளை விதை அதாவது எண்ணங்கள் பவர்புல்லாக இருந்தால் வார்த்தை மற்றும் கர்மம் தானே பவர்புல்லாக இருக்கும். எனவே தற்சமய முயற்சியில் ஒவ்வொரு எண்ணத்தையும் பவர்புல் ஆக்க வேண்டும். எண்ணங்களே வாழ்க்கையின் சிறந்த பொக்கிஷமாக இருக்கிறது. எப்படி பொக்கிஷத்தின் மூலமாக எது வேண்டுமோ, எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவு பெற முடியும், அதைப்போலவே சிறந்த எண்ணங்களின் மூலமாகவே சதா காலத்திற்கான சிறந்த பலனை பெற முடியும். எப்போதும் இந்த சிறிய சுலோகத்தை நினைவில் வையுங்கள் **சிந்தித்து செயல்பட வேண்டும் அல்லது பேச வேண்டும்** அப்போது சதாகாலத்திற்கு சிறந்த வாழ்க்கையை உருவாக்க முடியும் மேலும் தர்மராஜபுரியின் தண்டனையில் இருந்தும் தப்பிக்க முடியும். எப்படி நீதிபதியின் வேலை என்னவாக இருக்கிறது யோசித்து புரிந்துகொண்டு தீர்ப்பு வழங்க வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொரு எண்ணத்தின்மீதும் தனக்கு நீதிபதி ஆகுங்கள். இதன் மூலமாக சொர்கத்திலும் உலக மகாராஜன் என்ற சிறந்த பதவியைப் பெற முடியும். 27.9.75

**73.** பக்தர்கள் எந்த தேவிகள் மூலமாக சித்திகளை பெறுகிறார்களோ, அதே தேவிகள், ஒரு சமயத்தில் சித்தி பெறும் எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள். இது ஏன்? முயற்சி செய்தபோதும் சித்தி கிடைக்காதது ஏன்? நேரப்படி சம்பூரண நிலையின் பிரத்யட்சம் குறைவாக இருப்பதேன்? என போகப்போக இந்த எண்ணங்கள் நிச்சயம் உற்பத்தியாகிறது. எனவே பாபாவும் கேள்வி கேட்கிறார் – ஏன்? சித்தி சொரூபமாவதற்கு தனதாக்க வேண்டிய முக்கிய விசயம் எதுவாக இருக்கிறது? நொடியில் அம்பை எங்கு எறிந்தாலும் அங்கே கங்கை உற்பத்தியானது அதாவது நொடியில் நடக்கமுடியாததும் நடந்து பிரத்தியட்சபலன் ரூபத்தில் தெரிந்தது என பாண்டவர்களுக்கு கல்ப முன்பு புகழ் இருந்தது. இதைத்தான் சித்தி என்று சொல்லப்படுகிறது. இது தற்போது நடப்பதில்லை, ஏனெனில் பிரத்தியட்ச பலனை பெறுவதற்காக ஒவ்வொரு நொடியும் தனது சம்பூரண, சர்வசக்தி நிறைந்த சொரூபத்தின் நினைவு பிரத்தியட்ச எண்ண வடிவில் இருப்பதில்லை. நான் முயற்சி செய்பவன், நிறைந்தவனாக

ஆகியே தீருவேன், கட்டாயம் ஆகிவிடும் – வரிசைப்படி ஆகியே தீரவேண்டும். நம்முடைய வேலை முயற்சி செய்வது, நமது சக்திக்குத் தக்கபடி செய்துகொண்டுதானே இருக்கிறோம் – இப்படிப்பட்ட ஒவ்வொரு நொடி எண்ண வடிவ விதைகளால் அனைத்து சக்திகளும் நிறைவதில்லை. அந்த நேர எண்ணங்களில் நடந்தே தீரும் என அதாவது எதிர்கால எண்ணங்கள் நிறைந்திருக்கிறது. உறுதியான நம்பிக்கை அல்லது பிரத்தியட்ச பலனின் இரசத்தால் பலம் நிறையாமல் இருக்கும் காரணத்தால் சித்தியும் பிரத்தியட்சமாக இருப்பதில்லை. எனினும் இரண்டு நிமிடத்திற்குப் பிறகு, ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அல்லது சில நாட்களுக்குப் பிறகு எதிர்கால பிராப்தி ஏற்பட்டுவிடுகிறதா – எனவே இதன் காரணத்தைப் புரிந்துகொண்டீர்களா? உங்கள் எண்ண வடிவ விதையின் காரணத்தாலேயே பிரத்தியட்ச சித்தி கிடைக்கவில்லை. அனேக விதமான சாதாரண எண்ணங்கள் எழுகிறது. நேரப்படி ஆகியே தீரவேண்டும், இப்போது எல்லோரும் எங்கே தயாராக இருக்கிறார்கள்? இப்போது முன்னால் உள்ள எண்களே இன்னும் தயாராகவில்லையே. கடைசியில் எட்டு பேர்தானே இருப்பார்கள். இப்படியாக எதிர்கால ஞானத்தின் சாதாரண எண்ணங்கள் உங்கள் விதையை பலவீனமாக்கி விடுகிறது பின்னர் இதே எதிர்கால எண்ணங்கள் எதை எந்த நேரத்தில் பயன்படுத்தக்கூடாதோ, அந்த நேரத்தில் யோசிக்காமலேயே பயன்படுத்தி விடுகிறீர்கள் – இந்த காரணத்தால் பிரத்தியட்ச பலன்கூட எதிர்கால பலனின் ரூபத்தில் மாற்றம் பெற்றுவிடுகிறது. 1.10.75

**74.** முயற்சிக்கான சுலோகன்—எப்படிப்பட்ட எண்ணத்தை நான் எழுப்புகிறேனோ அந்த எனது எண்ணத்தின்படியே சூழ்நிலை உருவாகும். எண்ணத்தை ஆதாரமாகக்கொண்டது சூழ்நிலை, சூழ்நிலையை ஆதாரமாகக்கொண்டது முயற்சி. எந்த எண்ணத்தை எழுப்புகிறீர்களோ அதை அனைவரும் பின்பற்றுவார்கள். செயல் என்பது பெரிய விசயம், ஆனால் எண்ணத்தின் மீதும் கவனம் கொடுக்க வேண்டும், எண்ணத்தை இலேசான விசயமாக நினைக்க வேண்டாம், ஏனென்றால் எண்ணமே விதையாக இருக்கிறது. எண்ண வடிவ விதை பலவீனமாக இருந்தால் ஒருபோதும் சக்திமிக்க பழம் அனுபவமாகாது. ஒரு எண்ணம் வீணாகப் போனாலும், அதுவும் ஒரு தவறுதான். எப்படி வார்த்தையில் செய்த பிழை உணரப்படுகிறது, அதேபோல வீண் எண்ணங்களின் பிழைகளையும் உணர வேண்டும். எப்போது இப்படி செக்கிங் செய்கிறீர்களோ அப்போதே நீங்கள் முன்னேற முடியும். 8.10.75

**75.** ‘இதைச் செய்து முடிப்பேன், இப்படி நடக்க வேண்டும், இவர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார், எனக்கும் எல்லாம் செய்யத் தெரியும்’ என செயலுக்கு வருவதற்கு முன்பாக சமஸ்காரங்கள், எண்ணத்தில் வருகிறது. இந்த வடிவில் எண்ணங்களாக சமஸ்காரங்கள் உற்பத்தியாகிறது. இந்த நேரம் சமஸ்காரம் எண்ணங்களின் வடிவில் தனது ரூபத்தைக் காட்டுவது உங்களுக்குத் தெரியும்போது என்ன இந்த எண்ணம் பாப் சமான் இருக்கிறதா? என ஒவ்வொரு எண்ணத்தையும் முதலில் செக் பண்ண வேண்டும். எப்போதும் இந்த பழக்கத்தை ஏற்படுத்துங்கள் அல்லது பயிற்சி செய்யுங்கள். 12.10.75

**76.** அப்படிப்பட்ட மகாதானியின் எண்ணங்கள் மற்றும் சொற்கள் தானாகவே வரதானத்தின் ரூபமாகிவிடுகிறது. எந்த ஆத்மாக்களுக்காக எந்த எண்ணத்தை எழுப்புகிறீர்களோ அல்லது எந்த சொல்லை சொல்கிறீர்களோ அது அந்த ஆத்மாவிற்கு வரமாகிவிடுகிறது. 25.10.75

**77.** எண்ணங்கள் மூலமாகவும் எந்த ஆத்மாவிற்கும் துக்கம் கொடுப்பது அல்லது துக்கம் பெறுவது இம்சையே. சம்பூரண அகிம்சாவாதி என்றால் எண்ணத்தின் மூலமாகவும் யாருக்கும் துக்கம் கொடுக்காதவர். உத்தம புருஷர் என்றால் ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு அடியிலும் உத்தமம் அதாவது சிறப்பாக இருப்பது, சாதாரணம் இல்லாமல் இருப்பது, லௌகீகமாக இல்லாமல் இருப்பது மற்றும் வீணானவைகள் இல்லாமல் இருப்பது. 7.2.76

**78.** கேள்வி : எல்லா கருத்துக்களின் சாரத்தை ஒரு வார்த்தையில் சொல்லுங்கள்?

பதில் : **கருத்துக்களின் சாரம் – பாய்ண்ட் ரூபம் அதாவது புள்ளி வடிவமாகிவிட வேண்டும்.**

கேள்வி : புள்ளி வடிவ நிலை ஏற்படும்போது எந்த டபுள் பிராப்தி கிடைக்கிறது?

பதில் : புள்ளி வடிவம் என்றால் பவர்புல் நிலை, அதில் வீண் எண்ணங்கள் ஓடுவதில்லை, மேலும் புள்ளி என்றால் முடிந்ததற்கு முற்றுப்புள்ளி. இதன் மூலமாக செயலும் சிறப்பாக இருக்கிறது மேலும் வீண் எண்ணங்கள் இல்லாத காரணத்தால் முயற்சியின் வேகமும் தீவிரமாக இருக்கிறது. எனவே முடிந்ததற்கு முற்றுப்புள்ளி வைப்பதை யோசித்து செய்ய வேண்டும். வீணானதை பார்ப்பது, கேட்பது மற்றும் பேசுவது அனைத்தையும் நிறுத்த வேண்டும். நல்ல கண்கள் திறந்திருக்க வேண்டும் அதாவது சாட்சியாக இருக்கும் நிலையில் இருக்க வேண்டும். 9.2.76

**79.** பவித்திரமாக இருப்பதே பிராமண பிறவியின் சுயதர்மம். பவித்திர எண்ணங்கள் பிராமண பிறவியின் இலட்சியமாகவும் இலட்சணமாகவும் இருக்கிறது. யாருடைய உண்மையான இலட்சணம் பவித்திரமாக இருக்கிறதோ அவருக்கு அழிவு ஏற்படும் நாளோடுகூட எந்த தொடர்பும் கிடையாது. இதுவோ தனது பலவீனத்தை மறைப்பதற்குச் சொல்லப்படும் சாக்குப்போக்காக இருக்கிறது. 18.1.77

**80.** பலவீனங்களை தூர விலக்குவதற்குரிய எளிய சாதனம் எது? எவைகள் எல்லாம் எண்ணங்களில் வருகிறதோ அவைகளை பாபாவிடம் அர்ப்பணம் செய்துவிடுங்கள். எது வந்தாலும் அதை பாபாவின் முன்னால் வைத்துவிட்டு பொறுப்பை பாபாவிடம் விட்டுவிடுங்கள், அப்போது நீங்கள் சுதந்திரமாகிவிடுவீர்கள். நான் பாபாவுடையவன் பாபா என்னுடையவர் என்ற ஒரு உறுதியான எண்ணத்தை கொள்ளுங்கள். எப்போது என்னுடைய பாபாவோ, அப்போது என்னுடையதின்மீது அதிகாரம் இருக்கிறதல்லவா? அதிகாரி சொரூபத்தில் உறுதியாக இருந்தால் அடிமைத்தனம் தானாகவே அகன்று போய்விடும். 5.5.77

**81.** யார் பாபாவிற்கு சமமான குழந்தைகளோ அவர்களுடைய எண்ணங்களும் அம்பு தைப்பதைப்போல உள்ளத்தை தைக்கும். எப்படி அந்தக் காலத்தில் அம்பெய்தினார்கள். அப்போது யாரை அம்பு தைத்ததோ அவர் அம்போடு கீழே விழுந்துவிடுவார். அதே போல யார் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவரோ, அவரது உள்ளத்தின் எண்ணங்கள் எந்த ஆத்மாக்களுக்காக நினைக்கப்படுகிறதோ, அந்த மனிதர் அதாவது ஆத்மா தானே தனது உள்ளத்தின் பாவனையை வெளிப்படுத்துவதற்காக உங்கள் முன்னால் வந்துவிடுவார். 28.5.77

**82.** தடைகள் ஏன் வருகிறது, அதன் காரணத்தால் தீவிர முயற்சியாளரில் இருந்து வெறும் முயற்சியாளர் ஆகிவிடுகிறீர்கள்? உயரும் கலைக்குப் பதிலாக நிற்கும் கலைக்கு வந்துவிடுகிறீர்கள். மாலிக் அல்லது மாஸ்டர் சர்வசக்திவானாக இருப்பதற்குப் பதிலாக உற்சாகமற்றவராக அல்லது அடிமையாகி விடுகிறீர்கள். காரணம்? மிகச் சிறிய விசயமாக இருக்கிறது. எப்படி அந்தநாளில் சொன்னபடி, மூல விசயம் மெஜாரிட்டி குழந்தைகளுக்கு முன்னால் வீண் எண்ணங்களின் புயல் அதிகமாக வீசுகிறது.

வீண் எண்ணங்கள் வருவதற்கு ஆதாரமாக இருப்பது, சுப எண்ணங்கள் அதாவது சுத்த சிந்தனைகள், ஞான கஜானா குறைவாக இருப்பது. கிடைத்திருக்கும்போதும் பயன்படுத்த தெரியவில்லை. மேலும் சேர்த்து வைக்கத் தெரியவில்லை. அல்லது அதற்கான வழிமுறைகள் வருவதில்லை, இந்த காரணங்களால் வளர்ச்சி அடைவதில்லை. 29.5.77

**83.** பற்றிற்கும் பலநிலைகள் உள்ளன. ஒன்று சூட்சும பற்று, அதனை சூட்சும ஆத்மீக நிலையில் நிலையாக இருப்பதன் மூலமாகவே அறிய முடியும். இரண்டாவது ஸ்தூல ரூபத்தின் பற்று, அதை எளிதாக அறிய முடியும். சூட்சும பற்றின் விஸ்தாரம் அதிகமாக இருக்கிறது. பற்றில்லாமல், புத்தியின் கவர்ச்சி எங்கும் போகமுடியாது. அல்லது புத்தி எந்தப்பக்கமும் வளைய முடியாது. எனவே வளைந்து கொடுப்பதில் இருந்து பற்றை செக்கிங் பண்ணலாம். அது எண்ணத்திலாகட்டும், சொல்லிலாகட்டும்,

செயலிலாகட்டும், சம்மந்தத்திலாகட்டும், தொடர்பிலாகட்டும், விரும்பாமலேயே அந்தப்பக்கம் நேரம் செலவிடப்படுவது நிச்சயம். இந்தக் காரணங்களால் **வீண் எண்ணங்கள் உருவாக மூல காரணமாக இருப்பது – பற்று.** இதை செக் பண்ணுங்கள். எந்த விசயத்தை நீங்கள் விரும்பவில்லையோ, அதுவும் வீண் எண்ணங்களின் வடிவில் இடைஞ்சல் பண்ணுகிறது. இதற்கும் காரணம், பழைய சுபாவம் மற்றும் சமஸ்காரத்தில் உள்ள என்னுடைய என்ற குறைபாடு. எதுவரை என்னுடைய சுபாவம், என்னுடைய சமஸ்காரம் இருக்கிறதோ, அது இழுக்கும்.
வீண் எண்ணங்களுக்கு அடுத்த காரணம் முழுநாளின் தினசரி நடவடிக்கைகளுக்கு மனம் சொல் செயலில் பாபா மூலமாக கிடைத்த மரியாதைகளின் முழுமையான ஸ்ரீமத்தாக எவைகள் இருக்கின்றனவோ, அவைகளை ஏதாவது ரூபத்தில் மீறி நடக்கிறீர்கள், கீழ்படிந்து நடப்பவர் என்ற நிலையில் இருந்து அவமரியாதை செய்பவர் ஆகிவிடுகிறீர்கள். மரியாதைகளின் எல்லையை மனதின் மூலமாக தாண்டினாலும், வீண் எண்ண வடிவ ராவணன் உங்களோடு யுத்தம் செய்ய வந்துவிடுவான். எனவே இதையும் செக்கிங் பண்ணுங்கள், எண்ணத்தின் மூலமாக, வார்த்தை, செயல், சம்மந்தம், தொடர்பு மூலமாக பிராமணர்களுடைய நீதி மற்றும் விதிகளுக்கு களங்கம் விளைவிக்க வில்லையா? அவசியம் ஏதாவது நீதி அல்லது விதி 'மிஸ்சாகி' இருக்கும் அப்போது புத்தியில் வீண் எண்ணங்கள் 'மிக்ஸ்' ஆகிறது. அடுத்த காரணம் புரிந்ததா? எனவே செக்கிங் நல்லபடியாக இருக்க வேண்டும். அப்போதுதான் வீண் எண்ணங்கள் நிவர்த்தி ஆக முடியும். 29.5.77

**84. பாவம் மற்றும் புண்ணியத்தின் ஆழமான விளைவுகளை அறிந்துகொள்ளுங்கள். பாவத்தின் வேகம் சிறந்த பாக்கியத்தை இழக்கச் செய்கிறது. எண்ணங்கள் மூலமாகவும் பாவங்கள் ஏற்படுகின்றது. எண்ணங்களின் பாவங்களுக்கும் நேரடியான பலன் கிடைக்கிறது. எண்ணங்களில் இருக்கும் சுயத்தின் பலவீனம், ஏதாவது விகாரம் பாவகணக்கில் சேருகிறது. ஆனால் மற்ற ஆத்மாக்களைக் குறித்த எண்ணங்களிலும் ஏதாவது விகார வயப்பட்ட உணர்வு இருக்குமானால் அதுவும் மாகாபவமாக இருக்கிறது, மற்ற எந்த ஆத்மாக்களைக் குறித்த வீணான வார்த்தைகளும் பாவ கணக்கிலேயே சேருகிறது. அதேபோல கர்மம் அதாவது சம்மந்தம் மற்றும் தொடர்பில் எவர்மீதாவது சுப பாவனைக்குப் பதிலாக வேறு எந்த பாவனை இருந்தாலும் பாவ கணக்கில் சேர்ந்துவிடுகிறது – ஏனெனில் அதுவும் துக்கம் கொடுப்பதாகும்.** சுப பாவனை புண்ணியக் கணக்கை அதிகமாக்குகிறது. வீண் உணர்வுகள் அல்லது வெறுப்புணர்வுகள் அல்லது பொறாமை உணர்வுகள் பாவ கணக்கை அதிகமாக்குகிறது எனவே பாபாவுடைய குழந்தையாகி விட்டேன், ஆஸ்திக்கு அதிகாரியாகிவிட்டேன் அதாவது புண்ணிய ஆத்மா ஆகிவிட்டேன், இந்த நம்பிக்கை மற்றும் போதை இருப்பது மிக நல்லது. எனினும் போதையையும் பொறாமையையும் 'மிக்ஸ்' பண்ணக்கூடாது. பாபாவுடையவராக ஆனபிறகு எண்ணமுடியாத அளவு பிராப்தி இருக்கிறது எனினும் புண்ணிய ஆத்மாவோடு கூடவே பாவத்தின் சுமையும் நூறு மடங்கு கணக்குப்படி இருக்கிறது. எனவே இந்தஅளவு கவனம் கொடுக்காதவர் ஆகவேண்டாம். 3.12.78

**85.** எண்ணங்களில் அவ்வளவு பலம் இருக்க வேண்டும் அதன்மூலமாக உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்திசாலி எண்ணங்கள் மூலமாக சேவை செய்ய முடிய வேண்டும், சுத்தமான உணர்வின் ஆதாரத்தில் வாயு மண்டலத்தை சுத்தம் செய்ய முடியவேண்டும். உணர்விற்கு சக்தி இருக்கிறது. சுத்தம் என்றால் தூய்மை. தூய்மைக்கு ஆதாரம் சகோதர நினைவு மற்றும் உணர்வு. 4.1.79

**86. எண்ணங்களும் ஒரு பொக்கிஷமாக இருக்கிறது, ஞானமும் பொக்கிஷமாக இருக்கிறது, ஸ்தூல செல்வத்தையும் இறைவன் பெயரால் அர்ப்பணம் செய்வதால் ஒரு நயாபைசா ஒரு ரத்தினத்திற்கு சமமான மதிப்புடையதாகிவிடுகிறது.** இந்த எல்லா பொக்கிஷங்களையும் தனக்காக அல்லது சேவைக்காக காரியத்தில் ஈடுபடுத்தவில்லை என்றால் அதை வீணானது என்றே சொல்ல முடியும். ஒவ்வொரு நொடியும் சுய நன்மைக்காக அல்லது உலக நன்மைக்காக இருக்க வேண்டும். இப்படி எல்லா பொக்கிஷங்களையும் இவைகளுக்காக பாபா அவர்கள் தந்திருக்கிறார்கள் – இந்த

காரியங்களுககாகவே ஈடுபடுத்துகிறீர்களா! நல்லதும் செய்யவில்லை, கெட்டதும் செய்யவில்லை என சில குழந்தைகள் சொல்கிறார்கள் அப்போது அது எந்த கணக்கில் போகிறது. மதிப்பளிக்கவில்லை என்றாலும் வீண் என்றுதானே சொல்வார்கள். இந்த காரணத்தால் முயற்சியின் வேகம் தீவிரமாக இருக்க முடிவதில்லை மேலும் இதே காரணத்தால் வரிசைப்படி இருப்பவர் அதிகமாகிறார்கள். வரிசைப்படி ஆவதற்கான காரணம் எதுவாக இருக்கிறது என்பதை இப்போது புரிந்துகொண்டீர்களா? 10.1.79

**87.** முதலில் மௌன விரதம் கடைப்பிடிக்க சொல்லப்பட்டிருந்தது, அப்போது எல்லோரும் சுதந்திரமாக இருந்தீர்கள், நேரம் சேமிக்கப்பட்டது – எனவே அந்தமாதிரி ஏதாவது சாதனத்தை உருவாக்குங்கள் அதன்மூலம் அனைவருடைய நேரமும் சேமிக்கப்பட வேண்டும் – மனதில் மௌனம் இருந்தால் வீண் எண்ணங்கள் வரவே கூடாது. இதுவும் மனதின் மௌனம்தானே. எப்படி வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லையோ அதேபோல **வீண் எண்ணங்கள் வரக்கூடாது – இதுவும் மனதின் மௌனம்தான்.** அப்போது வீணானவைகள் அழிந்துபோய்விடும். எல்லா நேரமும் மிச்சமாகும், அப்போது மீண்டும் சேவை ஆரம்பம் ஆகும். மனதின் மௌனத்தின் மூலமாக புதிய கண்டுபிடிப்புகள் வெளிப்படும் – எப்படி ஆரம்ப கால மௌனத்தில் வண்ணங்கள் வெளிப்பட்டது அதேபோல இந்த மனதின் மௌனம் மூலமாக புதிய வண்ணங்கள் தோன்றும். 10.1.79

**88.** எண்ணங்கள் மூலமாக ஈஸ்வரிய சேவை செய்ய வேண்டும் இதுவும் சேவை செய்ய சிறந்த மற்றும் புதிய வழியாக இருக்கிறது. நகை வியாபாரி எப்படி தினந்தோறும் காலையில் கடை திறந்து தம்முடைய ஒவ்வொரு ரத்தினத்தையும் சுத்தமாக இருக்கிறதா, பிரகாசம் சரியாக இருக்கிறதா, சரியான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதா என செக் பண்ணுகிறார், அதேபோல தினந்தோறும் அமிர்தவேளையில் தனது தொடர்பில் வரக்கூடிய ஆத்மாக்கள்மீது எண்ணங்கள் மூலமாக பார்வையை செலுத்துங்கள், எந்த அளவு நீங்கள் அவர்களை எண்ணங்களால் நினைவு செய்கிறீர்களோ அந்த அளவு அந்த எண்ணங்கள் அவர்களைச் சென்று சேரும் பிறகு அவர்கள் நாங்களும் பலமுறை உங்களை நினைவு செய்தோம் எனச் சொல்வார்கள். இப்படியாக சேவைக்காக புதுப்புது வழிகளை கையாண்டு முன்னேறிக்கொண்டே இருங்கள். 14.1.79

**89.** அறிவியல் சாதனமான ஆகாயவிமானம் எப்போது பறக்க இருக்கிறதோ, அதற்கு முன்னால் 'செக்கிங்' செய்யப்படுகிறது. பிறகு அதில் எதெல்லாம் தேவைப்படுகிறதோ – பெட்ரோல் தேவைப்படுகிறது, காற்று தேவைப்படுகிறது, உணவு தேவைப்படுகிறது, இப்படி எல்லாவற்றையும் நிரப்பியவுடன் தரையைவிட்டு எழும்பி பறந்து போகிறது. பிராமண ஆத்மா வடிவ விமானமும் தன்னுடைய இடத்திற்கு வந்து நின்றுவிடுகிறது. ஒரு நொடியில் பறக்க வேண்டும் என்ற டைரக்சன் இருந்தது எனினும் அதில் சிலர் செக்கிங் செய்வதிலேயே இருந்துவிட்டார்கள். நான் ஆத்மாவாக இருக்கிறேன், நான் இந்த சரீரமல்ல என்ற செக்கிங் செய்வதிலேயே இருந்துவிட்டார்கள். மற்ற சிலர் ஞான சிந்தனை மூலமாக தன்னை சக்தியால் நிரம்பச் செய்வதில் இருந்துவிட்டார்கள். நான் மாஸ்டர் ஞான சொரூபமாக இருக்கிறேன், நான் மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கிறேன் – இந்த சுத்த எண்ணங்கள் வரை இருந்தார்கள், ஆனால் சொரூபமாக முடியவில்லை. எனவே இரண்டாவது நிலையான நிரப்புவதில் இருந்துவிட்டனர் மேலும் சிலர் நிரப்புவதிலேயே பிஸியாக இருந்த காரணத்தால் பறக்காமல் இருந்துவிட்டார்கள். ஏனெனில் சுத்த எண்ணங்களை நினைவு செய்துகொண்டிருந்தனர் எனினும் இந்த தேகவடிவ தரையை விடமுடியாமல் இருந்தார்கள். அசரீரி நிலையில் நிலையாக இருக்க முடியவில்லை. மிகக்குறைந்த விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே டைரக்சன்படி நொடியில் பறந்து சூட்சுமவதனம் அல்லது மூலவதனத்தை சென்று சேர்ந்தார்கள். பாபா பிரவேசம் ஆகிறார் பின்னர் சென்றுவிடுகிறார், பரமாத்மா எப்படி பிரவேசமாக தகுதியுடையவராக இருக்கிறாரோ அதேபோல மறுபிறவி பெற்ற பிராமண ஆத்மாக்களும் அதாவது மகான் ஆத்மாக்களும் பிரவேசமாக தகுதி உடையவராக இருக்கிறார்கள். எப்போது வேண்டுமோ கர்மயோகி ஆகுங்கள், எப்போது வேண்டுமோ பரந்தாமவாசி யோகி ஆகுங்கள், எப்போது வேண்டுமோ சூட்சும வதனவாசி யோகி ஆகுங்கள். சுதந்திரமாக இருக்கிறீர்கள். மூன்று உலகத்திற்கும் அதிபதியாக இருக்கிறீர்கள்.

இந்த நேரம் மூன்று உலகநாதனாக இருக்கிறீர்கள். எனவே நாதன் தனது இடத்திற்கு எப்போது வேண்டுமோ அப்போது போக முடியும். 26.11.79

**90.** எப்போதும் முயற்சியில் தீவிரவேகத்தில் சென்றுகொண்டே இருங்கள். சுத்த எண்ணங்களின் ஸ்டாக் இருந்தால் வீணானவைகள் முடிந்துபோய்விடும். தினந்தோறும் ஞானத்தைக் கேட்கிறீர்கள், அதிலிருந்து ஏதாவது விசயத்தை சிந்தனை செய்துகொண்டே இருங்கள். வீண் எண்ணங்கள் ஓடுகிறது என்றால் சிந்தனை சக்தி குறைவாக இருக்கிறது என்று அர்த்தம். சிந்தனை செய்ய கற்றுக்கொள்ளுங்கள். ஒரேயொரு வார்த்தையை எடுத்து அதன் ஆழத்திற்குச் செல்லுங்கள். தினந்தோறும் தனக்குத்தானே ஏதாவது ஒரு தலைப்பை சிந்திக்கக் கொடுங்கள், பிறகு வீண் எண்ணங்கள் முடிந்துபோய்விடும். எப்போதெல்லாம் வீண் எண்ணங்கள் வருகிறதோ அப்போது புத்தியால் மதுவனத்திற்கு வந்துவிடுங்கள் இங்குள்ள வாயுமண்டலம், இங்கிருக்கும் சிறந்த சகவாசத்தை நினைவு செய்தாலும் வீணானவைகள் முடிந்துபோய்விடும். லைன் சேன்ஞ் ஆகிவிடும். 30.11.79.

**91.** சேவை செய்யக்கூடிய குழந்தைகள் மனதில் வீணானவைகள் ஒருபோதும் ஓடக்கூடாது. வீண் எண்ணங்கள் வருகிறது என்று நீங்களே சொன்னால் மற்றவர்கள் என்ன செய்வார்கள். மற்றவர்கள் கெட்ட எண்ணதிற்குள் சென்றுவிடுவார்கள். இப்படியாக ஒவ்வொருவரும் கவனம் கொடுக்கவே செய்கிறீர்கள் எனினும் இப்போது நுணுக்கமான கவனம் தேவை. எண்ணங்களாலும் சேவை நடக்க வேண்டும். ஒருவேளை எண்ணங்களின் சக்தியை சேவையில் பிஸியாக்கிவிட்டீர்கள் என்றால் வீணானவைகள் தாமாகவே முடிந்துபோய்விடும். எப்படி இன்றைய இளைஞர்கள் குரூப்பை ஏதாவது காரியத்தில் பிஸியாக வைத்திருக்க முயற்சி செய்கிறார்கள், அதன்மூலம் இளைஞர்களின் சக்தி தீங்கிழைக்கும் காரியத்திற்குப் போகாமல் தடுக்கப்படுகிறது. எங்காவது மழைநீர் வீணாகப்போனால் அதற்கு அணை கட்டி வீணாவதை பயனுள்ளதாக்குகிறார்கள். அதேபோல வீணாகப்போகும் எண்ணங்களின் சக்தியை சேவையில் பிஸியாக வைத்திருந்தீர்கள் என்றால் அது வீணாவதற்குப் பதிலாக சக்திசாலி ஆகிவிடும். எண்ணம், சொல், செயல் அல்லது ஞானத்தின் சக்திகள் எதுவும் வீணாகப்போகக்கூடாது. 19.12.79

**92.** முழு நாளின் ஆதாரத்தில் கனவுகள் வருகிறது. யார் இரவு பகலாக சேவையில் பிஸியாக இருக்கிறார்களோ அவர்களுடைய கனவும் சேவைக்காகவே இருக்கும். கனவில்கூட ஏதாவது புதுப்புது விசயங்கள். சேவைக்கான திட்டங்கள் அல்லது வழிகள் தெரியவரும். எனவே இவ்வளவு பிஸியாக இருக்கிறீர்களா? வீண் எண்ணங்களில் இருந்து விடுபட்டுவிட்டீர்கள் அல்லவா? எவ்வளவு பிஸியாக இருக்கிறீர்களோ, அவ்வளவு தன்னுடைய முயற்சியை வீணானவற்றில் இருந்தும், மற்றவர்களையும் வீணானவைகளில் இருந்தும் காப்பாற்ற முடியும். ஒவ்வொரு நேரமும் இது வீணா அல்லது சக்தியாக என செக்கிங் இருக்க வேண்டும். ஒருவேளை கொஞ்சமாவது வீணானதின் அனுபவம் ஏற்பட்டால் அந்த நேரமே மாற்றிவிடுங்கள். நிமித்தமாய் இருப்பவர்களைப் பார்த்து மற்றவரிடத்திலும் சக்திமிக்க எண்ணங்கள் தானாகவே வந்துக்கொண்டே இருக்கும். 26.12.79

**93.** ஒரு வார்த்தை 'ஒருமித்தநிலை' (ஏகாக்கிரதா)'. **எண்ணங்கள் வெற்றி பெறாமல் போவதற்கு காரணமாக இருப்பது ஒருமித்தநிலை குறைவாக இருப்பது.** ஒருமித்தநிலை குறைவாக இருக்கும் காரணத்தால் குழப்பம் ஏற்படுகிறது. எங்கே ஒருமித்தநிலை இருக்கிறதோ அங்கே ஒரே ரசனை நிலை தானாகவே இருக்கும். எங்கே ஒருமித்தநிலை இருக்கிறதோ அங்கே எண்ணம், சொல் மற்றும் செயலில் வீணானவைகள் முடிந்துபோய்விடுகிறது மேலும் சக்திநிலை வந்துவிடுகிறது. சக்திமிக்கதாக இருப்பதால் அனைத்தும் வெற்றிகரமாகிவிடுகிறது. **ஒருமித்தநிலை என்றால் ஒரே ஒரு சிறந்த எண்ணத்தில் எப்போதும் நிலையாக இருப்பது.** அந்த ஒரு விதை ரூப எண்ணத்தில் முழு மர ரூப வளர்ச்சி அடங்கி இருக்கிறது. ஒருமித்தநிலையை அதிகமாக்குங்கள் அப்போது எல்லாவிதமான குழப்பங்களும் முடிந்துபோய்விடும். ஒருமித்தநிலை தன்பக்கம் இழுக்கவும் செய்கிறது. எப்படி ஏதாவது ஒரு பொருள் தானே தடுமாற்றத்தில் இருந்தால் அது மற்றவைகளையும் தடுமாற்றத்திற்கு கொண்டுவரும். எப்படி இங்கிருக்கும் லைட் தடுமாற்றத்திற்கு (இடையிடையே மின்சாரம் தடைபட்டது)

ஆளாகிறது சிலநேரம் எரிகிறது சில நேரம் அணைகிறது அப்போது எல்லோருடைய எண்ணத்திலும் இங்கு என்னவாயிற்று? என்ற தடுமாற்றம் வந்துவிடுகிறது, ஒருமித்தநிலையுடைய பொருள் மற்றவருக்கும் ஒருமித்தநிலையை அனுபவம் செய்ய வைக்கிறது. ஒருமித்தநிலையின் ஆதாரத்திலேயே ஒரு பொருள் எப்படி இருக்கிறதோ, அப்படியே தெளிவாகப் பார்ப்பதற்குத் தெரிகிறது. அப்படிப்பட்ட ஒருமித்த நிலையில் நிலையாக இருப்பவர்கள் தன்னை எப்போதும் யாராக இருக்கிறார், எப்படி இருக்கிறார் என்பதை தெளிவாக அனுபவம் செய்கிறார் மேலும் இந்தக் காரணத்தால் எப்படி ஆகும், என்னவாகும்? என்ற தடுமாற்றம் முடிந்துபோய்விடுகிறது. எப்படி ஏதாவது ஒரு பொருள் தெளிவாகத் தெரியும்போது ஒருபோதும் இது என்ன? என்ற கேள்வி எழாது, கேள்வி முடிந்து தெளிவாக இது இப்படி இருக்கிறது என்பது அனுபவம் ஆகும். அதேபோல சுய சொரூபம் அல்லது பாபாவின் சொரூபம் ஒருமித்தநிலையின் ஆதாரத்தில் எப்போதும் தெளிவாக இருக்கும். எப்படி ஆத்ம ரூபத்தில் நிலைத்திருப்பது, ஆத்மாவின் சொரூபம் இப்படியா அல்லது அப்படியா? என்ற தடுமாற்றம் அதாவது கேள்விகள் முடிந்து போய்விடும். எப்போது கேள்விகள் முடிந்துவிடுகிறதோ, குழப்பங்கள் முடிந்து விடுகிறதோ அப்போது ஒவ்வொரு எண்ணமும் தெளிவாகிவிடும். ஒவ்வொரு எண்ணம், சொல் அல்லது செயலின் முதல், இடை மற்றும் கடை மூன்று காலமுமே எப்படி தற்காலம் தெளிவாக இருக்கிறதோ அப்படி தெளிவாக இருக்கும். எண்ண வடிவ விதை சக்திசாலியாக இருந்தால் அது பலனளிக்கக் கூடியதாக இருக்கும். 28.12.79

**94.** எந்தவொரு எண்ணத்தை எழுப்பினாலோ அல்லது சிந்தனை செய்தாலோ முதலில் இந்த எண்ணம் அல்லது சிந்தனை பாபாவுக்கு பிடித்ததா, பிரபுவிற்கு உகந்ததா? என்பதை செக் பண்ணுங்கள். யாரிடம் அதிக பிரியம் இருக்கிறதோ அப்போது அவருக்குப் பிடித்ததே தனக்கும் பிடித்ததாக இருக்கும். எது பாபாவுக்கு பிடித்ததோ அதுவே உங்களுக்கும் பிடித்தது மேலும் யார் பாபாவிற்கு பிடித்தமாகி விடுகிறாரோ அவர் மக்களுக்குப் பிடித்தவராக தானே ஆகிவிடுகிறார். 16.1.80

**95.** கேள்வி : எந்தவொரு சுமையை குறைத்தால் ஆத்மா சக்திசாலி ஆகும்?

பதில் : ஆத்மாமீது வீணானவைகளின் சுமை இருக்கிறது. வீண் எண்ணங்கள், வீண் வார்த்தைகள், வீண் கர்மங்கள் இவைகள் மூலமாக ஆத்மா சுமை மிகுந்ததாகிவிடுகிறது. இப்போது இந்த சுமையை நீக்கிவிடுங்கள். இந்த சுமையை அகற்றுவதற்காக எப்போதும் சேவையில் பிஸியாக இருங்கள். சிந்தனை சக்தியை அதிகப்படுத்துங்கள். சிந்தனை சக்தி மூலமாக ஆத்மா சக்திசாலி ஆகிவிடும். எப்படி உணவை ஜீரணம் செய்வதன்மூலம் இரத்தமாகிறது, பிறகு அதேசக்தி வேலை செய்கிறது, அதேபோல சிந்தனை செய்வதன்மூலமாக ஆத்மாவின் சக்தி அதிகமாகும். 18.3.81

**96.** நீங்கள் என்ன வேண்டுமானாலும் நினையுங்கள், பேசுங்கள், செய்யுங்கள், உறவு அல்லது தொடர்பில் வாருங்கள், ஆனால் அவைகள் எல்லாம் பாபாவிற்கு சமமாக இருக்கிறதா என்பதை மட்டும் 'செக்' பண்ணுங்கள். எவைகள் என்னுடைய எண்ணங்களோ அவைகள் எல்லாம் பாப்சமான் இருக்கிறதா என்பதை மட்டும் செக் பண்ணுங்கள். எவைகள் என்னுடைய எண்ணங்களோ அவைகள் பாபாவுடைய எண்ணங்கள். என்னுடைய பேச்சு பாபாவுடைய பேச்சு. ஏனெனில் **எல்லோருடைய உறுதிமொழி என்னவென்றால் எதை பாபாவிடம் இருந்து கேட்டேனோ அதையே சொல்வேன், எதை பாபா சொல்கிறாரோ அதையே கேட்பேன். எதை யோசிப்பதற்காக பாபா தந்திருக்கிறாரோ அதையே யோசிப்பேன் என்பது அனைவரின் வாக்குறுதியாக இருக்கிறது** இல்லையா. எப்போது இந்த வாக்குறுதி இருக்கிறதோ அப்போது இதை மட்டும் செக்கிங் பண்ணுங்கள். இதை செக்கிங் செய்வது ஒன்றும் கஷ்டமில்லையே. முதலில் சமமாக்குங்கள் பிறகு நடைமுறையில் கொண்டுவாருங்கள். ஒவ்வொரு எண்ணமும் முதலில் பாப்சமான் – இதை செக் பண்ணுங்கள். யார் துவாபரயுக அரசர்களாக அல்லது இளவரசர்களாக இருந்துவிட்டு சென்றார்களோ, அவர்கள் எந்தவொரு பொருளையும் ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக அது சோதிக்கப்படும், பிறகே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை நீங்கள் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறீர்கள். எனவே துவாபரயுக அரசர்கள் உங்களுக்கு முன்பாக எம்மாத்திரம். நீங்கள் எல்லோருமே நல்ல அரசர்களாக இருப்பீர்கள். எனினும் வீழ்ந்துவிட்ட அரசர்களுக்கே இத்தனை இராஜஉபசாரம் கிடைத்ததென்றால் மேலான உங்கள் எல்லோருடைய

எண்ணங்களும் புத்திக்கு உணவாக இருக்கிறது. வார்த்தைகள் வாயின் உணவாக இருக்கிறது. செயல்கள் கைகள், கால்களின் உணவாக இருக்கிறது. 25.3.81

**97. அமைதி சக்தி மகத்துவம் வாய்ந்தது. அமைதியின் சக்தி கோப நெருப்பை குளிர்விக்கச் செய்கிறது, வீண் எண்ணங்களின் குழப்பத்தை முடித்து விடுகிறது, பழைய சமஸ்காரத்தை முடித்து விடுகிறது, துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு உயிர்தானம் கொடுக்கிறது, அமைதிக் கடல் பாபாவை சந்திக்க வைக்கிறது, அலைந்துகொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு அவர்கள் அடைய வேண்டிய இலக்கை அனுபவம் செய்ய வைக்கிறது ... அமைதியின் சக்தி மிகப்பெரிய புண்ணிய ஆத்மாவாகச் செய்கிறது,** எனவே இந்த சக்தியை காரியத்தில் ஈடுபடுத்திக்கொண்டே இருங்கள். 13.11.81

**98. பாப்தாதா நெற்றியின் மூலமாக நினைவு சொரூபத்தை பார்க்கிறார். கண்கள் மூலமாக ஜுவாலா ரூபத்தைப் பார்க்கிறார், உதட்டின் புன்முறுவல் மூலமாக பற்றற்று அன்போடு தாமரை மலருக்குச் சமமாக இருப்பதைப் பார்க்கிறார்.** யார் எப்போதும் நினைவு சொரூபத்தில் இருக்கிறாரோ, அவருடைய எண்ணங்களின் வேகம் என்ற ரேகைகள் நெற்றியில் எப்போதும் பொறுமையாகத் தெரிகிறது. எந்தவிதமான சுமையும் இருப்பதில்லை. அழுத்தம் இருப்பதில்லை. ஒரு நொடியில் ஒரு எண்ணத்தை மட்டும் தோற்றுவிப்பதன் மூலமாக அனேக எண்ணங்களுக்கு பிறவி கொடுப்பதில்லை. எப்படி உடலில் ஏதாவது வியாதி இருக்கிறதா என நாடியின் வேகம் பார்த்து கணிக்கிறார்கள், அதேபோல எண்ணங்களின் வேகத்தை இந்த நெற்றியின் ரேகை மூலமாக அறிய முடியும். ஒருவேளை எண்ணங்களின் வேகம் மிகத் தீவிரமாக இருந்தால் ஒன்றிலிருந்து ஒன்று, ஒன்றிலிருந்து ஒன்று என எண்ணங்கள் ஓடிக்கொண்டே இருந்தால் எண்ணங்களின் வேகம் அதி தீவிரமாகிறது, இதுவும் பாக்கியத்தின் சக்தியை வீணாக்கிவிடுகிறது. எப்படி வாய் மூலமாக மிக வேகமாக எப்போதும் பேசிக்கொண்டே இருப்பதன் மூலம் உடலின் சக்தி அல்லது எனர்ஜி வீணாகிறது. சிலர் எப்போதும் பேசிக்கொண்டே இருக்கிறார்கள், அதிகமாகப் பேசுகிறார்கள், மேலும் சத்தம்போட்டு பேசுகிறார்கள் என்றால் அவரிடம் என்ன சொல்வீர்கள்? மெதுவாகப் பேசுங்கள், குறைவாகப் பேசுங்கள் எனச் சொல்வீர்கள். அதேபோல எண்ணங்களின் வேகம் ஆன்மீகச் சக்தியை வீணாக்குகிறது. எல்லாக் குழந்தைகளும் அனுபவியாக இருக்கிறீர்கள் – எப்போது வீண் எண்ணங்கள் ஓடுகிறதோ அப்போது எண்ணங்களின் வேகம் எப்படி இருக்கிறது? மேலும் எப்போது ஞானத்தை சிந்தனை செய்கிறீர்களோ அப்போது எண்ணங்களின் வேகம் எப்படி இருக்கிறது? அது சக்தியை விரயமாக்குகிறது, இது சக்தியை உருவாக்குகிறது. **வீண் எண்ணங்களின் வேகம் அதிகமாக இருந்தால் தன்னைத்தான் சக்தி சொரூபமாக ஒருபோதும் அனுபவம் செய்ய முடியாது.** எப்படி சரீரத்தின் சக்தி காணாமல் போனவுடன் இன்று என்னுடைய தலை காலியாகிவிட்டது என வர்ணனை செய்கிறீர்கள். அப்படி ஆத்மா சர்வ பிராப்திகளிலும் தன்னை காலியாக உணரும். எப்படி சரீர சக்திக்காக ஊசிபோட்டு சக்தியை நிறைக்கிறார்கள் அல்லது குளுகோஸ் ஏற்றுகிறார்கள், அதேபோல ஆன்மீகத்தில் பலவீனமான ஆத்மா, நான் மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கிறேன், இன்று பாப்தாதா என்னென்ன கருத்துக்களை முரளியில் சொன்னார், வீண் எண்ணங்களின் பிரேக் எது? என முயற்சியின் விதியை நினைவிற்குக் கொண்டுவருகிறது. புள்ளி வைப்பதற்கு முயற்சி செய்வது என்பது ஊசி போடுவதாகும். இப்படி முயற்சியின் விதி என்ற ஊசி மூலமாக சற்று நேரத்திற்கு சக்திசாலி ஆகிவிடுகிறீர்கள் அல்லது விசேசமான நினைவின் புரோகிராம் மூலமாக அல்லது விசேச குழு அல்லது சகவாசம் மூலமாக குளுகோஸ் ஏற்றிக்கொள்கிறீர்கள். எனினும் யாருடைய எண்ணங்களுடைய வேகம் அதிகமாக இருக்கிறதோ அவர் கொஞ்ச நேரம் சக்தி நிறைந்ததால் கொஞ்ச நேரத்திற்கு தன்னை சக்திவானாக அனுபவம் செய்கிறார் ஆனால் மீண்டும் பலவீனமாகி விடுகிறார். எனவே பாப்தாதா நெற்றியின் ரேகைகள் மூலமாக ரிசல்டை பார்த்தபோதும் மீண்டும் குழந்தைகளுக்கு, எண்ணங்களின் வேகத்தை அதிகமாக்காதீர்கள் என்று இந்த ஸ்ரீமத்தை நினைவூட்டுகிறார். **பத்து வார்த்தைகளுக்குப் பதிலாக இரண்டு வார்த்தைகளைப் பேசுங்கள் என வாய் மூலமாக பேசும்போது சொல்கிறார்கள் அல்லவா, அந்த இரண்டு வார்த்தைகளும் அப்படி சக்திசாலியாக இருக்க வேண்டும் அது 100 வார்த்தைகளின் காரியத்தை நிறைவேற்ற வேண்டும்.** எனவே எண்ணங்களின் வேகத்தைப் பொருத்தவரை எது

அவசியமோ அதுமட்டுமே வரவேண்டும். எண்ண வடிவ விதை வெற்றி வடிவ பழத்தோடு நிறைவு பெற வேண்டும். பழமேதும் கொடுக்காத வெறும் விதையாக மட்டும் இருக்கக்கூடாது. இதைத்தான் எப்போதும் சக்திமிக்க எண்ணமாக இருக்கிறது, வீண் எண்ணமாக இருக்கவில்லை என சொல்லமுடியும். சக்தி மிக்க எண்ணங்களின் எண்ணிக்கை எப்போதும் குறைவாகத்தான் இருக்கும் ஆனால் சக்திசாலியாக இருக்கும், மற்றபடி வீண்எண்ணங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் ஆனால் பலனேதும் இருக்காது. வீண் எண்ணங்கள் மூங்கில் காட்டைப்போல இருக்கும் என்பதை புரிந்துகொள்ளுங்கள். அது ஒன்றில் இருந்து ஒன்றாக அனேக மரங்களை தானே உற்பத்தி செய்துகொண்டே இருக்கிறது மேலும் ஒன்றோடொன்று மோதி தீப்பிடிக்க வைக்கிறது. மேலும் தனது தீயில் தானே சாம்பல் ஆகிவிடுகிறது. அதேபோல வீண் எண்ணங்களும் ஒன்றோடொன்று மோதி ஏதாவது விகாரத்தின் அக்கினியை தோன்றச் செய்துவிடுகிறது அதோடு தன்னில்தானே கவலைப்பட வைக்கிறது. எனவே எண்ணங்களின் வேகத்தை மெதுவாக்குங்கள்.

இந்த புதிய பிறவியின் பொக்கிஷம் என்று சொன்னாலும் சரி அல்லது விசேச ஆற்றல் என்று சொன்னாலும் சரி, அது எண்ணங்களே. புதிய பிறவி பெறுவதற்கான ஆதாரமே சுத்த எண்ணங்கள். ‘நான் சரீரமல்ல, ஆத்மா’ இந்த எண்ணம் சோழியிலிருந்து வைரமாக்கி விட்டதல்லவா! ‘நான் கல்ப முந்தய ஆத்மா, பாபாவின் குழந்தை, வாரிசு, அதிகாரி’ இந்த எண்ணங்கள் மாஸ்டர் சர்வசக்திவானாக ஆக்கியிருக்கிறது. எனவே பொக்கிஷமும் இதுதான் எனர்ஜியும் இதுதான் அதோடு எண்ணமும் இதுதான். விசேச பொக்கிஷங்களை எப்படி பயன்படுத்துகிறார்களோ, அதேபோல தனது எண்ணங்களின் பொக்கிஷம் அல்லது சக்திகளை அறிந்து, அப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபடுத்துங்கள் அப்போது அனைத்து எண்ணங்களும் வெற்றி பெறும் மேலும் வெற்றி சொரூப ஆத்மா ஆகிவிடுவீர்கள். 7.3.82

**99.** கர்மம் அனைத்தையும்விட ஸ்தூல பொருளாக இருக்கிறது. எண்ணங்கள் சூட்சும சக்தியாக இருக்கிறது. இந்தகால ஆத்மாக்கள் ஸ்தூலமான பெரிய ரூபத்தை சீக்கிரம் அறிந்து கொள்கிறார்கள். அதேபோல சூட்சும சக்தி ஸ்தூல சக்தியைவிட மிகச் சிறந்தது எனினும் மனிதர்களுக்கு சூட்சும சக்தியின் அதிர்வலைகளை கேட்ச் செய்வது இப்போது கடினமாக இருக்கிறது. கர்மசக்தி மூலமாக உங்கள் எண்ண சக்தியையும் அறிந்துகொண்டே போவார்கள். மனசேவை கர்மத்தைக் காட்டிலும் சிறந்தது. உணர்வுகள் மூலமாக உணர்வுகளையும், வாயுமண்டலத்தையும் மாற்றி அமைக்கக்கூடிய இந்த சேவையும் மிகச் சிறந்தது. எனினும் அதைவிட எளியது கர்மம். அதன் பரிபாஷை முதலிலேயே சொல்லப்பட்டது எனினும் இன்று இந்த விசயம் தெளிவு படுத்தப்படுகிறது அதாவது, கர்மத்தின் மூலமாக சக்தி சொரூபத்தின் தரிசனம் அதாவது காட்சி காட்டுங்கள் அப்போது செயல் மூலமாக எண்ண சக்திவரை சென்று சேருவது எளிதாகிவிடும். இல்லையென்றால் பலவீன செயல், சூட்சும சக்திகளான புத்தியையும், எண்ணத்தையும் கீழே கொண்டுவந்துவிடும். எப்படி பூமியின் கவர்ச்சி மேலே உள்ள பொருளை இழுத்து வருகிறது. எனவே சித்திரத்தை சரித்திரமாக்குங்கள். 19.3.82

**100. எங்கே பவித்திரம் இருக்கிறதோ அங்கே சுக–சாந்திக்கான அனுபூதி அவசியம் கிடைக்கும்.** இதன் ஆதாரத்தில் தன்னை செக் பண்ணுங்கள் – **மனதின் எண்ணங்களில் பவித்திரம், மனதில் எப்போதும் சுக சொரூபம், அமைதி சொரூபம் அனுபவம் ஆவதே அதன் அடையாளம்.** ஒருவேளை எப்போதாவது மனதில் வீண் எண்ணங்கள் வருமானால் அமைதிக்குப் பதிலாக குழப்பம் வந்துவிடும். ஏன், என்ன என்ற அனேக கேள்விகளின் காரணத்தால் சுக சொரூப நிலை அனுபவமாகாது. மேலும் எப்போதும் இது நடக்க வேண்டும், இது நடக்கக்கூடாது, இது எப்படி, இது அப்படி என்பதை புரிந்து கொள்வதற்கான ஆசை அதிகமாகிக்கொண்டே இருக்கும். இந்த கேள்விகளுக்கு தீர்வு காண்பதிலேயே ஈடுபட்டிருப்பார்கள். எனவே எங்கே அமைதி இல்லையோ அங்கே சுகம் இருக்காது. எனவே ஒவ்வொரு நேரமும் எந்தவிதமான குழப்பமும் சுகம் மற்றும் அமைதியின் பிராப்திக்கு தடை ரூபமாகவில்லையா? என்பதை செக் பண்ணுங்கள். ஒருவேளை ஏன், என்ன என்ற கேள்விகள் இருந்தாலும் எண்ணசக்தியில் ஒருமித்தநிலை இருக்காது. எங்கே ஒருமித்தநிலை இல்லையோ, அங்கே சுக–சாந்தியின் அனுபூதி ஏற்பட முடியாது. 24.3.82

**101.** ஞான ரத்தினங்களை சிந்தித்துப் பாருங்கள். வீண் எண்ணங்களை ஒப்பிட்டு ஒவ்வொரு விசயத்திற்கும் சக்திமிக்க எண்ணங்கள் இருக்கிறது. என்னுடைய பார்ட் என்னவென்று தெரியவில்லையே, யோகத்தில் மனம் போக மறுக்கிறதே, அசரீரி ஆகவே முடியவில்லையே என தனது நிலை அல்லது யோகத்திற்காக வீண் எண்ணங்கள் ஓடுவதாக வைத்துக்கொள்வோம். இவைகள் எல்லாம் வீண் எண்ணங்கள். அதோடு ஒப்பிட்டு சக்திமிக்க எண்ணங்களை கொண்டுவாருங்கள் – நினைவு என்னுடைய சுயதர்மம். தந்தையை நினைவு செய்வதே குழந்தைகளின் தர்மம். ஏன் ஏற்படாது, கட்டாயம் ஏற்படும். நான் யோகி ஆகவில்லை என்றால் வேறு யார் ஆவார். நான்தான் ஒவ்வொரு கல்பத்திலும் உதவியாளராக இருக்கிறேன் என வீணானவைகளுக்குப் பதிலாக சக்திமிக்க எண்ணங்களை நினையுங்கள். என்னுடைய சரீரம் நடக்காது என வீண் எண்ணத்தை நினைக்காதீர்கள். அதற்குப் பதிலாக **இந்தக் கடைசி பிறவியில் பாபா என்னை தன்னுடையவர் ஆக்கியிருக்கிறார். அதிசயமாக இருக்கிறது, பெருமை எல்லாம் இந்த கடைசி சரீரத்திற்கு இருக்கிறது. எனவே இந்த பழைய சரீரத்தின் மூலமாக பல பிறவிகளுக்கு ஆஸ்தி பெறப்போகிறேன் என நினையுங்கள்.** மனம் உடைந்துபோகும் எண்ணத்தை எழுப்பாதீர்கள். ஆனால் சந்தோஷமான எண்ணங்களை எழுப்புங்கள். ஆஹா என்னுடைய பழைய உடலே! நீ பாபாவை சந்திக்க நிமித்தமானாயே! என ஆஹா ஆஹா எனச்சொல்லி இதை நடத்துங்கள். எப்படி குதிரையை அன்பாக, தட்டிக்கொடுத்து நடத்திச் செல்கிறார்கள் அப்போது குதிரையும் மிக நன்றாக நடந்துகொள்கிறது. ஒருவேளை குதிரைக்கு அடிக்கடி சவுக்கடி கொடுத்தால் அது இன்னும் சண்டி பண்ணும். இந்த சரீரமும் உங்களுடையதே. அடிக்கடி இது பழைய சரீரம் எதற்கும் உதவாதது என்று சொல்லாதீர்கள். இப்படிச் சொல்வது சவுக்கடி கொடுப்பதாகும். மிக மகிழ்ச்சியாக இதற்கு புகழ்பாடிக்கொண்டே இதனை நடத்திக் கொண்டிருங்கள். பிறகு இந்த பழைய சரீரம் ஒருபோதும் தொந்தரவு செய்யாது. மிகவும் உதவி கரமாக இருக்கும். 9.1.83

**102.** பிச்சைக்காரரில் இருந்து வள்ளலின் குழந்தையாகி விட்டீர்கள் அதாவது மாஸ்டர் அல்லது அதிகாரி ஆகிவிட்டீர்கள். இதைக் கொடுங்கள், இதைக்கொடுங்கள் என எண்ணத்தில்கூட அதிகாரிகள் பிச்சை எடுக்க மாட்டார்கள். கொடுங்கள் என்பது பிச்சை எடுப்போரின் வார்த்தையாக இருக்கிறது. இவைகள் எல்லாம் என் அதிகாரத்திற்குட்பட்டது என்பது அதிகாரியின் வார்த்தையாக இருக்கிறது. இப்படிப்பட்ட அதிகாரி ஆத்மாக்கள் ஆகிவிட்டீர்கள் அல்லவா. வள்ளலாகிய பாபா அவர்கள் கேட்காமலேயே, அனைத்து அழிவற்ற பிராப்திகளின் அதிகாரத்தை தானாகவே கொடுத்துவிட்டார். **நீங்கள் எல்லோரும் எனது பாபா ஒரு வார்த்தையின் எண்ணம் கொண்டீர்கள், உடனே பாபா அவர்கள் ஒரேயொரு வார்த்தையில் அனைத்து பொக்கிஷங்களின் உலகம் உனது என்று சொல்லிவிட்டார்.** ஒரேயொரு எண்ணம் அல்லது வார்த்தை அதிகாரி ஆக்குவதற்கு நிமித்தமாக இருக்கிறது. எனது மற்றும் உனது. இந்த இரண்டு வார்த்தையும் சக்கரத்திற்குள்ளும் சிக்க வைக்கிறது.

நீங்கள் உங்கள் எண்ணங்களில் யோசிப்பதைக் காட்டிலும் கோடிமடங்கு அதிகமாக பாபா தானே தருகிறார். எனவே எண்ணத்தில்கூட இந்த பிச்சைக்காரத்தனம் இருக்கக்கூடாது. இப்படி இருப்பதைத்தான் 'அதிகாரி' என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட அதிகாரி ஆகிவிட்டீர்களா? எல்லாவற்றையும் அடைந்துவிட்டேன் என்ற பாட்டு பாடுகிறீர்கள் அல்லவா! அல்லது இதைப் பெற வேண்டும், இதைப் பெறவேண்டும் என்ற புகாரின் பாட்டு பாடுகிறீர்களா. எங்கே நினைவு இருக்கிறதோ அங்கே புகார் இருக்காது. எங்கே புகார் இருக்கிறதோ அங்கே நினைவு இருக்காது. 27.12.83

**103.** ஒரு சக்திசாலி எண்ணம் அல்லது கர்மம் செய்தீர்கள் மேலும் ஒரு விதை மூலமாக கோடிமடங்கு பலன் பெற்றீர்கள். எனவே சீசனின் பழம் அதாவது சகஜமாக பழத்தைப் பெறுகிறீர்களா? பழம் அனுபவமாகிறதா அல்லது பழம் பழுப்பதற்கு முன்னேமே மாயா வடிவ பறவைகள் பழத்தை அழித்துவிட வில்லையே! எனவே இவ்வளவு கவனம் இருக்கிறது அல்லது முயற்சி செய்கிறீர்கள், யோகத்தில் ஈடுபடுகிறீர்கள், படிப்பையும் படிக்கிறீர்கள், தனது சக்திக்குத் தக்கபடி சேவையும் செய்கிறீர்கள், இருந்தும் எப்படி பிராப்தி இருக்க வேண்டுமோ அப்படி இருப்பதில்லை. எப்போதும் இருக்க வேண்டும் ஏனெனில் ஒன்றுக்கு கோடி மடங்கு என்றால் அளவிடமுடியாத பலன் பிராப்தியாகக்

கிடைத்திருக்கிறது. இருந்தும் எப்போதும் இருப்பதில்லை. எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு இருப்பதில்லை. அதன் காரணம் என்ன? எண்ணம், கர்மவடிவ விதை சக்திசாலியாக இல்லை. சூழ்நிலைவடிவ பூமி சக்திசாலியாக இல்லை. பூமியும் விதையும் சரியாக இருக்கும் பட்சத்தில் பலனும் கிடைக்கிறது எனினும் 'நான் செய்தேன்', என்ற இந்த எல்லைக்குட்பட்ட எண்ணத்தின் மூலமாக பழுக்காத பழத்தை தின்று விடுகிறீர்கள் அல்லது மாயாவின் விதவிதமான பிரச்சினைகள், சூழ்நிலைகள், சகவாசங்கள், பிறர்பேச்சை கேட்பது, தன் மனவழிப்படி நடப்பது என வீண் எண்ணங்கள் வடிவ பறவைகள் பழத்தை அழித்துவிடுகிறதா? எனவே பழம் அதாவது பிராப்திகளில் இருந்து, அனுபூதிகளின் பொக்கிஷத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடுகிறீர்கள். 'என்னவென்று தெரியவில்லை ஏன்' என்பது அப்படி வஞ்சிக்கப்பட்ட ஆத்மாக்களின் பேச்சாக இருக்கும். இப்படி வீண் முயற்சி செய்யக்கூடியவராக இல்லைதானே. சகஜ யோகியாக இருக்கிறீர்களா? 29.12.83

**104.** எண்ணங்களே சொரூபங்களை உருவாக்கிறது. தடை தடை என சொல்வதன் மூலமாக தடை சொரூபம் ஆகிவிடுகிறது. பலவீன எண்ணங்கள் மூலமாக பலவீன சிருஷ்டி படைக்கப்படுகிறது, ஏனெனில் ஒரு எண்ணம் பலவீனமாக இருந்தால் அதன்பின்னே அனேக பலவீன எண்ணங்கள் உற்பத்தி ஆகிறது. ஒரு 'ஏன் மற்றும் என்ன' என்ற எண்ணம், அனேக 'ஏன் மற்றும் என்ன' என்பதற்கு கொண்டுசெல்கிறது. நான் மகாவீரனாக இருக்கிறேன், நான் சிறந்த ஆத்மாவாக இருக்கிறேன் என சக்திமிக்க எண்ணங்கள் உற்பத்தியானால் படைப்பும் சிறப்பாக இருக்கும். எனவே **எப்படி எண்ணமோ அப்படி படைப்பு.** இவைகள் எல்லாம் எண்ணங்களின் விளையாட்டு. மகிழ்ச்சியின் எண்ணங்களை படைத்தால் அந்த நேரம் மகிழ்ச்சியின் சூழ்நிலை அனுபவமாகும். துக்கத்தின் எண்ணங்களைப் படைத்தால் மகிழ்ச்சியான சூழ்நிலைகூட துக்க சூழ்நிலையாகத் தெரியும், மகிழ்ச்சி அனுபவமாக இருக்காது. எனவே சூழ்நிலையை உருவாக்குவது, சிருஷ்டியை படைப்பது உங்கள் கைகளில் இருக்கிறது. உறுதியான எண்ணங்களைப் படைத்தால் தடைகள் சூ மந்திர மாகிவிடும். ஒருவேளை நடக்குமா நடக்காதா என யோசித்தீர்கள் என்றால் மந்திரம் வேலை செய்யாது. எப்படி ஏதாவது டாக்டரிடம் போகும்போது, அவர் உங்களுக்கு என்மீது நம்பிக்கை இருக்கிறதா? என முதலில் கேட்பார். எவ்வளவு நல்ல மருந்தாக இருந்தாலும் நம்பிக்கை இல்லை என்றால் அந்த மருந்தினால் எந்த நன்மையும் ஏற்பட முடியாது. அது அழியக்கூடிய விசயம், இங்கு இருப்பது அழியாத விசயம். எனவே எப்போதும் தடைகளை அழிக்கும் ஆத்மாக்களாக இருக்கிறீர்கள், பூஜைக்குரிய ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். உங்களுக்கு இப்போதுகூட எந்த ரூபத்தில் பூஜை நடைபெற்று வருகிறது. இப்போது கடைசியில் விகார ஜன்மமாக இருக்கக்கூடிய காரணத்தால் இந்த ரூபத்தின் நினைவுச் சின்னங்களை உருவாக்கவில்லை எனினும், ஏதாவது ரூபத்தில் உங்களுக்கு நினைவுச் சின்னங்கள் இருக்கிறது. எனவே தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான், சிவனின் குழந்தையான விக்ன வினாசகர் 'கணேஷ்' என உணர்ந்து நடந்துகொள்ளுங்கள். தெரியவில்லையே, தெரியவில்லையே என தானே எண்ணங்களை எழுப்புகிறீர்கள், எனவே இந்த பலவீன எண்ணங்களின் காரணத்தால் அதில் சிக்கிக்கொள்கிறீர்கள். எனவே எப்போதும் மகிழ்ச்சியில் ஊஞ்சலாடும் அனைவரின் தடைகளை நீக்குபவராகுங்கள். அனைவருடைய கஷ்டங்களையும் எளிதாக்கக்கூடியவர் ஆகுங்கள். இதற்காக 'உறுதியான எண்ணம்' மற்றும் 'டபுள் லைட்' நிலை மட்டும் போதும். என்னுடையது என்று எதுவும் இல்லை. எல்லாமே பாபாவுடையது. எப்போது சுமையை தனது தலைமேல் வைத்துக்கொள்கிறீர்களோ அப்போது எல்லாவிதமான தடைகளும் வருகிறது. என்னுடையது இல்லை என்றால் தடையில்லை. என்னுடையது என்பதே தடைகளின் வலை. எனவே வலையை அழிக்கக்கூடிய விக்ன வினாசகராக இருங்கள். 29.12.83

**105.** சுய நிலை சக்திசாலியாக இருந்தால் அமிர்தவேளையின் 'டச்சிங்' எப்போதும் சரியாக இருக்கும். அமிர்தவேளையில் மனதின் பாவனையை 'மிக்ஸ்' பண்ணி உட்காராதீர்கள் ஆனால் தெளிந்த புத்தி உடையவராக அமருங்கள் அப்போது டச்சிங் சரியாக இருக்கும். 20.1.84

**106.** கேள்வி : பரிஸ்தா ஆவதற்காக எந்த பந்தனத்தில் இருந்து விடுபட வேண்டும்?

பதில் : மனதின் பந்தனத்தில் இருந்து விடுபடவேண்டும். மனதின் வீண் எண்ணங்கள்கூட பரிஸ்தா ஆக விடுவதில்லை. எனவே யாருக்கு மனதின் வீண் எண்ணங்களோடுகூட தொடர்பு இல்லையோ அவர்களே பரிஸ்தா. நான் பரிஸ்தா எந்த உறவாலும் கட்டப்படாதவன் என்பது எப்போதும் நினைவில் இருக்கட்டும். 1.5.84

**107.** எப்போதும் சக்திமிக்க ஆத்மாக்கள், என்ன நினைத்தாலும், என்ன பேசினாலும், என்ன செய்தாலும் எல்லாம் சக்திமிக்கதாக இருக்கும். சக்திசாலி என்றால் வீணானவைகளை அழிப்பவர். வீண் கணக்கை முடித்துவிட்டு எப்போதும் சக்தியின் கணக்கில் சேர்த்து வைப்பவர். எப்போதாவது வீணானவைகள் ஓடுகிறதா? வீண் எண்ணங்கள் அல்லது வீண் வார்த்தைகள் அல்லது வீண் நேரம். ஒருக்கால் நொடி நேரம் போனால்கூட எவ்வளவு போய்விட்டது! சங்கமயுகத்தில் நொடி எவ்வளவு பெரியது. நொடி அல்ல ஆனால் ஒரு நொடி ஒரு ஜன்மத்திற்கு ஒப்பானது. ஒரு நொடி போகவில்லை, ஒரு ஜன்மம் போய்விட்டது. இப்படி மகத்துவத்தை அறிந்திருக்கக்கூடிய சக்திமிக்க ஆத்மாக்கள் அல்லவா. 11.5.84

**108.** எந்தவொரு எண்ண வடிவ விதையையும் பலன்தரச் செய்வதற்குரிய எளிய சாதனம் ஒன்றே ஒன்றுதான், அது – எப்போதும் விதை ரூபமான பாபாவிடம் இருந்து ஒவ்வொரு நேரமும் சர்வ சக்தி களின் பலத்தை அந்த விதையில் நிறைத்துக் கொண்டே இருப்பதுதான். விதை ரூபத்தின் மூலமாக உங்களுடைய எண்ண வடிவ விதை எளிதாகவும், தானாகவும் வளர்ச்சி அடைந்து பலன்தரத் தக்கதாகிவிடும். ஆனால் விதை ரூபத்தோடு நிரந்தர தொடர்பு இல்லாத காரணத்தால் மற்ற ஆத்மாக்களை அல்லது சாதனங்களை வளர்ச்சிக்குரிய விதியாக்கி விடுகிறீர்கள். இந்த காரணத்தால் இப்படி செய்ய வேண்டும், அப்படி செய்ய வேண்டும், இவரைப்போல செய்ய வேண்டும் என்ற விஸ்தாரத்தில் நேரததையும், முயற்சியையும் அதிகமாக ஈடுபடுத்துகிறீர்கள். ஏனென்றால் ஏதாவது ஆத்மா மற்றும் சாதனங்களை தனது ஆதரமாக்கிவிடுகிறீர்கள். கடல் மற்றும் சூரியனிடமிருந்து தண்ணீர் மற்றும் வெப்பத்தை பெறுவதற்குப் பதிலாக எத்தனைதான் சாதனங்களின் தண்ணீரை ஆத்மாக்களின் ஆதரமாக உணர்ந்து சகாஷ் கொடுத்தாலும் விதை பலன் தரத்தக்கதாக ஆகாது. எனவே முயற்சி செய்ததற்குப் பிறகு, நேரம் கொடுத்ததற்குப் பிறகு, எப்போது பிரத்தியட்ச பலனாக பிராப்தி கிடைக்கவில்லையோ அப்போது போகப்போக உற்சாகம் குறைந்து போய்விடுகிறது பிறகு சுயத்தின்மீது, உடனிருப்போர்மீது அல்லது சேவையின் மீது நிராசை வந்துவிடுகிறது. சிலநேரம் மகிழ்ச்சி, சில நேரம் வருத்தம் இந்த இரண்டின் அலைகள் பிராமண வாழ்க்கையின் படகை சில நேரம் அசைக்கிறது சிலநேரம் செலுத்துகிறது. 28.11.84

**109.** சக்திமிக்கவர் என்றால் வீணானவைகளை முடித்துவிடுபவர். வீணானவை இருக்கிறது என்றால் சக்தி இருப்பதில்லை. ஒருவேளை மனதில் வீண் எண்ணங்கள் இருக்கிறதென்றால் சக்திமிக்க எண்ணங்கள் தங்க முடியாது. வீணானது அடிக்கடி கீழே கொண்டு வந்துவிடுகிறது. சக்திமிக்க எண்ணங்கள் சக்திமிக்க பாபாவை சந்திக்கும் அனுபவத்தை ஏற்படுத்துகிறது. மாயாவை வென்றவர் ஆக்குகிறது. வெற்றி சொரூப சேவாதாரி ஆக்குகிறது. வீண் எண்ணங்கள் எப்போதும் ஊக்க உற்சாகத்தை அழித்துவிடுகிறது. அது எப்போதும் ஏன், என்ன என்பதன் குழப்பத்தில் தள்ளிவிடுகிறது. எனவே சின்னச்சின்ன விசயங்களில் தன்மீதே மனம் உடைந்துபோய் விடுகிறீர்கள். எப்போதும் எல்லா பிராப்திகளின் பொக்கிஷங்களை அனுபவம் செய்யவிடாமல் வீண் எண்ணங்கள் வஞ்சித்துவிடுகிறது. வீண் எண்ணமுடையவரின் மனதில் விருப்பங்கள் அல்லது ஆசைகள் மிக உயர்வாக இருக்கிறது. இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்ற திட்டங்களை மிக வேகமாக உருவாக்குகிறார்கள் அதாவது தீவிரகதியில் உருவாக்குகிறார்கள். ஏனென்றால் வீண் எண்ணங்களின் வேகம் விரைவாக இருக்கிறது. எனவே மிக உயர்ந்த விசயங்களை யோசிக்கிறார்கள். எனினும் சக்தி இல்லாத காரணத்தால் திட்டத்திற்கும் செயலுக்கும் இடையே பெரிய இடைவெளி ஏற்பட்டுவிடுகிறது. எனவே மனமுடைந்து போகிறார்கள். சக்திமிக்க எண்ணமுடையவர்கள் எப்போதும் எதை

நினைக்கிறார்களோ அதைச் செய்வார்கள். நினைப்பது செய்வது இரண்டும் சமமாக இருக்கும். எப்போதும் பொறுமையான வேகத்தில் எண்ணமும் கர்மமும் வெற்றி அடையும். வீண் எண்ணங்கள் கடுமையான புயலைப்போல குழப்பத்தை கொண்டுவருகிறது. சக்திமிக்க எண்ணங்கள் எப்போதும் வசந்தத்தைப்போல பசுமையாக்கி விடுகிறது. வீண் எண்ணங்கள் எனர்ஜி அதாவது ஆத்மீக சக்தி மற்றும் நேரத்தை இழப்பதற்கு நிமித்தமாக இருக்கிறது. சக்திமிக்க எண்ணங்கள் எப்போதும் ஆத்மீக சக்தி அதாவது எனர்ஜியை சேர்த்து வைக்கிறது. நேரத்தை வெற்றிகரமாக்குகிறது. வீண் எண்ணங்கள் படைப்பாக இருந்தபோதும், வீண் படைப்பு படைக்கும் ஆத்மாவை கவலைப்பட வைக்கிறது. அதாவது தன்னை மாஸ்டர் சர்வசக்திவான், சக்திமிக்க ஆத்மா என்ற மரியாதையிலிருந்து விலக்கி வைத்துவிடுகிறது. சக்திமிக்க எண்ணங்கள் மூலமாக எப்போதும் சிறந்த மரியாதையின் நினைவு சொரூபம் இருக்கிறது. இந்த வேறுபாடுகளை புரிந்தும் இருக்கிறீர்கள் இருந்தும் சில குழந்தைகள் இப்போதுகூட வீண் எண்ணங்களின் புகார் செய்கிறார்கள். இப்போதுவரை வீண் எண்ணங்கள் ஏன் ஓடுகிறது, அதன் காரணம் என்ன? பாப்தாதா அவர்கள் சக்திமிக்க எண்ணங்களின் பொக்கிஷங்களைத் தந்திருக்கிறார் – அது ஞானமுரளி. முரளியின் ஒவ்வொரு மகாவாக்கியமும் சக்திமிக்க பொக்கிஷமாக இருக்கிறது. இந்த சக்திமிக்க எண்ணங்களின் பொக்கிஷங்களுக்கு மகத்துவம் குறைந்த காரணத்தால் சக்திமிக்க எண்ணங்கள் தாரணை ஆவதில்லை அப்போது வீணானவைகளுக்கு வாய்ப்பு கிடைத்துவிடுகிறது. ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு மகாவாக்கியத்தை சிந்தித்துக்கொண்டே இருந்தால் சக்திமிக்க புத்தியில் சக்தி வரமுடியாதா? புத்தி காலியாக இருக்கிறது. எனவே இடம் காலியாக இருப்பதால் வீணானவைகள் வந்துவிடுகின்றன. எப்போது வருவதற்கு கொஞ்சம்கூட இடம் இல்லையோ அப்போது வீணானது எப்படி வரமுடியும்? சக்திமிக்க எண்ணங்களால் புத்தியை பிஸியாக வைத்திருக்கும் முயற்சி இல்லாமல் இருப்பது வீண் எண்ணங்களை விரும்பி அழைப்பதாகும்.

**பிஸியாக வைத்திருப்பதற்கு பிஸினஸ்மேன்** ஆகுங்கள். இரவு பகலாக இந்த ஞான ரத்தினங்களின் பிஸினஸ்மேன் ஆகுங்கள். அப்போது நேரமும் இருக்காது வீண் எண்ணங்கள் வருவதற்கான வாய்ப்பும் இருக்காது. எனவே விசேச விசயம் என்னவென்றால் **புத்தியை சக்திசாலி எண்ணங்களால் எப்போதும் நிறைத்து வையுங்கள்.** தினசரி முரளிகேட்பது, உள்ளடக்குவது அதன் சொரூபமாவது அதற்கு ஆதாரமாக இருக்கிறது. இந்த மூன்று நிலைகள் உள்ளன. கேட்பது மிக நன்றாக இருக்கிறது. கேட்காமல் இருக்க முடியவில்லை. இதுவும் ஒரு நிலைதான். இந்த நிலையில் இருப்பவர்கள் கேட்கும் நேரம் வரை கேட்பதற்கான ஆசை, கேட்பதற்கான ரசனை இருக்கும் காரணத்தால் அந்த நேரம் வரை அந்த ரசனையின் போதையில் இருக்கிறார்கள். கேட்கும்போதும் ஆனந்தமாகக் கேட்கிறார்கள். மிக நன்றாக இருக்கிறது என்று மகிழ்ச்சியின் பாடலும் பாடுகிறார்கள். எனினும் கேட்பது முடிந்தவுடன் அந்த ரசனையும் முடிந்துபோய்விடுகிறது. ஏனெனில் அதை உள்ளே அடக்கவில்லை. உள்ளடக்கும் சக்தி மூலமாக புத்தியை சக்திசாலி எண்ணங்களால் நிறைக்கவில்லை என்றால் வீணானவைகள் வந்துகொண்டே இருக்கும். உள்ளத்தில் வைத்திருப்பவர் எப்போதும் நிறைவாக இருப்பார். எனவே வீண் எண்ணங்களில் இருந்து விலகி இருங்கள். எனினும் சொரூபம் ஆகக்கூடியவர்கள் சக்திசாலியாகி மற்றவர்களையும் சக்திசாலி ஆக்குகிறார்கள். எனவே அந்த குறை இருந்து விடுகிறது.

வீணானதில் இருந்து தன்னை காப்பாற்றிக்கொள்கிறீர்கள், சுத்த எண்ணங்களில் இருக்கிறீர்கள் எனினும் சக்தி சொருபமாக முடியவில்லை. சொரூபம் ஆகக்கூடியவர்கள் எப்போதும் சதா நிறைந்த, சதா சமத்து, சதா சக்திசாலி அதிர்வலைகள் மூலமாக மற்றவர்களுடைய வீணானவைகளையும் முடித்து வைப்பவர்களாக இருப்பார்கள். எனவே நான் யார் என்று தன்னைத்தானே கேளுங்கள். **கேட்பவரா, உள்ளத்தில் கலப்பவரா, அல்லது சொரூபமாபவரா?** சக்திசாலி ஆத்மா நொடியில் வீணானவைகளை சக்தியாக மாற்றம் செய்து விடுவார்கள். எனவே சக்திசாலி ஆத்மாக்கள் தானே? எனவே வீணானதை மாற்றிவிடுங்கள். இப்போதுவரை வீணானவைகளில் சக்தியையும், நேரத்தையும் வீணாக்கிக்கொண்டே இருந்தீர்கள் என்றால் எப்போது சக்திசாலி ஆவீர்கள்? நீண்டகால சக்திமிக்க நிலையே நீண்டகாலத்திற்கு நிறைந்த அரசை ஆளமுடியும். புரிந்ததா. 17.12.84

**110.** அதிகாரி ஆத்மா வரும்போதே, பவித்திரம் பாபா தந்த அதிகாரம், எனவே பவித்திரமாகியே தீரவேண்டும் என்ற உறுதியான எண்ணம் கொள்வார்கள். பவித்திரம் உள்ளத்தை எப்போதும் கவர்ச்சி

செய்துகொண்டே இருக்கும். ஒருவேளை போகப்போக எண்ணங்களின் ரூபத்தில் அல்லது கனவுகளின் ரூபத்தில் மாயா சோதித்துப் பார்க்க வந்தபோதும், அதிகாரி ஆத்மா ஞானம் நிறைந்திருப்பதன் காரணத்தால் பயப்பட மாட்டார்கள். ஆனால் ஞானத்தின் சக்தியைக் கொண்டு எண்ணங்களை மாற்றிவிடுவார்கள். ஒரு எண்ணத்தின் பின்னால் அனேக எண்ணங்களை உற்பத்தி செய்ய மாட்டார்கள். அம்சத்தை வம்சத்தின் ரூபத்திற்கு கொண்டுவரமாட்டார்கள். என்ன ஆனது, என்ன ஆனது … இதுதான் வம்சம். ஏன் என்பதிலிருந்து வரிசையையே ஏற்படுத்திவிடுவார்கள் என்பதை கேட்டிருக்கிறீர்கள் அல்லவா. இந்த வம்சத்தை உருவாக்கி விடுகிறார்கள். வந்தது அது சதாகாலத்திற்கு போய்விட்டது. சோதிப்பதற்காக வந்தது, தேர்ச்சி பெற்றாயிற்று, முடிந்தது. மாயா ஏன் வந்தது? எங்கிருந்து வந்தது? இங்கிருந்து வந்தது, அங்கிருந்து வந்தது. வந்திருக்கக்கூடாது எதற்காக வந்தது? இந்த வம்சம் வரக்கூடாது. நல்லது, வந்துவிட்டது என்றாலும் அதை நீங்கள் உட்கார வைக்காதீர்கள். துரத்துங்கள்! ஏன் வந்தது … என நினைத்தீர்கள் என்றால் அது உட்கார்ந்துவிடும். முன்னேற்றுவதற்காக வந்தது, சோதிப்பதற்காக வந்தது. வகுப்பை மேலே கொண்டுபோவதற்காக வந்தது, அனுபவியாக்குவதற்காக வந்தது. ஏன் வந்தது? எப்படி வந்தது? எதற்காக வந்தது? என யோசிக்காதீர்கள். பிறகு மாயா இப்படியெல்லாம் உருவெடுக்குமா என யோசிக்கிறீர்கள். சிவப்பாக இருக்கிறது, பச்சையாக இருக்கிறது, மஞ்சளாக இருக்கிறது. இப்படி விஸ்தாரத்தில் போய்விடுகிறீர்கள். இதற்குள் போகாதீர்கள். ஏன் பயப்படுகிறீர்கள். கடந்து செல்லுங்கள். ‘பாஸ்வித்ஹானர்’ ஆகிவிடுங்கள். ஞானத்தின் சக்தி இருக்கிறது, ஆயுதங்கள் இருக்கிறது. மாஸ்டர் சர்வசக்திவானாக இருக்கிறீர்கள், முக்காலத்தையும் அறிந்தவராக இருக்கிறீர்கள், முக்கண்ணனாகவும் இருக்கிறீர்கள். என்ன குறை இருக்கிறது. உடனே பயந்துவிடாதீர்கள். எறும்பு வந்தாலும் பயந்துவிடுகிறீர்கள். அதிகம் யோசிக்கிறீர்கள். யோசிப்பது என்றால் மாயாவை விருந்தாளி ஆக்குகிறீர்கள். பிறகு அது தன்னுடைய வீடாக்கிக் கொள்ளும். எப்படி வழியில் செல்லும்போது ஏதாவது அசிங்கமான பொருள் கண்ணில் பட்டால் என்ன செய்வீர்கள்! இதை யார் போட்டது, ஏன் இப்படிச் செய்தார்கள், இப்படிப் போடக்கூடாதே என அங்கே நின்றுகொண்டு யோசிப்பீர்களா அல்லது ஒதுங்கி சென்றுவிடுவீர்களா? அதிகமாக வீண் எண்ணங்களின் வம்சங்கள் உற்பத்தியாக விடாதீர்கள். அம்சத்தின் ரூபத்திலேயே அதை அழித்துவிடுங்கள். முதலில் நொடியின் விசயமாக இருக்கிறது பிறகு அதனை மணிக்கணக்காக, நாள் கணக்காக, பிறகு மாதக்கணக்காக பெரியதாக்கிவிடுகிறீர்கள். பிறகு ஒரு மாதத்திற்குப் பிறகு என்னவாயிற்று என்று கேட்டால் அது நொடிக்கான விசயமாக இருந்தது தெரிய வருகிறது. எனவே பயப்படாதீர்கள். ஆழத்திற்குள் போங்கள், ஞானத்தின் ஆழத்திற்குள் போங்கள், விசயத்தின் ஆழத்திற்குள் போக வேண்டாம். பாப்தாதா இத்தனை சிறந்த மதிப்புமிகுந்த ரத்தினங்கள் சின்னச் சின்ன மண் துகள்களோடு விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து, இந்த ரத்தினங்கள் ரத்தினங்களோடு விளையாடக்கூடியவர்கள், இந்த மண்துகள்களோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்களே என யோசிக்கிறார். ரத்தினங்களாக இருப்பவர்கள் ரத்தினங்களோடு விளையாடுங்கள். 2.3.85

**111.** நேரம் மாறும்போது சிலநேரம் சுப எண்ணங்களும் மாறிவிடுகிறது. சுப காரியங்களை எந்த உற்சாகத்தோடு செய்ய நினைத்தீர்களோ அதுவும் மாறிவிடுகிறது. எனவே பிரம்மா பாபாவிடம் முதல் நம்பரில் போவதற்கான விசேசமாக எதைப் பார்த்தீர்கள்? அவரிடம் எப்போது என்பது கிடையாது ஆனால் இப்போதே செய்ய வேண்டும் என்பது இருந்தது. உடனடி தானம் மகா புண்ணியம் என்று சொல்லப்படுகிறது. ஒருவேளை உடனடி தானம் செய்யவில்லை, யோசித்தீர்கள், நேரம் ஒதுக்கினீர்கள், திட்டமிட்டீர்கள் பிறகு செயல்பாட்டில் கொண்டுவந்தீர்கள் என்றால் அதனை உடனடிதானம் எனச் சொல்லமுடியுமா. தானம் எனச் சொல்லலாம். உடனடி தானத்திற்கும் தானத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. **உடனடி தானம் மகாதானம்.** மகாதானத்தின் பலன் மகானாக இருக்கும். ஏனெனில் எதுவரை எண்ணங்களை நடைமுறையில் கொண்டுவருவதற்காக யோசிக்கிறீர்களோ – நல்லது செய்ய வேண்டும், செய்வேன், இப்போதில்லை, சற்று நேரத்திற்குப் பிறகு செய்வேன், இப்போது இவ்வளவு செய்வேன் என யோசிப்பது மற்றும் செய்வதற்கிடையே நேரம் இருக்கிறதல்லவா அதில் மாயாவிற்கு வாய்ப்பு கிடைத்துவிடுகிறது. யோசிப்பது மற்றும் செய்வதிற்கிடையே எந்த நேரம் கிடைக்கிறதோ அந்த

சமயத்தில் மாயா வந்துவிடும்போது விசயமே மாறிவிடுவதையும் பாப்தாதா குழந்தைகளுடைய கணக்கில் பலமுறை பார்க்கிறார்.

'உடனடி தானம் மகாபுண்ணியம்' என்ற புகழ் இருக்கிறதல்லவா அது இந்த நேரத்திற்காக இருக்கிறது. அதாவது யோசிப்பது மற்றும் செய்வது உடனே இருக்க வேண்டும். யோசித்துக்கொண்டே இருந்து விடக்கூடாது. பலமுறை நானும்கூட இதையேதான் யோசித்தேன் ஆனால் செய்ய வில்லை இவர் செய்துவிட்டார், என அனுபவத்தையும் சொல்கிறீர்கள். அப்போது யார் செய்தார்களோ அவர்கள் அடைந்து விட்டார்கள். யார் யோசனை செய்துகொண்டே இருக்கிறார்களோ அவர்கள் யோசித்துக்கொண்டே திரேதாயுகம் வரை சென்று சேர்ந்து விடுவார்கள். யோசித்துக்கொண்டே இருந்துவிடுகிறார்கள். உடனே செய்யவேண்டாம் என நினைப்பது என்பதே வீண் எண்ணம். சுப காரியம் மற்றும் சுப எண்ணங்களுக்காக உள்ள புகழ் –'உடனடி தானம் மகா புண்ணியம்'. அவ்வப்போது சில குழந்தைகள் பெரிய விளையாட்டு காட்டுகிறார்கள். வீண் எண்ணங்கள் அவ்வளவு வேகமாக வருகிறது அதனை கட்டுப்படுத்தவே முடிவதில்லை. பிறகு என்ன செய்வது நடந்துவிட்டது, நிறுத்த முடியவில்லை, எது வந்ததோ அதைச் செய்துவிட்டேன் என அந்த நேரத்தில் சொல்கிறீர்கள். ஆனால் வீணானவற்றை கட்டுப்படுத்தும் சக்தி தேவை. ஒரு சக்திமிக்க எண்ணத்திற்கு பலமடங்கு பலன் கிடைக்கிறது. அதேபோல **ஒரு வீண் எண்ணத்தின் கணக்கு வழக்கு – வருத்தப்படுவது. மனமுடைந்து போவது அல்லது மகிழ்ச்சி மறைந்து போவது அல்லது தான் யார் என புரிந்துகொள்ள முடியாமல் போவது, தன்னையே புரிந்துகொள்ளாமல் இருப்பது என இதுவும் ஒன்றுக்கு பலமடங்கு கணக்கில் அனுபவமாகிறது.** பிறகு அது ஒன்றுமே இல்லாததாக இருந்தது என யோசிக்கிறீர்கள். மகிழ்ச்சி மறைந்தது ஏன் என்று யோசிக்கிறீர்கள். விசயம் ஒன்றும் பெரிதாக இருக்கவில்லை எனினும் பலநாட்கள் போய்விட்டது –மகிழ்ச்சி குறைந்துவிட்டது. தனிமையில் இருப்பது நன்றாக இருப்பது ஏன் என்பது தெரியவில்லை! எங்காவது போய்விடவேண்டும் என நினைக்கிறீர்கள், ஆனால் எங்கே போவீர்கள்? தனியாக என்றால் பாபாவுடைய துணையில்லாமல் தனியாக போகக்கூடாது அல்லவா. விரும்பினால் தனியாகி விடுங்கள் ஆனால் பாபாவுடைய துணையிலிருந்து விலகி ஒருபோதும் தனியாகாதீர்கள். ஒருவேளை பாபாவுடைய துணையிலிருந்து தனியாகி, வைராக்கியம் கொண்டு, வருத்தமுடன் இருந்தீர்கள் என்றால் அது இன்னொறு மடமாக இருக்கும். பிராமண வாழ்க்கையாக இருக்காது. 24.3.85

**112.** பிராமணர்கள் நீங்கள் சுயம் ஞானம் நிறைந்தவராகி ஒவ்வொரு எண்ணத்தையும் நினைத்தீர்கள் என்றால் எண்ணம் வெற்றி இரண்டையும் ஒருசேர அனுபவம் செய்வீர்கள். எனவே இன்றிலிருந்து இந்த உறுதியான எண்ணம் என்ற வண்ணத்தின் மூலமாக தன்னுடைய வாழ்க்கை என்ற புத்தகத்தில் ஒவ்வொரு எண்ணமும், சமஸ்காரமும் புதியதாக இருக்க வேண்டும், இருக்கும் என்பதுகூட கூடாது, இருந்தேயாக வேண்டும். சுயநிலையில் உறுதியாக இருந்து இந்த பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பம் செய்யுங்கள், தானே பிள்ளையாராக இருந்து ஆரம்பம் செய்யுங்கள், இவைகள் எல்லாம் நடந்துகொண்டுதானே இருக்கிறது என யோசிக்காதீர்கள். பல முறை நினைக்கிறீர்கள் ஆனால் எண்ணங்கள் உறுதியாக இருக்க வேண்டும். எப்படி அஸ்திவாரத்தை தரமான சிமெண்ட் எல்லாம் கலந்து உறுதியாக்குகிறார்கள் இல்லையா. ஒருகால் மணலால் அஸ்திவாரம் அமைத்தால் அது எவ்வளவு காலம் இருக்கும்? எனவே எந்த நேரம் நினைக்கிறீர்களோ, அந்த நேரம் செய்து பார்ப்போம், எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்வோம், மற்றவர்களும் அப்படித்தானே செய்கிறார்கள் என சொல்கிறீர்கள். இப்படி மணலைக் கலந்துவிடுகிறீர்கள். எனவே அஸ்திவாரம் உறுதியாக இருப்பதில்லை. மற்றவரைப் பார்ப்பது எளிதாக இருக்கிறது. தன்னைப் பார்ப்பதில் சிரமம் இருக்கிறது. ஒருகால் நீங்கள் அடுத்தவரைப் பாக்க விரும்பினால், அந்தப் பழக்கம் உறுதியாக இருந்தால் பிரம்மா பாபாவைப் பாருங்கள். அவரும் அடுத்தவர்தானே. 13.11.85

**113.** எவ்விதமான எண்ணங்களின் பந்தனத்தில் இல்லையா என தன்னைச் செக் பண்ணுங்கள். அது வீண் எண்ணங்களின் பந்தனமாக இருக்கலாம், பொறாமை வெறுப்பின் பந்தனமாக இருக்கலாம்,

சோம்பேறித் தனத்தின் பந்தனமாக இருக்கலாம், அலட்சியத்தின் எண்ணமாக இருக்கலாம் இப்படி எந்தவித எண்ணங்கள் இருந்தாலும் அவைகள் மனதின் பந்தனத்திற்கு அடையாளங்கள். எனவே இன்று பாப்தாதா பந்தனங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். சுதந்திர ஆத்மாக்கள் எத்தனை பேர்? பெரிய கயிறுகள் எல்லாம் அறுபட்டு போய்விட்டன. இப்போது இருப்பது மெல்லிய நூலிழைகள். மெலிதாக இருக்கிறது எனினும் பந்தனத்தில் கட்டிவைப்பதில் கெட்டியாக இருக்கிறது. நான் பந்தனத்தில் கட்டி வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதே தெரியவில்லை. ஏனெனில் இந்த பந்தனம் அற்பகால போதையையும் ஏற்றுகிறது. எப்படி அழியக்கூடிய போதையில் இருப்பவர்கள் ஒருபோதும் தன்னை தாழ்வாக நினைப்பதில்லை. கிடப்பது தெருவில், நினைப்போ மாளிகையில் இருப்பதுபோல். இருப்பது வெறுங்கை, நினைப்பதோ அரசனைப்போல். அதேபோல இந்த போதைக்காரர்களும் ஒருபோதும் தன்னை தவறாக நினைக்கவே மாட்டார்கள். எப்போதும் தன்னை அல்லது தான் செய்த காரியத்தை சரியானது என்று அடம்பிடிப்பார்கள் அல்லது இப்படித்தானே நடந்து வருகிறது, இப்படித்தான் நடக்க வேண்டும் என அலட்சியத்தை காட்டுவார்கள். எனவே இன்று மனதின் பந்தனம் மட்டும் சொல்லப்பட்டது. பிறகு வார்த்தை மற்றும் கர்மம் பற்றியும் சொல்லப்படும். 2.12.85

**114.** எப்போதும் தனது எண்ணங்களில் ஒவ்வொருநாளும் தனக்கும் பிறருக்கும் ஏதாவது ஊக்க உறசாகம் தரக்கூடடிய எண்ணங்களை நினையுங்கள். எப்படி இன்றைய காலத்தில் செய்தித்தாள்களில் அல்லது சில இடங்களில் 'இன்றைய சிந்தனைக்கு'என விசேசமாக எழுதிவைக்கிறார்களோ, அதுபோல **தினந்தோறும் ஏதாவது ஊக்க உற்சாகத்தை வெளிப்படுத்தும் மனதின் எண்ணங்களை உருவாக்குங்கள். பிறகு அந்த எண்ணத்தின்படியே தன்னை சொரூபமாக்குங்கள் பிறகு மற்றவருடைய சேவையிலும் அதை ஈடுபடுத்தினால் என்னவாகும்?** இன்று இதைச் செய்வோம், இன்று இதைச் செய்வோம் என எப்போதும் புதிய ஊக்க உற்சாகம் பிறக்கும். ஏதாவது விசேச புரோகிராம் இருந்தால் ஊக்க உற்சாகம் வருவதேன்? இதைச் செய்வோம், பிறகு இதைச் செய்வோம் என திட்டமிடுகிறீர்கள். இதன் மூலமாக விசேச ஊக்க உற்சாகம் பிறக்கிறது. இப்படியாக தினந்தோறும் அமிர்தவேளையில் விசேசமாக ஊக்க உற்சாகத்தைத்தரும் எண்ணத்தை எழுப்புங்கள் பிறகு செக்கிங் செய்தும் பாருங்கள் அப்போது தன்னுடைய வாழ்க்கை சதாகாலத்திற்கும் உற்சாகம் உடையதாக இருக்கும் மேலும் உற்சாகம் கொடுக்கக்கூடியவராகவும் ஆகிவிடுவீர்கள். புரிந்ததா – எப்படி மனமகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள் இருக்கிறதோ அப்படி இது தினசரி மனதிற்கான மனமகிழ்ச்சி புரோகிராமாக இருக்கிறது. 2.12.85

**115.** இந்த வருடம் என்ன விசேசத்தைக் காட்டுவீர்கள்? ஒவ்வொரு வருடமும் உறுதியான எண்ணம் வைக்கிறீர்கள். எப்போதெல்லாம் அப்படி ஏதாவது வாய்ப்பு ஏற்படுகிறதோ அப்போது உறுதியான எண்ணம் செய்கிறீர்கள் மேலும் செய்யவும் வைக்கிறீர்கள். எனவே உறுதிமொழி எடுக்க வைப்பதும் பொதுவாகிவிட்டது. சொல்லும் போது உறுதியான எண்ணம் என்று சொல்கிறீர்கள் ஆனால் இருப்பதோ எண்ணம். ஒருகால் உறுதியாக இருந்தால் மீண்டும் எடுக்க வேண்டியிராது. உறுதியான எண்ணம் என்ற வார்த்தை பொதுவாகிவிட்டது. இப்போது எந்தவொரு காரியத்தை செய்வதாக இருந்தாலும் ஆமாம் உறுதியான எண்ணம் செய்கிறோம் இருந்தாலும் எனச் சொல்கிறீர்கள், அப்படி ஏதாவது சாதனத்தை உருவாக்குங்கள் அதன் மூலம் நினைப்பதும் செய்வதும் சமமாக இருக்க வேண்டும். 'பிளான்' மற்றும் 'பிராக்டிகல்' இரண்டும் ஒன்றாக இருக்க வேண்டும். பிளான் நிறைய இருக்கிறது ஆனால் பிராக்டிகலில் வரும்போது பிரச்சினைகள் வருகிறது, உழைக்க வேண்டியதாக இருக்கிறது, சமாளிக்க வேண்டியதாக இருக்கிறது, இவைகள் எல்லாம் வரும், வந்துகொண்டுதான் இருக்கும். எனினும் எப்போது இலட்சியம் இருக்கிறதோ அப்போது பிராக்டிகலில் எப்போதும் முன்னேறிக்கொண்டே இருப்பீர்கள். 18.1.86

**116.** எந்தவிதமான சுயத்தின் சமஸ்காரங்களால் அல்லது குழுவின் சமஸ்காரங்களால் அல்லது வாயுமண்டலத்தின் குழப்பத்தால் மனமுடைந்து போகவேண்டாம். எப்போதும் பாபாவை இணைந்த ரூபத்தில் அனுபவம் செய்து மனம் உடைந்த நிலையில் இருந்து சக்திசாலியாகி மேலே பறந்து

செல்லுங்கள். கணக்கு வழக்கு முடிந்ததென்றால் சுமை இறங்கியது. சந்தோஷமாக பழைய சுமைகளை அழித்துக்கொண்டே செல்லுங்கள். பாப்தாதா எப்போதும் குழந்தைகளுக்கு உதவியாளராக இருக்கிறார். அதிகம் யோசிக்காதீர்கள். வீண் நினைவுகளும் பலவீனமாக்கி விடுகிறது. யாருக்கு வீண் எண்ணங்கள் அதிகம் ஓடுகிறதோ அப்போது இரண்டு மூன்று முறை முரளியை படியுங்கள். சிந்தனை செய்யுங்கள். படித்துக்கொண்டே இருங்கள். ஏதாவது பாயிண்ட் புத்தியில் உட்கார்ந்துவிடும். சுத்த எண்ணங்களின் சக்தியை சேர்த்துக்கொண்டே இருங்கள் அப்போது வீணானவைகள் அழிந்துபோய்விடும். 29.3.86

**117.** சுத்த எண்ணங்களின் சக்தியால் சேமிப்புக் கணக்கில் மேலும் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. இப்போது இன்னும் உள்முகமாகி சுத்த எண்ணங்களின் சக்தியை விசேசமாக அனுபவம் செய்வது அவசியமாக இருக்கிறது. சுத்த எண்ணங்களின் சக்தி எளிதாக வீண் எண்ணங்களை அழித்து, மற்றவரிடத்திலும் சுபபாவனை, சுப ஆசையின் சொரூபத்தில் மாற்றத்தை கொண்டுவருகிறது. இப்போது இந்த சுத்த எண்ணங்களின் சக்தியை விசேசமாக அனுபவம் செய்ய வேண்டும். இந்த சுத்த எண்ணங்களின் சக்தி வீண் எண்ணங்களை எளிதாக அழித்து விடுகிறது. தனது வீண் எண்ணங்களை மட்டுமல்ல ஆனால் உங்கள் சுத்த எண்ணங்கள் மற்றவரிடத்திலும் சுபபாவனை மற்றும் சுப ஆசையின் வடிவில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும். இப்போது இந்த சுத்த எண்ணங்களின் சக்தியை தனக்காகவும் ஸ்டாக் சேர்த்து வைப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. முரளி கேட்பது, இந்த ஈடுபாடு மிகவும் நல்லது. முரளி என்றால் பொக்கிஷம். முரளியின் ஒவ்வொரு பாய்ண்டையும் சக்தியின் ரூபத்தில் சேர்த்து வைக்க வேண்டும். இதுதான் சுத்த எண்ணங்களின் சக்தியை அதிகரிப்பதாகும். சக்தியின் ரூபத்தில் ஒவ்வொரு நேரமும் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். இப்போது இந்த விசேசத்தின்மீது விசேச கவனம் கொடுக்க வேண்டும். **சுத்த எண்ண சக்தியின் மகத்துவத்தை இப்போது எவ்வளவு அனுபவம் செய்துகொண்டே போகிறீர்களோ அந்த அளவு மனசேவையின் சகஜ அனுபவி ஆகிக்கொண்டே போவீர்கள்.** முதலில் தனக்காக சுத்த எண்ணங்களின் சேமிப்பு தேவை. பிறகு கூடவே நீங்கள் எல்லோரும் பாபாவோடு கூட உலக நன்மை செய்பவராக, உலக மாற்றம் செய்பவராக இருக்கிறீர்கள். எனவே உலகத்தையும் இந்த சுத்த எண்ணங்களின் சக்தி மூலமாக மாற்றம் செய்யும் காரியம் இப்போது மிக அதிகமாக பாக்கி இருக்கிறது. எப்படி இப்போது பிரம்மா பாபா அவ்யக்த ரூபதாரி ஆகி சுத்த எண்ணங்களின் சக்தி மூலமாக உங்கள் எல்லோரையும் பராமரித்து வருகிறார். சேவையின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருந்து முன்னேற்றிக் கொண்டிருக்கிறார். இந்த சுத்த எண்ண சக்தியின் விசேச சேவை இப்போது நடந்துகொண்டிருக்கிறது. எனவே பிரம்மா பாபாவிற்குச் சமமாக இப்போது இந்த விசேசத்தை தனக்குள் அதிகரிக்க, தபஸ்யாவின் ரூபத்தில் பயிற்சி செய்ய வேண்டும். தபஸ்யா என்றால் மிக உறுதியான பயிற்சி. சாதாரணமானதை தபஸ்யா எனச் சொல்லமுடியாது எனவே இப்போது தபஸ்யாவிற்காக நேரம் கொடுக்கப்படுகிறது. இப்போதே ஏன் தரப்படுகிறது? ஏனெனில் இந்த நேரம் உங்களுடைய நீண்டகாலத்தில் சேர்ந்துவிடும். பாப்தாதா அனைவருக்கும் நீண்டகால பிராப்தி செய்ய வைக்க நிமித்தமாக இருக்கிறார். 31.3.86

**118.** எந்தவொரு சேவையையும் எப்போது நீங்கள் ஆரம்பிக்கிறீர்களோ அப்போது இதை செக் பண்ணுங்கள் அதாவது புத்தியில் எந்த ஆத்மாவைக் குறித்தாவது சுத்தத்திற்குப் பதிலாக ஒருவேளை முடிந்துபோன விசயங்களின் நினைவு கொஞ்சம் இருந்தாலும், அந்த உணர்வு மற்றும் பார்வையோடு பார்க்கவும், அவரோடு பேசவும் வேண்டி இருக்கிறது. அப்போது சேவையில் சுத்தத்தின் மூலமாக எந்த சம்பூரண வெற்றி கிடைக்க வேண்டுமோ அது கிடைப்பதில்லை. முடிந்துபோன விசயங்கள் அல்லது உணர்வுகள் முதலியவைகளை அழித்துவிட வேண்டும் – இதுதான் தூய்மை. முடிந்ததை நினைப்பதும் கொஞ்ச சதவீதத்தில் லேசான பாவமாக இருக்கிறது. எண்ணங்கள்கூட சிருஷ்டியை உருவாக்கி விடுகிறது. வர்ணனை செய்வது இன்னும் பெரிய விசயமாக இருக்கிறது, எனினும் நினைப்பதன் மூலமாகவே, அந்தப் பழைய எண்ணங்களின் நினைவு, அதற்குத் தகுந்த சிருஷ்டியை அதாவது வாயுமண்டலத்தை உருவாகிவிடுகிறது. பிறகு நான் சொன்னேன் அல்லவா அப்படியே நடந்துவிட்டது என்று சொல்கிறீர்கள். ஆனால் நடந்தது ஏன்? உங்களுடைய பலவீன, வீண் எண்ணங்கள் இந்த வாயுமண்டலத்தைப் படைத்து விட்டது. எனவே எப்போதும் உண்மையான சேவாதாரி என்றால் பழைய

அதிர்வலைகளை முடித்து வைக்கக்கூடியவர். எப்படி விஞ்ஞானிகள் ஆயுதத்தின் மூலமாக ஆயுதத்தை அழித்துவிடுகிறார்கள், ஒரு விமானத்தைக் கொண்டு மற்ற விமானத்தை வீழ்த்தி விடுகிறார்கள். யுத்தம் செய்கிறார்கள் என்றால் அழித்து விடுகிறார்கள் அல்லவா. எனவே உங்கள் சுத்த அதிர்வலைகள், சுத்த அதிர்வலைகளை தோற்றுவிக்க முடியும் மேலும் அவைகளைக் கொண்டு வீண் அதிர்வலைகளை அழிக்கவும் முடியும். எண்ணங்கள் எண்ணங்களை அழிக்க முடியும். ஒருக்கால் உங்கள் எண்ணம் சக்திமிக்கதாக இருந்தால் அந்த எண்ணம் வீணானதை கட்டாயம் அழித்துவிடும். 20.2.87

**119.** **'இப்போதில்லையேல் எப்போதும் இல்லை'** என்பதை ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு நேரமும் நினைவில் கொள்ளுங்கள். யாருக்கு இந்த நினைவு இருக்கிறதோ அவர் ஒருபோதும் நேரம், எண்ணம் அல்லது கர்மத்தை வீணாக்க விடமாட்டார், எப்போதும் சேமித்துக்கொண்டே இருப்பார். கெட்ட செயல்களின் விசயமே இல்லை ஆனால் வீண் செயல்களும் ஏமாற்றத்தை தந்துவிடுகின்றன. எனவே ஒவ்வொரு நொடியுடைய, ஒவ்வொரு எண்ணத்தினுடைய மகத்துவத்தை அறிந்திருக்கிறீர்கள் அல்லவா. சேமிப்புக் கணக்கில் எப்போதும் சேர்ந்துகொண்டே இருக்கட்டும். ஒருக்கால் ஒவ்வொரு நொடி அல்லது ஒவ்வொரு எண்ணத்தை சிறப்பாக சேமிக்கிறீர்கள், வீணாக இழப்பதில்லை என்றால் 21 பிறவிக்கு உங்கள் கணக்கை சிறந்ததாக ஆக்கிவிடுகிறீர்கள். எனவே எவ்வளவு சேமிக்க வேண்டுமோ அவ்வளவு சேமிக்கிறீர்களா? **இந்த விசயத்தை அதாவது ஒரு எண்ணமும் ஒரு நொடியும் வீணாகப் போகக்கூடாது என்பதை 'அன்டர்லைன்' செய்யுங்கள்.** வீணானவைகள் முடிந்துவிட்டால் சதாகாலத்திற்கு சக்திசாலி ஆகிவிடுவீர்கள். 18.11.87

**120.** விதைரூப நிலை அல்லது சக்திசாலி நினைவுநிலை குறைவாக இருக்கிறது அல்லது மிகுந்த கவனம் கொடுத்தபிறகே அனுபவமாகிறது என சிலர் நினைக்கிறார்கள். இதற்குக் காரணம் 'லீக்கேஜ், புத்தியின் சக்தி வீணானவைகளுக்கு கொடுக்கப்பட்டு விடுகிறது. சில நேரம் வீண் எண்ணங்கள் ஓடுகிறது, சில நேரம் சாதாரண எண்ணங்கள் ஓடுகிறது. எந்த காரியத்தை செய்துகொண்டிருக்கிறீர்களோ அதன் எண்ணங்களில் புத்தி பிஸியாக இருந்தால் அதை சாதாரண எண்ணங்கள் என்று சொல்லப்படுகிறது. நினைவுசக்தி அல்லது சிந்தனைசக்தி என எது இருக்க வேண்டுமோ அது இருப்பதில்லை எனினும் இன்று எந்த பாவ கர்மமும் செய்யவில்லை, எண்ணங்கள் வீணாகப் போகவில்லை, யாருக்கும் துக்கம் கொடுக்கவில்லை என தன்னைத்தான் குஷிப்படுத்திக் கொள்கிறீர்கள். எனினும் **சக்திமிக்க எண்ணம், சக்திமிக்க நிலை, சக்திசாலி நினைவு இருந்ததா?** ஒருவேளை அப்படி இல்லை என்றால் அதனை சாதாரண எண்ணங்கள் என்றே சொல்லமுடியும். காரியங்களைச் செய்தீர்கள் எனினும் கர்மமும் யோகமும் ஒன்றாக இருக்கவில்லை. கர்மம் செய்பவராக இருந்தீர்கள் ஆனால் கர்மயோகியாக இருக்கவில்லை. எனவே கர்மம் செய்தபோதும், **சிந்தனை சக்தி அல்லது மூழ்கிய நிலையின் சக்தி இந்த இரண்டில் ஏதாவது ஒன்றின் அனுபூதி எப்போதும் இருக்க வேண்டும்.** இந்த இரண்டு நிலைகளும் சக்திசாலி சேவை செய்ய வைப்பதற்கு ஆதாரமாக இருக்கிறது. 10.1.88

**121.** இந்த சாகார உலகத்தில் எண்ணம், சொல் மற்றும் செயல் இந்த மூன்றிற்கும் மகத்துவம் உள்ளது மேலும் **இந்த மூன்றிலும் ஒருசேர சிறந்து இருப்பதைத்தான் நிறைந்த நிலை** என்று சொல்லப்படுகிறது. இந்த சாகார உலகிலேயே முழு மதிப்பெண்கள் பெறுவது மிகவும் அவசியமானது. ஒருவேளை ஒருவர் என்னுடைய எண்ணங்கள் மிகச் சிறந்ததாக இருக்கிறது ஆனால் செயல் மற்றும் சொல்லில் வித்தியாசம் வருகிறது என சொன்னால் அதை யாராவது ஏற்றுக்கொள்வார்களா? ஏனெனில் சொல்லும் செயலும் எண்ணங்களின் ஸ்தூல கண்ணாடியாக இருக்கிறது. சிறந்த எண்ணமுடையவரின் பேச்சு தானாகவே சிறப்பாக இருக்கும்.

பாப்தாதா 'டபுள் அயல்நாட்டு' குழந்தைகளைப் பார்த்து குழந்தைகளின் விசேசங்களின்மீது எப்போதும் மகிழ்ச்சி அடைகிறார். அந்த விசேசம் எது? எப்படி பிரம்மா பாபாவின் சிறந்த எண்ணங்கள் மூலமாக அல்லது சிறந்த எண்ணங்களின் அழைப்பு மூலமாக தெய்வப்பிறவி பெற்றிருக்கிறார்களோ, அப்படி

சிறந்த எண்ணங்களின் சிறந்த படைப்பாக இருக்கக்கூடிய காரணத்தால் தம்முடைய எண்ணங்களை சிறந்ததாக்க விசேச கவனமுடன் இருக்கிறார்கள். எண்ணத்தின்மீது கவனம் இருக்கக்கூடிய காரணத்தால் எந்தவிதமான சூட்சும மாயாவின் யுத்தத்தையும் விரைவில் அறிந்து கொள்கிறார்கள் மேலும் அதை மாற்றுவதற்காக அல்லது வெற்றி பெறுவதற்காக முயற்சி செய்து விரைவில் அழித்துவிடுவதற்கான முயற்சியும் செய்கிறார்கள். எண்ண சக்தியை சதா சுத்தமாக்குவதற்காக உள்ள கவனம் நன்றாக இருக்கிறது. தன்னை செக் பண்ணுவதற்கான பயிற்சியும் நன்றாக இருக்கிறது. சூட்சும செக்கிங் செய்யும் காரணத்தால் சிறிய தவறுகளையும் உணர்ந்து பாபாவின் முன்னால் அல்லது நிமித்தமாய் இருக்கக்கூடிய குழந்தைகளின் முன்னால் வைப்பதில் தூய உள்ளம் உடையவராக இருக்கிறார்கள், எனவே இந்த விதி மூலமாக புத்தியில் குப்பைகள் ஒன்றுசேருவது இல்லை. மெஜாரிட்டி குழந்தைகள் உள்ளதை உள்ளபடி சொல்லவதற்கு கூச்சப்படுவதில்லை, எனவே எங்கே தூய்மை இருக்கிறதோ அங்கே தெய்வீக குணம் சகஜமாக தாரணை ஆகிறது. **தெய்வீக குணங்களின் தாரணை அதாவது அவைகளை தனக்குள் கொண்டுவருவதற்கான விதியாக இருப்பது – உள்ளத்தூய்மை.** 28.2.88

**122.** வீணானதை சக்திசாலியாக மாற்ற விசேசமாக எந்தப் பயிற்சி தேவை? எப்படி மாற்றம் செய்வீர்கள்? எண்ணங்கள் எப்படி சக்தி மிக்கதாகும்? ஒவ்வொரு ஆத்மா மீதும் சுப பாவனை மற்றும் சுப ஆசை கொள்ள வேண்டும். ஒருவேளை உங்களிடம் அப்படிப்பட்ட விதி இருக்குமானால் மாறிவிடுவார்கள். ஒருவேளை யார்மீதாவது சுபபாவனை வைத்திருந்தீர்கள் என்றால் அவருடைய தவறான விசயமும் சரியாகத் தோன்றும், அதேவேளை சுபபாவனை இல்லை என்றால் சரியான விசயமும் தவறாகத் தோன்றும். எனவே ஒவ்வொரு ஆத்மா மீதும் எப்போதும் சுப பாவனையும் சுப விருப்பமும் கொள்வது அவசியமானது. எனவே இது இருக்கிறதா அல்லது அவ்வப்போது வீண் பாவனையும் வந்துவிடுகிறதா? உங்களுடைய சுபபாவனை, வீண் உணர்வுகள் உடையவர்களையும் மாற்றிவிடுகிறது. பாவனைக்கு பலன் கிடைக்கிறது என்ற புகழ் இருக்கிறது. எப்போது பக்தர்களின் பாவனைக்கு பலன் கிடைக்கிறதோ அப்போது உங்களுக்கு, உங்கள் சுபபாவனையின் பலன் கிடைக்காதா? எனவே வீணானவைகளை சக்திசாலியாக மாற்றம் செய்வதற்கு சுபபாவனை மற்றும் சுப ஆசையே ஆதாரம். அவர்கள் எப்படி இருந்தாலும் நீங்கள் சுப பாவனை கொடுங்கள். ஓரிடத்தில் எவ்வளவுதான் அழுக்குத் தண்ணீர் சேர்ந்திருந்தாலும் அதில் சுத்தமான நீரை ஊற்றிக்கொண்டே இருந்தால் அந்த அழுக்கு வெளியேறிக்கொண்டே இருக்கும். ஒருவேளை ஏதாவது ஆத்மாவிடம் வீணானவைகளை நீக்குவதற்கான திறமை இல்லை என்றால் நீங்கள் உங்களுடைய சுப பாவனையின் சக்தி மூலமாக அவருடைய வீணானவற்றை சக்திமிக்கதாக்கி விடுங்கள். மாற்றி விடுங்கள். இவ்வளவு சக்தி இருக்கிறதா அல்லது சிலநேரம் பாதிப்பு ஏற்பட்டுவிடுகிறதா? எப்படி பாப்தாதா அவர்கள் உங்களுடைய வீண் கர்மங்களை பார்த்து அவைகளை மாற்றி விட்டார் அல்லவா. எப்படி செய்தார்? என்னுடைய குழந்தை என சுப பாவனை வைத்தார். எனவே இது என்னுடைய குடும்பம், ஈஸ்வரிய குடும்பம் என்ற சுபபாவனை உங்களிடம் இருக்கிறது. எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், கல்போல இருந்தாலும் நீங்கள் தண்ணீராக்கி விடுங்கள். அப்படிப்பட்ட சுப பாவனை மற்றும் சுப ஆசை உடைய புனிதமான அன்னப் பறவைகளாக இருக்கிறீர்களா? அன்னப் பறவையை எப்போதும் தூய்மையாகக் காட்டுகிறார்கள். எனவே தூய்மையான புத்தியுடைய அன்னத்திற்குச் சமமாக மாற்றத்தை கொண்டுவர வேண்டும். தனக்குள் தாரணை செய்யக்கூடாது. 26.10.91

**123.** எல்லோரையும்விட மிகப்பெரிய **சித்தி சொரூப ஆத்மாக்கள் நீங்கள்தான்.** எனவே எண்ணங்களும் சொல்லும் சித்தி அடையும் அல்லவா. சித்தி அடைவது என்றால் வெற்றி பெறுவது. பிரத்தியட்ச ரூபத்தில் வர வேண்டும் அதைத்தான் சித்தியடைவது என்று சொல்லப்படுகிறது. எனவே நாம் எல்லோரும் சித்தி சொரூப ஆத்மாக்களாக இருக்கிறோம் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். சித்தி சொரூப ஆத்மாக்களாகிய நம்முடைய ஒவ்வொரு எண்ணமும், சொல்லும், செயலும் தனக்காகவோ அல்லது அனைவருக்காகவோ சித்தி பெற வைப்பதாக இருக்கிறது. வீணாகாது. சொன்னதைச் செய்தீர்கள் என்றால் சித்தியாகிவிட்டது. சொன்னீர்கள், யோசித்தீர்கள்

ஆனால் செய்யவில்லை என்றால் அது வீணாகிவிட்டது. சிலர் தனக்காகவும் பிறருக்காகவும் தமது எண்ணங்கள் மிக நன்றாக இருப்பதாக, பல நல்ல நல்ல சிந்தனையில் உற்சாகம் பிறப்பதாக நினைக்கிறார்கள், ஆனால் அவைகள் எண்ண அளவிலேயே நின்று விடுகிறது. பிராக்டிகல் செயலில், சொரூபத்தில் வருவதில்லை. அப்போது இதை என்னவென்று சொல்வீர்கள்? எண்ணங்கள் மிக நன்றாக இருக்கிறது எனினும் செயலில் வித்தியாசம் இருப்பதேன்? அதன் காரணம் என்ன? ஒருவேளை விதை மிக நல்லதாக இருக்கிறது ஆனால் பழம் நல்லதாக வரவில்லை என்றால் என்ன சொல்வார்கள்? மண்ணில் அல்லது பராமரிப்பில் குறைவு இருப்பதாகச் சொல்வார்கள். அதேபோல எண்ண வடிவ விதை நன்றாக இருக்கிறது. பாப்தாதாவிடம் எண்ணங்கள் வந்து சேருகிறது. மிக நல்ல விதை போட்டிருக்கிறீர்கள், மிக நல்ல எண்ணத்தை உருவாக்கி இருக்கிறீர்கள், இப்போது பழம் கிடைத்தே தீரும் என பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். ஆனால் என்ன நடக்கிறது? உறுதியான தாரணை என்ற **மண்ணில் குறையும், அடிக்கடி கவனம்** என்ற **பராமரிப்பு குறைவும்** இருக்கிறது. 2.3.92

### வீணானவை நீக்க புத்தியை சுத்தமாக்குங்கள்

**124.** சதா மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா ! அல்லது சிலநேரம் குஷியாக இருக்கிறீர்கள சிலநேரம் குஷிக்குப் பதிலாக ஏதாவது வீண் சகவாசம் அல்லது எண்ணங்களில் வந்துவிடுகிறீர்களா? ஒருவேளை ஏதாவது வீண் எண்ணங்கள் அல்லது வீண் சகவாசம் கிடைத்தாலோ அல்லது நடந்தாலோ குஷி முடிந்து போய்விடும். ஏனெனில் வீண் சகவாசம் அல்லது வீண் எண்ணங்கள் சுமையாக இருக்கிறது, குஷி இலேசான பொருளாக இருக்கிறது. எனவே பாருங்கள், எப்போது குஷியாக இருக்கிறீர்களோ அப்போது ஆடுகிறீர்கள். யார் இலேசாக இருக்கிறார்களோ அவர்கள் குஷியில் நடனமாடுகிறார்கள். உடல் எடை எவ்வளவு அதிகமாக இருந்தாலும் மனம் இலேசாக இருக்கும்போது நடனமாடுவார்கள். மனதில் சுமை இருந்தால் உடல்எடை குறைவாக இருந்தாலும் நடனமாடமாட்டார்கள். எனவே குஷிதான் இலேசானது, வீண் எண்ணங்கள் அல்லது சகவாசம் சுமையாக இருக்கிறது. சுமை எப்போதும் கீழே இழுக்கிறது மேலும் இலேசான பொருள் எப்போதும் மேலே போகிறது. எனவே குஷியாக இருப்பதற்கான எளிய சாதனம் எப்போதும் இலேசாக இருப்பதுதான். சுத்த எண்ணங்கள் இலேசானது மேலும் வீண் எண்ணங்கள் சுமையானது. எப்போதெல்லாம் யாரிடம் வீண் எண்ணங்கள் ஓடுகிறதோ அப்போது எதை அனுபவம் செய்கிறீர்கள்? தலை சுமையாகிவிடுகிறது. சுமையாக இருப்பதால்தானே தலை பாரமாகிவிடுகிறது. எனவே எப்போதும் பாபாவின் சகவாசத்தில் இருக்க வேண்டும் மேலும் எப்போதும் பாபாவால் கொடுக்கப்பட்ட சுத்த எண்ணங்களிலேயே இருக்க வேண்டும். **இந்த தினசரி முரளி தினந்தோறும் கிடைக்கும் சுத்த எண்ணங்களாக இருக்கிறது. எனவே எத்தனை சுத்த எண்ணங்கள் பாபா மூலமாகக் கிடைத்திருக்கிறது.** எப்போது ஏதாவது நல்ல பொருள் அல்லது சிறந்த பொருள் கிடைத்துவிட்டால் சாதாரண பொருளை என்ன செய்வீர்கள்? அழித்துவிடுவீர்கள் இல்லையா!

முழுநாளும் புத்தியை பிஸியாக வைத்திருப்பதற்காக தினந்தோறும் காலையில் பாபா சுத்த எண்ணங்களைத் தருகிறார். எங்கே சுத்தம் இருக்கிறதோ அங்கே வீணானவைகள் இருப்பதில்லை. புத்தியை காலியாக வைத்திருக்கிறீர்கள் எனவே வீணானவைகள் வந்துவிடுகின்றன. சதா சுத்த எண்ணங்களால் புத்தியை பிஸியாக வையுங்கள் இதுவே சகஜ உபாயமாக, சாதனமாக இருக்கிறது. குஷியாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் நினைவில் வைக்க வேண்டாம் ஆனால் சதா குஷியாக இருக்க வேண்டும். பிராமணன் குஷியாக இல்லையென்றால் யார் இருப்பார் என்பதை நினைத்துப் பாருங்கள். பிராமணன்தான் சிறந்தவன் இல்லையா. தேவரைக் காட்டிலும் பிராமணன் சிறந்தவன். பிராமணனின் சத்துணவே குஷிதான். எனவேதான் குஷியைப்போன்ற சத்துணவில்லை என பாடுகிறீர்கள். 9.1.93

**125.** நீங்கள் என்ன எண்ணத்தை நினைக்கிறீர்களோ அதை செயலில் கொண்டுவர முடியும். எனவே **எண்ணமும் செயலும் சமமாக இருப்பதுதான் மாஸ்டர் சர்வசக்திவானின் அடையாளமாக இருக்கிறது.** எண்ணங்கள் மிக உயர்வாக இருக்கிறது மற்றபடி செயல் செய்யும்போது அந்த சிறந்த எண்ணங்களை வைத்திருக்க முடியவில்லை என்றால் அவரை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று சொல்லமாட்டார்கள்.

எந்த சிறந்த எண்ணங்கள் வருகிறதோ அது செயல்வரை வருகிறதா அல்லது வர முடியவில்லையா? என்பதை 'செக்' பண்ணுங்கள். **எந்த சக்தி எந்த நேரம் அவசியமோ அந்த நேரம் அந்த சக்தி காரியத்திற்கு வரவேண்டும் அதுவே மாஸ்டர் சர்வ சக்திவானின் அடையாளமாக இருக்கிறது.** 2.12.93

**126.** எந்தவொரு கர்மம் அல்லது எண்ணத்தை முக்காலத்தையும் உணர்ந்த நிலையில் இருந்து செய்வதில்லை, எனவே நம்பர் வருகிறது. எந்தவொரு எண்ணமும் புத்தியில் வரும்போது, அது விதையாக இருக்கிறது, வார்த்தை மற்றும் செயல் அதன் விஸ்தாரமாக இருக்கிறது, ஒருவேளை எண்ணம் என்ற விதையை திரிகாலதரிசி நிலையில் உறுதியாக இருந்து சோதனை செய்து, சக்திசாலி ஆக்கினீர்கள் என்றால் அப்போது வார்த்தை மற்றும் கர்மத்தில் தானகவே எளிதில் வெற்றி கிடைத்துவிடும். எண்ணங்களை 'செக் பண்ணுவதில்லை என்றால் அதாவது விதை சக்திசாலியாக இல்லாதபோது வார்த்தை மற்றும் கர்மத்திலும் வெற்றி பெறுவதற்கான சக்தி இருப்பதில்லை. 1.2.94

**127.** நிமித்தமானீர்கள் என்றால் அதற்குரிய சூட்சும வாயுமண்டலமும், அதிர்வலைகளும் அவசியம் பிறரை சென்று சேர்கிறது. கோடி மடங்கு புண்ணியமும் கிடைக்கிறது மேலும் கோடி மடங்கு நிமித்தமும் ஆகிறீர்கள். இவைகள் இப்படிதானே நடந்துவருகிறது, இவைகள் இப்படித்தானே ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது... என வேறு வார்த்தைகளை சொல்ல மாட்டீர்கள் அல்லவா. இந்த அதிர்வலைகள் பலவீனமாக்கிவிடுகிறது. உறுதியான எண்ணம் செய்தீர்கள் என்றால் அந்த உறுதி வெற்றியை அவசியம் கொண்டுவரும். பலவீன எண்ணங்களை உற்பத்தி செய்யாதீர்கள். அவைகளைப் பராமரிப்பதில் நிறைய நேரம் வீணாகப் போகிறது. உற்பத்தி மிக விரைவாக நடைபெறுகிறது. ஒருநொடியில் நூறு எண்ணங்கள் உற்பத்தி ஆகிவிடுகிறது. பிறகு அவைகளைப் பராமரிப்பதில் எவ்வளவு நேரம் செலவாகிறது. அவைகளை அழிப்பதற்கு உழைப்பும் தேவைப்படுகிறது, நேரமும் செலவாகிறது மேலும் பாப்தாதாவின் வரதானம் மற்றும் ஆசீர்வாதத்தில் இருந்தும் வஞ்சிக்கப்பட்டு விடுகிறீர்கள். அனைவருடைய சுப பாவனையின் ஆசீர்வாதத்தில் இருந்தும் வஞ்சிக்கப்பட்டு விடுகிறீர்கள். சுப எண்ணங்களின் பந்தனத்தால், வளையத்தால் அனைவரையும் அப்படி கட்டிப்போடுங்கள், அவர்கள் கொஞ்சம் பலவீனமாக இருந்தாலும் சரி, அவர்களுக்காவும் இந்த சுத்த எண்ணங்களின் வளையம் ஒரு குடைநிழலாகி விடவேண்டும், பாதுகாப்பிற்கான சாதனமாகிவிட வேண்டும், கோட்டையாகிவிட வேண்டும். சுத்த எண்ணங்களின் சக்தியை இப்போது குறைவாகவே அறிந்திருக்கிறீர்கள். ஒரு சுத்த அல்லது சிறந்த சக்திசாலி எண்ணம் என்ன அதிசயத்தை செய்து காட்ட முடியும் – இதன் அனுபூதியை இந்த வருடம் செய்து பாருங்கள். முதலில் பயிற்சி செய்யும் போது யுத்தம் வரும், வீண் எண்ணங்கள் சுத்த எண்ணங்களை வெட்டி விடும். எப்படி கௌரவர்கள் – பாண்டவர்களின் அம்புகளை காட்டுகிறார்கள் அல்லவா, ஒரு அம்பு இன்னொரு அம்பை வழியிலேயே அழித்துவிடுகிறது, அதைப்போல எண்ணம், எண்ணத்தை அழிப்பதற்கு முயற்சி செய்கிறது, செய்யும், எனினும் உறுதியான எண்ணம் உடையவருக்கு துணையாக பாபா இருக்கிறார். வெற்றித் திலகம் எப்போதும் இருக்கவே இருக்கிறது. இப்போது இதை வெளியே கொண்டுவாருங்கள் அப்போது வீணானவைகள் தாமே உள்ளே போய்விடும். வீணானவைகளுக்கு நேரம் கொடுக்கிறீர்கள். அவைகளை வெட்டுவதில்லை ஆதனால் அவைகளின் வண்ணங்கள் உங்கள் வண்ணங்களாகிவிடுகிறது. நொடியைவிட குறைந்த நேரத்தில் வெட்டிவிடுங்கள். சுத்த எண்ணங்களால் அழித்துவிடுங்கள். அப்போது அனைவருடைய சுப எண்ணங்களின் வாயுமண்டலத்தின் வளையம் அற்புதங்களைச் செய்துகாட்டும். எங்கே நடக்கிறது, நிறைய செய்தாயிற்று, நிறைய கேட்டாயிற்று, மிக நன்றாகவும் இருக்கிறது, எனினும் நடப்பதில்லையே என முன்கூட்டியே இப்படி நினைக்காதீர்கள். இப்படிப்பட்ட வீணான எண்ணங்களும் வாயுமண்டலத்தை பலவீனமாக்கி விடுகிறது. ஆகியே தீர வேண்டும் என உறுதி கொள்ளுங்கள், பறந்து செல்லுங்கள். என்ன செய்ய முடியாது! ஆனால் முதலில் சுயத்தின் மீது கவனம் கொடுக்க வேண்டும். சுயத்தின் அட்டென்சன்தான் டென்சனை அழிக்கும். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இவைகள் இப்படித்தானே நடந்து வருகிறது, முன்பும் உறுதிமொழி எடுத்திருந்தோம் என பிறர் சொல்வதையெல்லாம் கேட்காதீர்கள். இதில் பலவீனமானவர்களுக்கு துணைபோக வேண்டாம், அவர்களை உங்களுக்கு துணையாக்குங்கள்.

ஒருகால் யாரேனும் இப்படி – அப்படி பேசினால் நல்லதை பேசுங்கள், நல்லதை நினையுங்கள், நல்லதை செய்யுங்கள் என்பதை ஒருவர் பிறருக்கு எடுத்துச் சொல்லுங்கள். 14.4.94

**128.** எவ்வளவு எண்ணங்களின் சிறந்த பொக்கிஷங்கள் சேர்ந்திருக்க வேண்டுமோ அவ்வளவு சேரவில்லை, வீணானவைகளின் கணக்கில் அதிமாகத் தெரிகிறது. ஒருவேளை எண்ணங்கள் வீணாக இருந்ததென்றால் மற்ற பொக்கிஷங்களும் தானே வீணாகப் போய்விடும். எண்ணங்கள் வீணாக இருந்தால் செயல் மற்றும் வார்த்தை என்னவாகும்? வீணாகத்தானே இருக்கும். எண்ணம்தான் அஸ்திவாரம் எனவே எண்ணங்களைச் செக் பண்ணுங்கள். சரி விடுங்கள், வெறும் இரண்டு நிமிடம்தானே போனது, அதிகமாக இல்லையே என இலேசாக விட்டுவிடாதீர்கள். எனினும் இரண்டு நிமிடத்தில் எத்தனை எண்ணங்கள் ஓடின என்பதை செக் பண்ணுங்கள். வீண் எண்ணங்கள் வீரியத்துடன் இருக்கிறதல்லவா! ஒரு நொடியில் அபுவிலிருந்து அமெரிக்கா போய்விடுகிறீர்கள். உண்மையில் போவதற்கு எத்தனை மணிநேரமாகிறது. என்றால் எவ்வளவு வேகம், அந்த வேகத்தின்படி செக் பண்ணுங்கள். உங்கள் எண்ண சக்தியை மிச்சப்படுத்துங்கள் பின்னர் இரவில் செக் பண்ணுங்கள். ஒருவேளை கவனம் கொடுத்து எந்த பொருளை சேமித்தாலும், அந்த சேமிப்பு குறைவாக இருந்தாலும் சேமித்த குஷி மிகையாக இருக்கும். 10 பவுண்ட் அல்லது டாலர் செலவாக வேண்டிய இடத்தில் நீங்கள் ஒரு பவுண்ட் அல்லது டாலர் மிச்சப்படுத்தினால், மிச்சப்படுத்திய அந்த ஒரு பவுண்டுக்காகவும் மிகுந்த குஷி இருக்கும். எனவே தனது எண்ணங்களின் மீது கட்டுப்படுத்தும் சக்தியை கொண்டிருங்கள். விருப்பப்படவில்லை, புரிந்தும் இருக்கிறேன் இருந்தும் என்ன செய்வது நடந்துவிடுகிறது ... எனச் சொல்லாதீர்கள். நடந்துவிடுகிறது என்று சொல்பவர் யார்? அதிகாரியா அல்லது அடிமையா? அதிகாரி என்றால் எல்லாம் அவர் கட்டுப்பாட்டில் இருக்கும் இல்லையா. ஒருகால் அதிகாரியையும் ஏமாற்றிவிடுகிறது என்றால் அவர் அதிகாரியா என்ன? எனவே கண்ட்ரோலிங் பவர் இருக்கிறதா என செக் பண்ணுங்கள். ஒன்று மிச்சப்படுத்துங்கள், வீணானவைகளுக்குப் பதிலாக சிறந்தவைகளின் கணக்கில் சேர்த்து வையுங்கள் இரண்டாவது ஒருவேளை மிச்சப்படுத்த முடியவில்லை என்றால் வீண் எண்ணத்தை சக்திமிக்கதாக மாற்றி விடுங்கள். ஒருவேளை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் மாற்றிவிடவாவது முடியுமல்லவா? அதன் வேகத்தை உடனடியாக மாற்ற வேண்டும். இல்லையென்றால் பழக்கமாகிவிடும். ஒருமணிநேரம் செக் பண்ணினாலும் ஒரு மணி நேரத்திலும் 5 – 10 நிமிடங்கள் வீண் எண்ணங்கள் ஓடியதை பார்த்தீர்கள் என்றால் அந்த 5 நிமிடமும் 'வேஸ்டில்' இருந்து 'பெஸ்டில்' சேர்ந்துவிட்டிருந்தால் 12 மணி நேரத்தில் 5 – 5 நிமிடங்கள்கூட எத்தனை ஆகிவிடும். அப்போது குஷி எவ்வளவு இருக்கும்? மேலும் எந்த அளவு சிறந்த எண்ணங்களின் கணக்கில் சேமிப்பாகிறதோ அது தக்க சமயத்தில் சேர்த்து வைத்த பொக்கிஷம் காரியத்திற்கு பயன்படும். இல்லையென்றால் எப்படி ஸ்தூல செல்வத்தை ஒருவேளை சேர்த்து வைக்க வில்லை என்றால் தக்க சமயத்தில் ஏமாற்றமடைய வேண்டியிருக்கிறது. அதேபோல இங்கும் எப்போது ஏதாவது பெரிய பரீட்சை வந்துவிடுகிறதோ அப்போது மனம் மற்றும் புத்தி வெறுமையாகத் தோன்றுகிறது, சக்தியாக இருப்பதில்லை. அப்போது என்ன செய்வது? சேர்த்து வைக்க கற்றுக்கொள்ளுங்கள். 25.3.95

**129.** அனைத்திலும் நம்பர் ஒன்னாக இருப்பது காமம், கடைசியல் இருப்பது மோகம். எனினும் எந்த விகாரம் வந்தாலும் அது முதலில் எண்ணத்தில் வருகிறது. வீண் எண்ணங்கள் கோபத்தையும் வரச் செய்கிறது, காமம் அதாவது வீண் பார்வை, எந்த ஆத்மாமீதாவது வீண் பார்வை போகிறதென்றால் அந்த நேரம் பவித்திரமாக இருப்பதாக ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இந்த வீண் எண்ணத்தை பாபாவின் அன்பிற்குப் பின்னால் ஏன் பலியிடக்கூடாது? செய்ய முடியுமா? (செய்கிறோம்) செய்கிறோம் என்று சொல்வது மிக எளிது. எனினும் பாப்தாதாவிடம் அனைவருடைய சார்ட் இருக்கிறது. இதுவரை எந்த விகாரமாக இருந்தாலும் சரி, ஐந்து விகாரங்களுடைய வீண் எண்ணங்கள் மெஜாரிட்டி குழந்தைகளிடம் வந்துகொண்டிருக்கிறது. ஞானி ஆத்மாக்களிடம் தனது குணத்தினுடைய, தனது விசேசத்தினுடைய அபிமானம் இருக்கிறது அல்லது எவ்வளவு மேலே போகிறார்களோ அவ்வளவு தன்னிடமுள்ள ஏதாவது குறையை பார்த்து, குறை தன்னுடைய முயற்சியைக் குறித்து அல்ல, ஆனால்

பெயரில், மானத்தில், மரியாதையில், தன்னைக் குறித்து கேட்பதில், முன்னால் கொண்டு வருவதில், சென்டர் இன்சார்ஜ் ஆக்குவதில், சேவையில், விசேச பார்ட் தருவதில் உள்ள குறை, அதனால் இது ஏன், இது என்ன, இப்படி நடக்கக்கூடாதே, இப்படித்தானே நடக்க வேண்டும் ... என எண்ணங்கள் வருகின்றன. பொதுவான விசயத்தை பாப்தாதா சொல்கிறார். இந்த வீண் எண்ணங்களும் விசேசமான ஞானி ஆத்மாக்களுக்கு மிகுந்த நஷ்டத்தை தருகிறது. மேலும் இந்த நாட்களில் இந்த இரண்டுதான் விசேசமாக வீண் எண்ணங்களுக்கு ஆதாரமாக இருக்கிறது. எனவே நீங்கள் எப்போது சேவை செய்ய செல்கிறீர்களோ அப்போது ஒருநாளின் தினசரி நடவடிக்கைகளை குறித்து வையுங்கள் மேலும் செக் பண்ணுங்கள். அதாவது ஒரு நாளில் இந்த இரண்டில், ஒன்று அபிமானம் அல்லது அவமானத்திற்கு ஆளாகி எனக்கு ஏன் குறைவு, எனக்கும் இந்த பதவி வேண்டும், என்னையும் முன்னால் வைக்க வேண்டும் என சொல்லும்போது, இவைகள் கிடைக்காமல் இருப்பதை அவமானமாகக் கருதுகிறீர்கள் அல்லவா. எனவே இந்த இரண்டு விசயங்கள் **அபிமானம்** மற்றும் **அவமானம்** – இந்த இரண்டுதான் தற்கால வீண் எண்ணங்களுக்கு காரணமாக இருக்கிறது. 7.11.95

**130.** பிறவி எடுத்ததில் இருந்து இப்போதுவரை இதைச் செய்வேன் இதைச் செய்வேன் என எத்தனை முறை எண்ணங்களை செய்திருப்பீர்கள் ஆனால் அவைகளை நிறைவேற்றவில்லை. மிக அருமையாக உரையாடுகிறீர்கள், பாப்தாதாவையும் சந்தோஷப்படுத்தி விடுகிறீர்கள். எப்படி மனிதர்களை பிரபாவப்படுத்துகிறீர்கள் அல்லவா, அதேபோல பாப்தாதாவையும் பிரபாவப்படுத்தி விடுகிறீர்கள் ஆனால் உறுதியான எண்ணங்களின் பிரபாவம் கொஞ்ச நேரத்திற்கு இருக்கிறது, எப்போதும் இருப்பதில்லை. 18.1.98

**131.** மெஜாரிட்டி குழந்தைகளிடம் 'லீக்கேஜ' இருப்பதை பாப்தாதா பார்த்தார், 'லீக்கேஜ்' ஆகக்கூடிய காரணத்தால் சக்திகள் குறைந்துபோய்விடுகிறது மேலும் லீக்கேஜ் விசேசமாக இரண்டு விசயத்தைப் பற்றியது – அந்த இரண்டு விசயங்கள் **எண்ணம்** மற்றும் **நேரம்** வீணாகப் போகிறது. கெட்டுப்போகவில்லை ஆனால் வீணாகிறது, நேரத்தின்படி கெட்ட காரியத்தை செய்யவில்லை ஆனால் சேமித்து வைக்கவும் இல்லை. இன்று கெட்டது எதையும் செய்யவில்லை என்பதை மட்டும் பார்க்கிறீர்கள் ஆனால் நல்லது செய்தீர்களா சேர்த்து வைத்தீர்களா? இழக்கவில்லை ஆனால் சம்பாதித்தீர்களா? துக்கம் கொடுக்கவில்லை ஆனால் எத்தனை பேருக்கு சுகம் கொடுத்தீர்கள்? யாருடைய அமைதியையும் கெடுக்கவில்லை, அமைதியின் அதிர்வலைகளை எவ்வளவு பரப்பினீர்கள்? அமைதியின் தூதுவராகி வாயுமண்டலத்தின் மூலமாக, அல்லது வார்த்தையின் மூலமாக அல்லது அதிர்வலைகள் மூலமாக அமைதி எத்தனை பேருக்கு கொடுத்தீர்கள்? ஏனென்றால் இந்த குறைவான புருஷோத்தம கல்யாணகாரி நேரம்தான் சேர்த்து வைப்பதற்கான நேரம் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை. இது ஒவ்வொரு நிமிடமும் நினைவில் இருக்க வேண்டும். சரியாகிவிடும், செய்துவிடுவோம் என்றெல்லாம் நினைக்காதீர்கள், இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை. பிரம்மா பாபாவிற்கு இந்த தீவிரவேகத்தின் முயற்சி இருந்தது அதனால் தான் நம்பர் ஒன் என்ற இலக்கை அடைந்தார். 18.1.06

**132.** மெஜாரிட்டி குழந்தைகளிடம் அவ்வப்போது வீண் எண்ணங்கள் மிக அதிகமாக ஓடுவதை தற்காலத்தில் பாப்தாதா பார்க்கிறார், இவற்றில் தான் சேர்த்து வைத்திருந்த சக்திகள் எல்லாம் வீணாகப் போய்விடுகிறது. எனவே சுப சிந்தனைக்கு, சுயமரியாதையின் ஏதாவது ஒரு பட்டத்தை மனதிற்கு 'ஹோம் வொர்க்' கொடுங்கள், மனதிற்கு 'டைம்டேபில் போடுங்கள், கர்மத்திற்கு 'டைம்டேபில்' போடுகிறீர்கள் எனினும் மனதிற்கு 'டைம்டேபில் போடுங்கள". அமிர்தவேளை சந்திப்பை கொண்டாடிய பிறகு மனதிற்கு சுயமரியாதை கொடுங்கள், எப்படி ஏற்கனவே சொன்னபடி 12–13 முறை அனைவருக்கும் நேரம் கிடைக்கிறது, அப்போது உணரவும் செய்யுங்கள், ரிவைசும் செய்யுங்கள் அப்போது மனம் பிஸியாக இருப்பதால் வீண் எண்ணங்களில் மனம் போகாது, முயற்சி செய்யவேண்டி இருக்காது, ஒவ்வொரு நேரமும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நேரம் சங்கமயுகம், அந்த

மகிழ்ச்சியில் இருப்பீர்கள். இரண்டாவது – சுப சிந்தனை. செக் பண்ணி சேஞ் பண்ணுங்கள். மூன்றாவது – சுப உணர்வு. அசுப உணர்வு வாயுமண்டலமும் அசுத்தத்தை பரப்புகிறது எனவே சுப உணர்வு வையுங்கள். மேலும் நான்காவது சுபமான வாயுமண்டலத்தை உருவாக்குவது என்னுடைய வேலை, குறிப்பாக என்னுடைய வேலை, மற்றவரைப் பார்க்கக்கூடாது, ஒவ்வொருவரும் இந்த பொறுப்பேற்க வேண்டும். அதாவது எப்படி எப்போதாவது வாயுமண்டலத்தில் துர்நாற்றம் வீசினால் அப்போது என்ன செய்கிறீர்கள்? நறுமணத்தைப் பரப்புகிறீர்கள் அல்லவா! துர்நாற்றத்தை சகிக்க முடிவதில்லை, ஏதாவது ஒரு நறுமணம் தரும் சாதனத்தை உபயோகிக்கிறீர்கள், அதேபோல சாதாரண வாயுமண்டலத்தை அல்லது அசுப வாயுமண்டலத்தை மாற்றியே தீரவேண்டும். சிரியவர்களாக இருந்தாலும் சரி, புதியவர்களாக இருந்தாலும் சரி, இது அனைவரின் பொறுப்பாக இருக்கிறது. நான் சுப வாயுமண்டலத்தை உருவாக்கியே தீரவேண்டும் என்ற உறுதியான எண்ணம் கொள்ள வேண்டும். இந்த உறுதிமொழி பிரத்தியட்சம் செய்யும். உறுதிமொழி கொடுக்கிறீர்கள், பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார்கள், ஆனால் அந்த உறுதிமொழியில் அவ்வப்போது உறுதி இல்லாமல் போய்விடுகிறது எனவே நீங்கள் விரும்பும் வெற்றி எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு இருப்பதில்லை. முழு உலகை, இயற்கையை, ஆத்மாக்களை, ஆத்மாக்களில் பிராமண ஆத்மாக்களும் வந்துவிடுகிறார்கள், ஒவ்வொருவரும் தனது சேவைநிலையத்தில் அப்படிப்பட்ட வாயுமண்டலத்தை மன உறுதியோடு உருவாக்குங்கள், கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டும் என்றால் செய்யுங்கள், அடுத்தவர் தியாகம் செய்தால் நானும் செய்வேன் என்பது கூடாது. ‘சிஸ்டம்’ சரியாகும் போது … போது போது எனச் சொல்லாதீர்கள். நான் செய்தேயாக வேண்டும். உலகை மாற்றுபவர் என்பது உங்கள் சுயமரியாதை அல்லவா! எல்லோரும் உலகை மாற்றுபவர்கள்தான் இல்லையா! 18.1.2009

**133.** இப்போது நேரம் நெருங்கி வந்துகொண்டிருக்கக்கூடிய காரணத்தால் பாப்தாதா இப்போது இந்த ஜாடை காட்டுகிறார் அதாவது நேரம் நெருங்கி வருவதற்குத் தக்கபடி வீண் எண்ணங்கள் வருவதும் அபவித்திரத்தின் அடையாளமாக இருக்கிறது. ஏதாவது அபிமான அல்லது அவமானமான வீண் எண்ணங்கள் தன்பக்கம் இழுக்கவில்லைதானே என்பதை செக் பண்ணுங்கள். ஏனென்றால் போகப்போக ஒருவேளை பாபாவினால் கொடுக்கப்பட்ட விசேசங்களை தன்னுடைய விசேசங்களாக புரிந்துகொண்டு அபிமானத்திற்கு ஆளானால் அதுவும் வீண் எண்ணங்களாகவே இருக்கிறது மேலும் ‘எனது’ என்ற அசுப எண்ணத்தில் நான் குறைந்தவன் அல்ல, எனக்கும் எல்லாம் தெரியும், இந்த என்னுடைய எண்ணமே சரியானது, உயர்ந்தது, இந்த எனது என்ற அபிமானத்தின் எண்ணம்கூட சூட்சும அபவித்திரத்தின் அம்சமாக இருக்கிறது. எனவே எந்தவிதமான அபவித்திர வீண் எண்ணங்களின் அம்சம்கூட மிச்சமில்லையே? என தன்னை செக் பண்ணுங்கள். ஏனென்றால் இப்போது பரமாத்மாவின் அன்பான குழந்தைகள் நீங்களே பவித்திர உலகை உருவாக்கும் நேரத்தை அருகில் கொண்டுவருவதற்கு நிமித்தமாக இருக்கிறீர்கள். எனவே யார் நிமித்த ஆத்மாக்களோ அவர்களுடைய அதிர்வலைகள் நாலாபுறமும் பரவுகிறது. எனவே எந்தவிதமான வீண் எண்ணங்களும் தன் பக்கம் உங்களை இழுக்கவில்லையா? என செக் பண்ணுங்கள். ஏனென்றால் இப்போது பவித்திர உலகம், பவித்திர ராஜ்ஜியம் சமீபத்தில் வந்துகொண்டிருக்கிறது. துக்கம் மற்றும் அசாந்தி நாலாபுறமும் விதவிதமான சொரூபத்தில் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. அதற்காக பவித்திரத்தின் அதிர்வலைகள் அவசியமாக இருக்கிறது. துக்க அசாந்திக்கான காரணம் அபவித்திரம். எனவே அபவித்திர ஆத்மாக்களுக்கு மற்றும் பக்த ஆத்மாக்களுக்கு இப்போது ‘டபுள்’ சேவை தேவைப்படுகிறது. வார்த்தையினுடைய சேவையை பாப்தாதா அவர்கள் பார்த்தார்கள் அது நாலாபுறமும் ‘தாம்–தூம்’ என்று நடந்துகொண்டிருக்கிறது, அவர்களுடைய குறைகளையும் போக்குகிறீர்கள். ஆனால் இப்போது ஆத்மாக்களுக்கு எக்ஸ்ட்ரா ‘சகாஷ்’ தேவைப்படுகிறது. அதற்கு மனசேவை மூலமாக சகாஷ் கொடுப்பது, தைரியம் கொடுப்பது, ஊக்க உற்சாகம் கொடுப்பது ஆகியவற்றைச் செய்ய வேண்டும். எனவே இந்த நேரம் டபுள் சேவை அவசியமாக இருக்கிறது. இதற்காக ஒவ்வொரு குழந்தையும் தன்னை பூர்வீக ஆத்மா என உணரவேண்டும் என பாப்தாதா சொல்கிறார். இந்த கல்ப மரத்தின் வேராக இருக்கும் பூர்வீக மற்றும் பூஜைக்குரிய ஆத்மாக்கள் நீங்கள்தான். பாப்தாதா துக்கப்படும்

குழந்தைகளின் சப்தத்தை கேட்டுக்கொண்டு இருக்கிறார். குழந்தைகள் உங்களிடம் அவர்களுடைய புகார் செய்யும் சப்தம் வந்து சேரவேண்டும். எந்த அளவு சம்பூரண பவித்திர ஆத்மா ஆகியிருக்கிறீர்கள். ஆகிக்கொண்டிருக்கிறீர்கள், ஆகியும் இருக்கிறீர்கள் எனினும் கூடவே இப்போது மனசேவையை அதிகப்படுத்துங்கள். 15.3.10

**134.** இன்றைய உலகின் கணக்குப்படி விசயங்கள் நிறைய மாறிக்கொண்டே இருக்கிறது. அரசாங்கத்தின் சட்டங்களும் மாற வேண்டும், மனிதர்களுடைய உணர்வும் மாற வேண்டும். இதற்காக ஒவ்வொருவருடைய வாழ்விலும் விசயங்கள் வந்தேயாக வேண்டும், வீண் விசயங்கள் வந்தால் அவைகளை அழிப்பதற்கு சக்திமிக்க எண்ணங்கள் தேவை. 'வேஸ்ட்' எண்ணங்களை அழிப்பதற்கு 'பெஸ்ட்' எண்ணங்கள் தேவைப்படுகிறது. அது தினந்தோறும் நீங்கள் கேட்கும் வரதானம். வரதானம் எதுவோ அது சிறந்த எண்ணங்களாக இருக்கிறது. எப்போது வீணானவைகள் வருகிறதோ அப்போது மனதிற்கு சிறந்த எண்ணங்கள் தேவைப்படுகிறது. மனம் காலியாக இருக்க முடியாது. மனதிற்கு ஏதாவது எண்ணங்கள் தேவைப்படுகிறது. எனவே வீணானவைகளை பெஸ்ட் ஆக்குவதற்காக உங்களுக்கு இந்த வரதானம், சுலோகன் மற்றும் இப்படிப்பட்ட வார்த்தைகள் மனதை மாற்றுவதற்காக தேவைப்படுகிறது. 15.3.10

ஓம்சாந்தி